www.padippakam.com

# "நினைவுத் திசை"



## திருமதி பிலோமினா லோறன்ஸ் எனும் உடைக்க முடியாத விம்பத்திலிருந்து உயிர்த்தெழும் நினைவுகள்

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com



# நினைவு நிகழ்வு

# திருமதி பிலோமினா லோறன்ஸ்

தோற்றம்
01.06.1939



மறைவு
17.07.2012

1

**'நினைவின் யாத்திரை' ஒளிப்படத் தொகுப்பு வெளியீடு**

**&**

**'நினைவுத் திசை' நூல் வெளியீடு**

**07 ஐப்பசி 2012, ஞாயிறு**

காலம்: பிப 3:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை

இடம்: SALLE SAINT BRUNO

9, Rue Saint Bruno - 75018 Paris

(La Chapelle லில் அமைந்துள்ள தேவாலயத்திற்கு அருகில்)

மெற்றோ: La Chapelle

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!!**

தொடர்புகளுக்கு: 0033 148 49 77 89

0033 660 44 65 08

www.padippakam.com



# நினைவுக் குறிப்புகள்.....

அம்மாவின் தடங்களிலிருந்து..... (03)

அரசியல் வாழ்வின் நினைவுகள்: (14)

மங்கையற்கரசி அமர்தலிங்கம் (15), இரா சம்பந்தன் (17), வீ ஆனந்தசங்கரி (18), ஞா ஞானசேகரன் 20), த சித்தார்த்தன் (22), தி சிறீதரன் (24), செ சந்திரகாசன் (26), இரா துரைரத்திணம் (28), வீர சுப்பிரமணியம் (30), சி தண்டாயுதபாணி (34), ஐ தி சம்பந்தன் (37), சே சிறீஸ்கந்தராஜா (37), ச செல்வராசா (38), கண்மணி இரத்தினவடிவேல் (39), பொன் சத்தியசீலன் (40), ஆ ரகுபதி பாலசிறீதரன் (41), சி சூ, (42) அ வரதராஜப் பெருமாள் (43), கி.பிரான்ஸிஸ் (45), அன்னலிங்கம் ஐயா (47), வேதநாயகம் ஜோசப்பின் (குலம்அக்கா) (48), தங்க மகேந்திரன் (50), சி புஸ்பராணி (52), செ ரவீந்திரன் (54), நீ கந்தசாமி (56), திலகவதி பரராஜசிங்கம் (59), ஆ ஜதீந்திரா (60), ச வி கிருபாகரன் (63), வீ ராம்ராஜ் (64), வி சிவலிங்கம் (66)

காந்தீய வாழ்வின் நினைவுகள்: (68)

ச அ டேவிட் ஐயா (69), பொ காந்தீ ஐயா (70), த கிருபாகரன் (71), செ விபுனசேகரம் (73)

ஆன்மீக வாழ்வின் நினைவுகள்: (75)

அதி வணக்கத்திறகுரிய கிங்ஸிலி சுவாமிப்பிள்ளை (76), வணக்கத்திற்குரிய ஜோர்ச் திசநாயக்கா (78), வின்சன் டிபோல் சபை அங்கத்தவர்கள் (79)

உறவுப்பாலம் அமைத்த நட்புகளின் நினைவுகள்: (80)

ச அருளானந்தம் (81), ப சுஜந்தன் (84), க சுமன் (87), அ சுலக்ஸிக்கா (89), செ அருட்பிரகாசம் (92), வி காந்தீபன் (93), வை லோகநாதன் (94) ந அனோஜா (96) ,கு கனகசிங்கம் (97)

ரத்த உறவுகளின் நினைவுகள்: (98)

அன்ரனி சவரிமுத்து லோறன்ஸ் (99), லோறன்ஸ் அன்ரன் ஜெராட் (101), அன்ரன் ஜெராட் மேரி ராணி (103) ,அன்ரன் ஜெராட் திவேனா (104), வி லுமினா சாந்தி (105), ஞா அன்ரன் பீலிக்ஸ் (அன்ரா) (106), அமரர் இராஜதுரை குடும்பம் (107), மா சிவபாலன் (108), கி டேவிற் குடும்பம் (110)

இறவாப் பெருவாழ்வு (111)

நன்றி நவில்கிறேன் (115)





படிப்பகம்

www.padippakam.com



# அம்மாவின் தடங்களிலிருந்து .....

*ராசாத்தி என எமது குடும்ப உறவுகளாலும் திருமதி. பிலோமினா லோறன்ஸ் என்ற தடயத்தை இலங்கை தமிழ் பேசும் மக்களிற்கும் எமது சமூகத்திற்கும் விட்டுச்சென்ற என் அன்னையே! உங்களைப் பற்றி இவ்வளவு விரைவில் நான் கல்வெட்டு பதிவேனென்று என்னால் இந்த நிமிடம் வரை உள்மனதால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.*

*17.07.12 அன்று காலைவரை 'அம்மா நான் இன்னும் 48 மணித்தியாலத்தில் உங்களை என்னுடன் அழைத்துச் செல்ல வருவேன்' என உங்களுடன் கடைசி வார்த்தை பேசியதைவிட காலன் வேகமாய் வந்து உங்கள் உயிரை அந்த அந்திசாயும் நேரத்தில் அகாலமாய் எம்மிடமிருந்து பறித்த செய்தியை இந்நிமிடம் வரை எம்மால் நம்பமுடியவில்லை.*



*உங்களை உங்கள் கணவரோ, உங்கள் பிள்ளைகளாகிய நாங்களோ, மருமக்கள், பேரப்பிள்ளைகளோ இழந்துவிட்டோம் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல்தான் இன்னும் உள்ளது. ஏனெனில் நீங்கள் இன்னும் நீங்கள் நேசித்த உங்கள் மண்ணில் அதே உங்கள் வீட்டில் வாழ்வதாகத்தான் நாம் எம்மை சமாதானப்படுத்திக்கொள்கின்றோம் அம்மா!*

எனது தாயாராகிய திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் மறைந்த செல்லத்துரை செபஸ்தியாம்பிள்ளை என்பவருக்கும் செல்லமுத்து அருளம்மா என்பவருக்கும் பத்து பிள்ளைகளில் ஐந்தாங்கால் பெண்பிள்ளையாக யாழ்நகர் பெரிய மாதங்கோவில் அருகேயுள்ள தாயாரின் வீட்டில் செல்வச் சீரோடு பிறந்தார், ஆயினும் அம்மாவின் தந்தையினுடைய அகாலமரணத்தின் பின் ஏற்பட்ட பல இழப்புக்கள், சோகங்களினூடு தந்தையின் உறவினரின் அடைக்கலத்தில் நல்லூர் நாவலர் வீதியிலுள்ள வீட்டில் இந்துகலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டாலும் இளம் பருவ வயது வந்த நிலையில் தந்தையின் ஓய்வூதிய பணத்தில் இளவாலை கன்னியாஸ்திரிகள் விடுதியில் அம்மாவின் இளமைக்கால கல்வியை தொடர்ந்தார். அங்குள்ள மேல்நாட்டு கன்னியாஸ்திரிகளின் துறவறவாழ்வின் ஈடுபாட்டின் நிமித்தம் இளமைக்கால கல்வியையும், தாதியார் பயிற்சியையும் முடித்தநிலையில் ஒரு கன்னியாஸ்திரியின் தெரிவிற்கான பல படிகளையும் தாண்டி அதற்கான ஆரம்ப உடைகளையும்

www.padippakam.com



பரீட்சார்த்தமாக பெற்றிருந்தார்.

இந்நிலையில் அம்மாவின் மூத்த ஆண் சகோதரர்கள் இந்த விடயம் கேள்விப்பட்டு வலுக்கட்டாயமாக அம்மாவை இந்த கன்னியாஸ்திரிகள் விடுதியிலிருந்து அம்மாவின் விருப்பத்திற்கு மாறாக அழைத்துச் சென்றனர். அம்மாவின் 18 வயது பூர்த்தியாகாததால் இது சாத்தியமானது.

அந்நிலையில் கன்னியாஸ்திரி சபையின் தலைமையானவர் 'பிலோமினா உங்களுக்கு தேவ அழைத்தல் இருந்தால் மீண்டும் இங்கு திரும்பி வருவீர்கள் அல்லது இறைவன் உங்களை உங்கள் சமூகத்திற்காக ஏதோ ஒரு காரியத்திற்காக தெரிவு செய்துள்ளார். ஆகவே உங்கள் சகோதரருடன் சென்று தேவ அழைத்தல் இருந்தால் திரும்புங்கள்' என வழியனுப்பி வைத்ததையும், பிற்காலத்தில் அந்த தலைமை கன்னியாஸ்திரியின் நினைவாகத்தான் அம்மாவின் முதல் கருவில் உருவாகிய எனக்கு அவரின் பெயரான 'லொறன்ரீனா' என்ற பெயரையும் இட்டு அம்மாவின் கனவுகளின் களமாக என்னை வளர்த்ததாக அம்மா குறிப்பிடுவார்.

அம்மாவை தங்கள் பொறுப்பில் கிளிநொச்சி வீட்டிற்கு அழைத்து வந்த சகோதரர்கள் தமது தகுதிக்கேற்ற நிலையில் திருமலையிலிருந்த அம்மாவின் சகோதரியின் கணவரின் நண்பராகவும், திருமலை கடற்படையில் சாரதியாக வேலைபார்த்த அன்ரனி சவரிமுத்து லோறன்ஸ் என்பவரை அம்மாவின் உடன்பாட்டின்படி 01.10.59ல் கிளிநொச்சியில் திருமணம் முடித்து வைத்தார்கள். இந்நிலையில் எனது தாயார் தனது கணவனுடன் சேர்ந்து திருகோணமலையில் கால் பதித்தார்கள்.



1958 இனக்கலவரத்திற்கு பின்னான காலகட்டங்களில் பௌத்த இனவாத இலங்கை அரசால், இலங்கை அரசியலில் தமிழ்பேசும் மக்களின் நிலைமைகள் சகலவிதத்திலும் கேள்விக்குறியானது. இந்நிலையில் சிறி எதிர்ப்பு போராட்டங்கள், சிங்கள மொழித்திணித்தலை நிராகரித்தல், சத்தியாக்கிரக போராட்டங்கள் என தமிழ் தலைமைகளும், அதன் தீவிர ஆதரவாளர்களும் சிறைசெல்லல் என்பதுவரை வடகிழக்கில் தமிழ் மக்களின் அரசியல் மாற்றம் மக்களுடாக பரிமாணம் பெற்றது. இந்த ஈடுபாடுகளில் என் தந்தை திருமலையில் இளைஞராய் இருந்த காலம் முதல் ஆரம்பத்தில் இடதுசாரி சிந்தனைகளோடும் பின் தீவிர தமிழரசுக் கட்சி தொண்டராகவும் இருந்தார். எனது தாயாரை திருமணம் முடித்த 1959 - 1960 களில் அதே ஈடுபாடு அம்மாவையும் அரசியலை நோக்கி மெல்ல மெல்லவாக இழுத்து விட்டிருந்தது. இந்த காலத்தில் அரசு உத்தியோகஸ்தர், மற்றும் பொலிஸ், கடற்படை, ராணுவத்திலிருந்தோருக்கு சிங்களமொழி கட்டாயமாக திணிக்கப்பட்டது. இந்நிலையில் திருமலை கடற்படை சாரதியாக வேலை பார்த்த எனது தந்தை, சிங்களம் நன்றாகப் பேசத்தெரிந்திருந்தும், இந்த சிங்கள மொழிச் சட்டத்தை நிராகரித்து தனது உத்தியோகத்தை ராஜினாமாச் செய்தார். திருமணமாகி ஒருவருடமும் ஆகாத நிலையிலும் எனது தாயாருக்கு நான் கருவாக உருவாகிய நிலையிலும்,



படிப்பகம்

www.padippakam.com



இனியும் யாருக்குக் கீழும் வேலை பார்ப்பதில்லை என்ற அப்பாவின் முடிவாலும் சொந்தமாக ஒரு டாக்ஸி வாங்கி வேலை பார்த்தார்.

அன்று இந்த '௨ சிறி ௬௯௯0' என்ற டாக்ஸிதான் திருமலைக்கு வந்த ௨வது தனியார் வாகனம் என அப்பா அடிக்கடி கூறுவார். இதே டாக்ஸியின் சுயமான தொழிலும், டாக்ஸியும் தான் எனது பெற்றோரின் அரசியல் பயணத்தில் ஒரு பெரும் ஊக்கியாக இருந்ததென இப்போது உணர்கின்றேன். ஏனெனில் எமது பெற்றோர் குடும்பமாகவே அரசியல் பண்ணும் போது 3 குழந்தைகளாக அடுத்தடுத்து பிறந்து வளர்ந்த நாங்கள் இன்னொரு வீடாக இந்த டாக்ஸியில்தான் எமது பாலப் பருவங்களில் உணவு உறை விடம் என அதிகமாக கழித்துள்ளோம். ஏனெனில் எனது தாயார் வீடுவீடாக பல பெண்களையும் வழி நடத்திச்சென்று அரசியல் பிரச்சாரங்கள் செய்து, மேடை மேடையாக ஒரேநாளில் பல மேடைகளில் சொற்பொழிவாற்றி, வீதிப்போராட்டங்களில் கலந்து கொள்ளும்போதெல்லாம் பிள்ளைகளான எமது உறைவிடம் இந்த வாகனம் தானே.

இலங்கையில் இனவாதங்களின் முரண்பாடு பாராளுமன்ற போட்டிகளுடன் நகர்ந்ததோடு தேசிய வாதங்களின் போக்கோடு ஜனநாயகம் என்ற போர்வையில் பாராளுமன்ற அரசியலே ஒரே வழியென எமது மிதவாத தமிழ்தலைமைகளால் பிரச்சாரப்படுத்தப்பட்டு இதுவே மக்கள் போராட்டம் என சொல்லப்பட்டது. இதனால் முரண்பட்டு 1970, 1971ற்கு பின் இதே தமிழரசுக் கட்சியில் வளர்ந்த, வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டு தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, தமிழீழ விடுதலை இயக்கம் என இளைஞர் அமைப்புக்கள் ஒரு பகுதி ஆயுதப் போராட்டத்தையும் மறுபகுதி மக்கள் போராட்டத்தையும் கையிலெடுக்கையில் எனது தாயாரின் நிலையும் தர்ம சங்கடமானது. 1961ற்கு பிற்பட்ட காலங்களிலிருந்து அறவழிப் போராட்டங்களிலேயே பங்குபற்றி அதை வழிநடாத்தி, அதையே பிரச்சாரபடுத்திய அவருக்கு தமது அறவழிப் போராட்டத்தினூடு வளர்ந்த இளைஞர்கள் பராளுமன்றங்களை மெல்ல மெல்ல நிராகரித்து பலகோணங்களாக பிரிந்து அரசியலை முன்னெடுத்தாலும் எல்லாத்தரப்பு இளைஞர்கள் யுவதிகளோடும் நல்ல புரிந்துணர்வும் தொடர்ந்து கொண்டே இருந்தது. என்றும் அறவழிப்போராட்டத்தை நம்பியிருந்தாலும் தமிழ் பேசும் மக்களின் விடுதலை மிதவாக்குபோக்கை மட்டும் நம்பியிருக்கவில்லை எனவே பரிமாணவளர்ச்சியின் அடிப்படையில் இளைஞர்களின் அத்தனை உத்வேகங்களுக்கும் முயற்சிகளுக்கும் எல்லா ஆதரவையும் கொடுத்திருந்தார். அதிலும் மக்கள் போராட்டத்தை மையப்படுத்திய அன்னலிங்கம் ஐயா, வரதராஜப்பெருமாள், புஸ்பராஜா, பிரான்சிஸ், சந்ததியார், தங்கமகேந்திரன், பத்மநாபா போன்றோரின் உறைவிடமாக திருமலையில் எமது வீடே இருந்தது. அதுபோல் கொழும்புக்கிளை தமிழ் இளைஞர் பேரவை தலைவர் ரகுபதிபாலசிறீதரன், செயலாளர் உமாமகேஸ்வரன் போன்ற இளைஞர்கள் மத்தியிலும் மகளிர் பேரவை தலைவி திலகவதி, செயலாளர் ஊர்மிளா உட்பட்ட தீவிரமான இளம் தலை

www.padippakam.com



முறையினருடனும் உடன்பாடு முரண்பாடுகளுடன் தொடர்புகளை பேணிவந்தார்.

மொத்தத்தில் தமிழரசுகட்சி, பின் உருவான தமிழர் விடுதலைக்கூட்டணி என்பவற்றில் முக்கிய பொறுப்புக்களிலிருந்ததாலும், உள்ளே முரண்பாடுகள் வந்தாலும் வெளியே முரண்பாடுகளை காட்டிக்கொள்ளாமல் இந்த இருதலைமுறை அரசியல் முரண்பாடுகளிற்கிடையே நின்று இருதலைக் கொள்ளி எறும்பாக செயற்பட்டதை இன்று என்னால் உணர முடிகின்றது. அம்மா வெறும் மிதவாத அரசியல்களில் பங்கெடுத்ததோடு நில்லாமல், 1965-1967 பகுதிகளில் இலங்கையரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை கவனத்தில் கொண்டு திரு.வீரசுப்பிரமணியம், மறைந்த திரு. ஈழத்துநாதன், அம்மா போன்ற திருமலை தமிழரசுக்கட்சி செயற்குழு உறுப்பினர்களும் இன்னும் குறிப்பிடத்தக்க இளைஞர்களுமாக சில பகுதி காடுகளை வெட்டி தமிழ் குடியேற்றங்களை செய்தனர் இதில் குறிப்பிடத்தக்கதாக திருமலை நகரை அண்டிய 'உவர்மலை', பன்குளவீதியில் பத்தாம் மைலில் அமைந்த 'கித்துலூற்று' பான்ற பல இடங்களில் குடியேற்றங்களை செயற்படுத்தினர். இந்த வேலைத்திட்டத்திற்கு உதவி யாக அன்று துடிப்பான இளைஞர்களாக இருந்த தந்தையின் மகன் திரு.சந்திரகாசன், திரு.மாவை சேனாதிராஜா உட்பட்ட பல இளைஞர்கள் பங்குபற்றினார்கள். 1983 இனக்கலவரம் வரும்வரை 'கித்துலூற்று' குடியேற்றத்தில் மலையக மக்கள் இருபோக விவசாயத்துடன் தன்னிறைவாக வாழந்தனர். எனினும் இந்த இனக்கலவரத்தில் இனத்துவேசம் மிக்க சிங்களவரால் இக் கிராமம் சூறையாடப்பட்டு, மனித உயிர்கள் கொல்லப்பட்டும் வீட்டை எரித்த நெருப்பில் 6வயது குழந்தையை உயிருடன் எரித்த வரலாறு ஒரு தனி அத்தியாயமானது.



எமது தமிழ் மக்கள் போராட்டத்தில் தமிழ் மிதவாத சக்திகளின் தலைமை 1978- 1980ற்கு பின்தமிழ் மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகியது. மக்களின் கவனமும் இளைஞர்க-ளினது தீவிரமும் இயக்க வடிவத்தை நோக்கி நகர்ந்தது. இந்த காலகட்டங்களில் தான் 1977ன் இனக்கலவரத்துடன் இடம்பெயர்ந்த மக்களுக்கான குடியேற்ற வேலைத்திட்டங்களுக்காக 'அகதிகள் புனர்வாழ்வுக்கழகம்' உருவானது. பின் அதைத்தொடர்ந்து அதன் நிர்வாகம் கைமாறி 'காந்தீயமாக' பரிணமித்தது. இந்த காந்தீயத்தின் தலைவராக திரு. டேவிட்ஐயா, செயலாளராக டொக்டர். இராஜசுந்தரம் ஆகியோர் அடிக்கட்டுமான உறுப்பினராக இருந்து செயற்படுத்தினர். இது ஆரம்பத்தில் வவுனியாவில் பலமாக விஸ்தீரிக்கப்பட்டு, தொடர்ந்து கிளிநொச்சி, 1979 கடைசியில் திருமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு சிறிய மட்டத்தில் யாழ்ப்பாணம் என விஸ்தரிக்கப்பட்டது 1978 கடைசியில் டொக்டர். இராஜசுந்தரம் அவர்களால் சந்ததியாரும் இன்னும் சில குறிப்பிடத்தக்க இளைஞர்களும் காந்தீயத்திற்குள் உள்வாங்கப்பட்டார்கள். ஏற்கனவே சந்ததியார் வடகிழக்கு மாகாணத்தில் கால் பதித்து அரசியல் வேலை செய்து தொடர்புகளை வைத்திருந்ததாலும் காந்திய கட்டுமாண வேலைகளுக்கு இது பயனளித்தது.

இந்நிலையில் 1979 கடைசியில் காந்தீயம் திருமலையில் முதல் முதலாக 'இந்து



படிப்பகம்

மாமன்றம்' மூலமும் 'கத்தோலிக்க பேராலயம்' மூலமும் பாலர் பாடசாலை வேலைத்திட்டத்தை ஆரம்பித்து அதற்கு 10 ஆசிரியரையும் பயிற்சிக்கு எடுத்தது. இதில் எமது கத்தோலிக்க பங்கின் பிரதிநிதியாக நேர்முகப்பரீட்சை மூலம் நானும் தெரிவா-னேன். இந்த 3மாத ஆசிரியர் பயிற்சி முடிந்த நிலையில் அந்த பங்கு குருவானவரின் உதவியுடன் பாடசாலை ஆரம்பிக்க ஆயத்தமானது. இந்நிலையில் 1980 தைமாதத்தில் திருமலைக்கு சந்ததியார் மூலம் டாக்டர். ராஜசுந்தரம், டேவிட்ஐயா அவர்களும் எமது வீட்டிற்கு அழைத்து வரப்பட்டு அம்மாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களின் வேண்டுதலின் பேரில் அம்மா திருமலை-மூதூர் பகுதி அனைத்திற்கும் காந்தீய பாட-சாலை மேற்பார்வையாளரானார். கடந்தகால மிதவாத அரசியல் 1978ற்கு பின் ஒரு ஆரோக்கியமான நகர்வை மேற்கொள்ள முடியாது ஸ்தம்பித்த நிலையில் பொதுவாழ்வில் நீண்டகாலம் ஈடுபட்டிருந்து மனம் சோர்ந்திருந்த எனது தாயார் தான் அரசியலில் சாதிக்க முடியாததை இந்த காந்தீய அமைப்பின் வேலைத்திட்டத்திற்கு ஊடாக மீண்டும் மக்களுக்கு ஏதாவது செய்யலாம் என்ற நிலையில் மிக தீவிரமாக செயற்பட்டார். 1980 தொடக்கத்திலிருந்து 1983 மே மாதம் காந்தீயம் இலங்கையரசால் தடைசெய்யப்படும் வரை அம்மாவின் மேற்பார்வையில் திருகோணமலை-மூதூர் அனைத்துக் கிராமங்களிலுமாக 175 பாலர் பாடசாலைகளும் கிட்டத்தட்ட 375ஆசிரியர்களும் பணியாற்றினர்.

அம்மாவின் இந்த காந்தீயப்பணிக்கு அம்மாவிற்குரிய உதவிப் பணமாக காந்தீய நிர்வாகத்தால் 500 ரூபாவும் போக்குவரத்து செலவும் கொடுக்கப்பட்டது. ஆனால் எனது தாயார் இந்த பொதுச் சேவைக்கு பணம் பெறமாட்டேன் என நிர்வாகத்திற்கு அறிவித்துவிட்டு நிர்வாகத்தின் கட்டுக்கோப்பை மதிப்பதற்காக ஒரு ரூபா மட்டும் முத்திரையில் கையொப்பம் வைத்து தனது உதவிப்பணமாக அதைப்பெற்றார். மற்றும்படி போக்குவரத்து செலவுக்கு மட்டும் அலுவலகத்தில் காசோலை கணக்கு முடித்து எடுப்பார். இந்த காந்தீய பாலர் பாடசாலையால் இந்த 175 கிராம குழந்தைகளும் நல்ல ஆரம்ப கல்வி பெற்றது மட்டுமல்லாமல் இங்கு விநியோகிக்கப்படும் பால்மா, திரிபோசா ஊட்டச்சத்தால் எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் பலன்பெற்றனர். இந்த கிராமங்களில் ஆசிரியரான கிராமத்து பெண்பிள்ளைகள் 100 ரூபா உதவிப்பணம் பெற்றாலும் தமது சுய காலில் நிற்கும் தன்மையையும், சுயநம்பிக்கையையும் சமூக விழிப்புணர்வையும் பெற்றனர். இவர்களையெல்லாம் திறம்பட வழிநடாத்தி, பால்மா, திரிபோசா விநியோகம் அதன் சுத்தம் நிர்வாக ஒழுங்குமுறை என்பவற்றில் கவனமெடுத்து எல்லாவித வேலைத் திட்டங்களையும் நேர்த்தியாக செயற்படுத்தினார். மொத்தத்தில் திருமலையில் காந்தீயத்தின் ஆணிவேராக செயற்பட்டார் என சொல்லலாம். காந்தீயத்தில் என் தாயாருக்கு முற்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர் நானாக இருந்தாலும் கிட்டத்தட்ட 3 வருடம் தொண்டர் ஆசிரியராகவும், எனது தகமையின் அடிப்படையில் நான் ஆசிரியர் பொறுப்பாளராகவும் இருந்தாலும் அம்மாவின் பாரபட்சமற்ற நிர்வாகத்தில் நானும் ஒரு சராசரி ஆசிரியர்தான் சொல்லப்போனால் என்னை நோக்கிய கெடுபடிதான் அதிகமாக இருக்கும். இந்த எனது தாயாரின் நேர்மையும், ஆளுமையையும் அன்று

www.padippakam.com



புரியமுடியாவிட்டாலும் காலப்போக்கில் அம்மாவால் எனக்கு கிடைத்த அனுபவம் எனது வாழ்க்கைக்கு பெரும் வழிகாட்டியாக அமைந்ததெனலாம்.

மேலும் காந்தீயத்தினூடாக தலைவர் திருகுகதாஸ், மறைந்த காந்தீய அமைப்பாளர் இ.ஜெயச்சந்திரன்(பார்த்தன்) போன்ற இன்னும் பல தொண்டர்களுடன் எனது தாயாரும் இணைந்து காந்தீயத்தினூடாக பல தமிழ் குடியேற்றங்களை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

1983 சித்திரை வைகாசி மாதங்களில் காந்தீய முக்கிய உறுப்பினர்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு டொக்டர்.ராஜசுந்தரம், டேவிட்ஐயா கைதாகி தலைமை அலுவலகம் உட்பட எல்லாமாவட்ட காந்தீய அலுவலகங்களும் மூடப்பட்டன. சிலசில பாடசாலை கள் அந்தந்த கிராமத்தின் கட்டுப்பாட்டில் பின் வந்ததால் சில பாடசாலைகள் இதுவரை கூட நடைபெறுகின்றது. உதாரணம் நான் முதல் ஆசிரியராக இருந்து காந்தீயத்தால் தொடங்கப்பட்ட பாலர்பாடசாலை இன்று நிர்வாகம் மாறினாலும் கத்தோலிக்க திருச்சபையின் கீழ் இந்த 32 வருடங்களாக நடைபெறுகின்றது. தற்போது இந்த பாலர்பாடசாலை ஆசிரியரான செல்வி. றொஸ்ரினா எனது தாயாருக்கு கடைசிநேரத்தில் மிக நெருக்கமாக இருந்தவரும் கடைசி தண்ணீர் அம்மாவிற்கு பருக கொடுத்தவரும் இன்று அம்மா வாழ்ந்த வீட்டில் வாழ்பவரும் ஆவர். இது கூட அம்மாவின் தானதர்மத்திற்கு ஒரு அடையாளம் என நான் உணர்கின்றேன்.



மேலும் 1983ல் கைதுசெய்யப்பட்ட டாக்டர் இராஜசுந்தரம் அவர்கள் உட்பட 53 பேர் வெலிகடை சிறையில் படுகொலைசெய்யப்பட டேவிட்ஐயா உட்பட தப்பிய நூற்றுக்கணக்கானோர் பின்பு மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து தப்பியது எமது தமிழர் வரலாறானது. இந்நிலையில் எமது ஆயுத போராட்டம் உச்சகட்டநிலை அடைந்த நிலையில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் இயக்கங்களையும் பயிற்சியையும் நோக்கி போகும் நிலையில் நானும் தேடப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் 1984 மார்ச் மாதம் எனது தாயாரும் ராணுவத்தால் கைதாகி அனுராதபுர சிறையில் ஒருவருடம் சிறைவைக்கப்பட்டார்.

இவரின் கைதிற்கு பல காரணம் சொல்லப்பட்டது. இவரின் கடந்த கால முன்னணி அரசியல், டொக்டர் அவர்களுடான காந்தீய தொடர்புகள், பிரபலமாக தேடப்பட்டோரை வீட்டில் பாதுகாத்தமை, அரசியல் காரணங்களால் தேடப்பட்ட எனதும் ஜெயச்சந்திரனினதும் பதிவுத் திருமணமும் தலைமறைவும் இப்படி ஆயிரம் காரணங்கள் சொன்னாலும் எனது தாயார் எந்த காலத்திலும் வன்முறையை ஏற்பவர்அல்ல. அவர் அகிம்சை வழியை கடைப்பிடித்தாலும் அவரை சுற்றியிருந்த பன்முகச்சூழல் அரசியல் அவரை சிறைமீண்ட பின் மிக விரக்தியில் ஆழ்த்தியது. இவர் வெளியே வரவும் எனது ஒரே சகோதரர் ராணுவத்தின் பகுதி சுற்றிவளைப்பின் போது கைதானமை, பின் ஆறுமாதத்தில் விடுபட்டாலும் அவருக்கு அன்று ஏற்பட்ட சித்திரவதைகளால் இன்றுவரையுள்ள பாதிப்பு, மொத்தத்தில் அம்மாவின்



படிப்பகம்

சிறைவாழ்க்கை எந்த பரந்த உலகத்தில் கால்பதித்து நடந்தாரோ அந்த உலகத்தையே பார்க்க முடியாமல் பல இழப்புக்களாலும் கூனிக்குறகி சிதைந்து போயிருந்தார். ஆகவே மூத்த பிள்ளையான எனது உயிரும் பல வழிகளில் ஊசலாடிக்கொண்டிருந்த நிலையில் 1985 காலத்தில் திருகோணமலை கிராமமொன்றில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து வந்து கணவனை இந்த யுத்த சூழலில் பறிகொடுத்த அன்று என் வயதொத்த மரணப்படுக்கையில் இருந்த ஒரு இளம் பெண்ணின் பெண்குழந்தையை திருச்சபையின் முன்னிலையில் எனது தாயார் பிடிவாதமாக நின்று தமது பிள்ளையாக தமதும் தனது கணவரினதும் பெயரின் பதிவிற்கே தத்தெடுத்தார். அன்றைய நிலையில் நான் வாழ்வா சாவா என போராடிய நிலையிலும், எனது சகோதரன் பூசா முகாமிலிருந்து வந்து பாதிப்படைந்த நிலையிலும், எனது தந்தையாரோ வயதான நிலையில் சரியான வருமானங்களும் இல்லாத சீவன நிலையில் அம்மா இந்த பிள்ளையை மிக ரிஸ்க் எடுத்து பொறுப்பெடுத்தார். அந்தக் குழந்தையை தத்தெடுக்கும்போது அப்பிள்ளை உயிர்தப்பும் நிலையில் இருக்கவில்லை. அந்நிலையில் தான் பலவிதத்தில் விரக்தியடைந்த நிலையிலும் அந்த ஜீவனுக்கு உயிர்கொடுத்து வளர்த்ததானது அம்மாவின் தளராத பிடிவாதத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும், அவரின் பரந்த மனத்திற்கும் உதாரணமாகும். அவரின் ஆசைக்கனவின்படி அந்த பெண்குழந்தை எம் உடன் பிறப்பாகவே வளர்ந்து 28 வயதில் இன்று திருமணமாகி அன்பான கணவனுடன் இரு குழந்தை செல்வங்களுடன் எமதருகே வாழ்கின்றார். அம்மா எங்களைச் சீராக வளர்த்ததைவிடவும் இந்த சகோதரியை சிறப்பாக செல்லமாக தனது உயிரையே சாந்தி என்ற அப்பிள்ளை மேல் வைத்து வளர்த்து நல்நிலைப்படுத்தியுள்ளார். அன்று எங்களில் பாசம் காட்ட நேரம் கிடைக்காத அன்பையெல்லாம் தனது பிற்காலத்தில் இந்த பிள்ளையின் மேல் கொட்டி சிறப்பாக வளர்த்தெடுத்தார். இந்த பாசத்தை எமது ஊரே அறியும். இந்த முழுமுதல் பயனும் அம்மாவிற்கு மட்டுமே சேரும். அம்மாவினால் மட்டுமே முடியும்.



இவ்வாறு எனது தாயார் 1986ற்கு பின்னால் இந்தக் குழந்தையுடன், ஆன்மீக வாழ்விற்குள்ளேயே சங்கமித்துவிட்டார். அங்கும் வெறும் வழிபாட்டுடன் மட்டும் நிற்காமல் மிக தீவிரமாக சகலவித தேவைகளுக்குமான சமயகல்வி படிப்பிப்பது, கோவில்களின் அனைத்து வழிபாட்டையும் முன்நின்று நடாத்துவது இந்த கோவில்களுடன் சேர்ந்து பொதுச்சேவையில் ஈடுபடுவது என ஆன்மீக பணிகளிலும்கூட காலப்போக்கில் அங்கும் எப்போதும் போல தனக்கென்று பெரியதொருவட்டத்தை உருவாக்கிவிட்டார்.

நான் எனது கணவர் ஜெயாவின் கனடாவிலுள்ள ஆண்சகோதரர்களின் உதவியுடன் வெளிநாட்டிற்கு வந்து ஒருநிலை எய்திய நிலையில் 1990 மட்டில் எனது பெற்றோரை என்னுடன் அழைத்து வைத்திருக்க எவ்வளவு கேட்டும் அவர் மறுத்த நிலையில் கடைசியாக எனது தந்தை 1996ல் இங்கு வந்தார். பின் அம்மா தனது அன்பு மகளுடன் 2003ல் இங்கு வந்தாலும் அவளை திருமணம் செய்து கொடுத்துவிட்டு இரண்டு தடவை

www.padippakam.com



நாட்டிற்கு போய் அங்கிருந்து தனிமையில் சிரமப்படுவதை நாம் உணர்ந்து திருப்பி அழைத்து வந்தாலும் கடைசியாக 2007 டிசம்பர் 31ம்திகதி தான் 2008 புதுவருட முதலாம் திகதி எனது நாட்டில் எனது சொந்த மண்ணில் நிற்கவேண்டும் என்ற பிடிவாதத்தில் தனது கணவன் பிள்ளைகளின் அன்புகட்டளைகளையும் மீறி நாங்கள் பிடிவாதமாக வழிமறித்தும் எங்களைப்பிரிந்து சென்றார் அந்தநேரம் எனது தந்தையார், தனது மனைவி தனியே சென்று கஸ்டப்படபோகிறார் என்ற வேதனையில் வழியனுப்பும், போது தனது முகத்தை மறுபக்கம் திருப்பி வழிப்பயணம் சொல்வதை மறுத்துவிட்டு, விமானநிலையத்திற்கும் வருவதை தவிர்த்துவிட்டார். நானும் பலவிதத்தில் பலநாட்கள் சொல்லிப்பார்த்தும் கேட்காமல் அம்மா அடம்பிடித்ததால் எமது எல்லா சோகத்தையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு அவரை வழியனுப்பி வைத்தோம். அங்கு சென்று முன்பை விடவும் முழுநேரமும் ஆன்மீகப்பணியுடனேயே ஒன்றித்துவிட்டார். நான் மரண வீட்டில் வீட்டைப் பார்க்கும்போது கிட்டத்தட்ட அவரின் வீடும் ஒரு கோவ-ில் பணியகம் மாதிரியே மாறிவிட்டிருந்தது.

கடைசி ஒரு மாதத்தில் இருமலுடன் கூடிய சளிவருத்தத்தில் அம்மா கஸ்டப்பட்ட நேரத்திலும் எனது தாயாருக்கு இப்படி ஆகும் என யாரும் நினைக்கவில்லை. அப்படியிருக்க நான் எனது தாயாரை அழைத்துவர புறப்பட்டபோது எல்லாவற்றையும் கைமீறி நடந்தது விதியின்பயனா?

எங்களை விசேடமாக மூத்தபெண்பிள்ளையான என்னை சிறுவயதுமுதலே மிக ஆளுமையுடன்தான் வளர்த்தார். குழந்தை பருவத்திலிருந்தே எங்களுக்கு நல்ல புத்தகங்களை தெரிவுசெய்து வாங்கித்தந்து வளர்த்தார்.



10-12 வயதில் மு. வரதராசன் அவர்களின் தம்பிக்கு, அண்ணாவுக்கு, தங்கைக்கு, நண்பிக்கு, நண்பனுக்கு போன்ற தெரிவுகளிலிருந்து உலகவரலாறு, சரித்திர நாவல்கள் இலக்கியம், கவிதை என பன்முக ரசனையுடன் புத்தகங்களை தெரிவுசெய்து வாங்கித்தருவார். எந்த வேலையையும் நேர்த்தியுடன் ஒருபிடிப்புடன் நேர்மையாக , சீராக செய்வதற்கு கற்றுத்தந்துள்ளார். ஒரு ஆண்பிள்ளையைவிட ஒரு பெண்சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு எப்படி முகம்கொடுக்க வேண்டுமென்பதை தனது அனுபவத்தாலும், அறிவாலும் தெளிவுபடுத்தி வழிநடாத்தியுள்ளார். எமது வாழ்க்கை குறுகிய திருமணம் கணவன் குழந்தைகள் மட்டும்தான் என்று ஒரு வட்டத்திற்குள் நிற்காமல் எம்மைச்சுற்றி பெரிய வட்டத்தினை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படைதாரக மந்திரத்தை சொல்லிச்சொல்லியே எம்மை வளர்த்தார். இதையே தானும் வாழ்ந்து காட்டினார். எமக்கும் வழிசமைத்தார்.

எனது தாயார் தனது இளமைக்காலத்தில் துறவற வாழ்வினூடாக ஒரு பொதுவாழ்வை நேசித்திருந்தாலும் அதில் தடங்கல் ஏற்பட்டிருந்தாலும் அதில் மீண்டெழுந்து தனக்கு கிடைத்த வாழ்வை தனதாக்கிகொண்டு அதனையே ஆளுமை செலுத்தியிருந்தார்.

www.padippakam.com



அதுபோல் அரசியலில் சொந்த சுயநலத்தையோ, தேவைகளையோ, பதவிகளையோ எதிர்பார்க்காமல் முழுநம்பிக்கையுடன், உண்மையாக செயற்பட்டுள்ளார். அதுபோல் எந்த சமயத்தையும் அனுசரித்து, எந்த இனவிரோதத்தன்மையையும் பாராட்டாமல் வாழ்ந்துள்ளார். ஏனெனில் எங்கள் அயலில் நாங்கள் மட்டும்தான் கத்தோலிக்கர்கள், கூடிய இந்து சமயத்தவரையும், ஓரளவு முஸ்லீம் சமயத்தவரையும் கொண்ட சுற்றாடலில் நாம் பழக்கப்பட்டுள்ளோம். அதுபோல் 1983வரை எமது பக்கத்து அயலவர் ஒரு படித்த சிங்கள குடும்பத்தை சேர்ந்தவர்கள் எங்களுக்கும் இவர்களுக்குமான உறவு கடைசி இனக்கலவரத்தில் அவர்கள் ஊரை விட்டுபோகும்வரை மிக அந்நியோனியமாகத்தான் இருந்தது.

எனது தாயாரின் இளம்பிராயம் முதல் அவரது வாழ்க்கை ஏற்றத்தாழ்வுகளோடு பயணித்தாலும் ஏதோ ஒரு விதத்தில் அந்தந்த சமூகத்தின் முன்னெடுக்கும் அங்கமாகவே செயற்பட்டுள்ளார். குறிப்பாக சொல்லப்போனால் திருமணமாகியதும் தனது 20 வயதைக்கடக்கும் போது 1960 காலகட்டத்திலிருந்து அரசியலில் பயணித்து 20 வருடங்களையும் அரசியலில் முழுநேரமாக அர்ப்பணித்தும் சாதிக்கமுடியாததை 1980 லிருந்து 1984வரை காந்தீயத்திற்குள் 4 வருடங்களாக தேடி எமது மக்களின் விடுதலைக்கு எதுவும் உத்தரவாதம் இல்லாமல் சிலகாலம் சிறையில் வாழ்ந்தார்.

அதன் பின் தீவிர ஆன்மீகப்பணிதான் இவருக்கு சாந்தியை கொடுத்திருக்கலாம் ஆயினும் இந்த ஆன்மீகப்பணிதான் தொப்புள் கொடி உறவுகளான எம்மைக் கூட பிரிந்து தனிமையை தேடி போக வைத்தது அம்மாவின் மண்பற்றும் சமூகப்பற்றும் ஆன்மீகப்பற்றும் அவரை அந்த மண்ணிலேயே மரிக்க வைத்தது.



அரசியலைப் பொறுத்த வரையில் எனது தாயார் என்றும் ஒற்றுமையையே ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்தார். இவரது காலத்தில் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி அதன் பின் தந்தையால் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியே. எனவே இதில் எல்லோரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட வேண்டுமென்று கனவு கண்டார்.

ஆயினும் வரலாற்றில் எங்கும் நடைபெற்றிராத இயக்க உள்மோதல்களும், இயக்கத்திற்கு இயக்கம் எதிரானது அல்லது பொது எதிரியை இனம் காணத்தவறியது. அல்லது நியாயப்படுத்துவது, அல்லது எதிரியுடன் கூட்டுச்சேர்ந்து எமக்கே நாம் குழி தோண்டுவது என இப்படியான செயற்பாடுகளிலிருந்து படிப்பினைகளை அனுபவமாக்கி இனியாவது நாம் பயணிக்கவேண்டும். எப்படி நாம் ஒரு கட்சியின் கொடியில் ஒன்றுபட்டிருந்தோமோ அதனை நினைந்து, பல்வேறாகப்பிரிந்து சிதைந்திருப்பதைவிட்டு மக்களின் விடுதலையை முன்னிறுத்தி பொது மனிதநேயத்துடன், ஒரு பொதுவேலைத் திட்டத்தில் இனியாவது நாம் இணையாவிட்டால் எனதுதாயாரின் ஆத்மா மட்டுமல்ல இந்த நாட்டுக்காக பலவழிக-ளிலும் தம்மை அர்ப்பணித்த ஆயிரமாயிரம் ஆத்மாக்களும் சாந்தியடையாது.



படிப்பகம்

www.padippakam.com



ஒருவரின் எண்ணக்கருத்தும், ,சிந்தனையும், செயற்பாடும் அவனை அவனாக ஆக்குகின்றது என்பதுபோல் நாம் எதற்காக வாழ்ந்தோமோ அதற்காகவே அந்த மண்ணிற்காகவே அதே மண்ணில் சங்கமித்துள்ளார்.

எனது தாயார் எமக்கு மட்டும் உரியவரல்ல. இச் சமூகத்திற்குப்பொதுவாக வாழ்ந்தவர். எனவே அவரின் வாழ்வின் நிறைகுறைகளோடு இந்த சமூகமே அவரின் ஆத்மா சாந்தியை கையேற்க வேண்டும் . எமது ஒற்றுமையே அதற்கு வழிசமைக்க வேண்டும். இந்த ஒற்றுமையை இவரின் மரணச்சடங்கு நிலைநிறுத்தியது. இந்த நினைவு மலரும் எனது தாயார் கடந்து வந்த அல்லது சந்தித்த அல்லது ஒன்றாக பயணித்த உள்ளங்களின் உள்ளக்கிடக்கைகளின் வெளிப்பாடாகும்.

அம்மாவின் இத்தகைய வரலாற்று தடங்களை எண்ணிப்பார்த்த போது தமிழர் அரசியல் வரலாறு அவருடன் பின்னிப் பிணைந்திருப்பதை அறியமுடிந்தது. இதனால் இவ்வரலாற்றையும், அதனோடு தொடர்பு பட்டவர்களையும், அவர்களின் நினைவு-களையும், எமது அடுத்துவரும் சந்ததியினருக்கு கையளிக்க வேண்டிய கடப்பாடும் எம்மிடம் இருப்பதாக உணர்ந்தேன் அதன் வெளிப்பாடுதான் திருமதி பிலோமினா லோறன்ஸ் என்னும் உடைக்க முடியாத விம்பத்திலிருந்து உயிர்த்தெழும் நினைவுக-ளாக இந்த 'நினைவுத் திசை' என்னும் இந்த வரலாற்றுப் பதிவு.



அம்மாவின் நினைவாக வெளிவரும் இந்த நூலுக்கு தங்கள் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் கேட்டபோது தட்டிக்கழிக்காது மனமுவந்து தங்கள் நினைவுக் குறிப்புகளைத் தந்துதவிய அரசியல் தலைவர்கள், மற்றும் அம்மாவோடு காந்தீயம், ஆன்மீகம் போன்ற தளங்களில் பணியாற்றிய பெரியோர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் என் முதல்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போல் இந்நூல் உருப்பெற பல வழிகளிலும் உதவி புரிந்த ச.அருளானந்தம் ஐயா, ப.சுஜந்தன், க.சுமன், கௌசி, த ஜெயபாலன் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். மற்றும் அம்மாவின் உருவத்தை அழகான முறையில் வரைந்த அ.அருள்பாஸ்கரன் அவர்களுக்கும் இந்நூலை திறம்பட அச்சிட்டுதவிய அச்சகத்தாருக்கும் ஏனைய அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தானதே.

இதற்குமப்பால் நான் வெளிநாட்டில் இருந்த போது இறுதி நேரங்களில் அம்மா உடல்நலம் குன்றியிருந்தார். அந்த வேளையில் அம்மாவை கவனிக்க முடியவில்லையே என்ற பெருங்கவலை இருந்தது. அந்த நேரத்தில் நான் கேட்கும் போதெல்லாம் அம்மாவின் வீட்டுக்கு ஓடிச்சென்று என் பெற்ற பிள்ளை போல் எல்லாவிதமான உதவிகளையும்கூட இருந்து செய்தது மட்டுமல்லாமல் மரணச்சடங்கின் இறுதிவரை எம்முடன் இருந்த சுஜந்தனுக்கும் ஒரு மாதகாலமாக அம்மாவுடன் கூட இருந்து அம்மாவுக்கு பணிவிடைகள் செய்த அஞ்சலாதேவிக்கும் எனது நன்றிகளை தெரிவிக்க வேண்டும் மற்றும் அம்மாவின் மரணச் செய்தி கேட்டு வருந்தி நேரடியாகவும், தொலைபேசி மூலமும், இணையம் மூலமும் ஆறுதல்



படிப்பகம்

www.padippakam.com



கூறியவர்கள், அம்மாவின் மரணத்தின் போது இறுதிவரை துணையாய் இருந்து சகல வழிகளிலும் உதவிபுரிந்த உறவினர்கள், நண்பர்கள், திருச்சபையினர் அனைவருக்கும் என்றும் மறவாத என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*அன்புடன் என் அன்னைக்கு,*

*உங்கள் அன்பு கணவர் திரு.லோறன்ஸ் சார்பாக*
*உங்கள் அன்பு மகன் திரு.அன்ரன் ஜெராட்(பாபு) சார்பாக*
*உங்கள் அன்பு மருமகள் திருமதி. ராணி ஜெராட் சார்பாக*
*உங்கள் அன்பு பேத்தி திவேனா.ஜெராட் சார்பாக*
*உங்கள் அன்பு மகள் திருமதி. லுமினாசாந்தி விஜயசேகரன்சார்பாக*
*உங்கள் அன்பு மருமகன் விஜயசேகரன் சார்பாக*

*உங்கள் அன்பு பேத்தி தியா விஜயசேகரன் சார்பாக*
*உங்கள் அன்பு பேரன் தியாஸ் விஜயசேகரன் சபர்பாக*

*அன்புமகள் (லொறன்ரீனா - றஜனி)*
*திருமதி.ஜெயச்சந்திரன் ஜென்னி*



படிப்பகம்

www.padippakam.com



# அரசியல்

முடிதரித்து மரித்த மூத்த பரம்பரை
நெடிதுயிர்க்கும் வாழ்வில் முடிவின்றி
நொடி நொடியாய் நொய்துற்று
பிடி மண்ணுமற்ற நிலையெய்தி
விடிவில்லை இனி நமக்கு என்றுணர்ந்தார்



காலப்பெரும் நதி கை வீசியழைக்க
வீறுகொண்டெழுந்தது தமிழினம்
காளையர் அணியென திரள
கோல மயில் பெண்கள் கூடி முழங்கினர்
வேளை இதுவென நிமிர்ந்தது தமிழர் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com





# மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார். லண்டன்.*

திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்கள், தமிழினத்தின் மீது மிகுந்த பற்றுக்கொண்டவராக இருந்ததை அவரது செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் எங்களுக்கு காட்டின. அகிம்சை முறையில் அமரர் தந்தை செல்வா காட்டிய வழியில் அவர் என்ன போராட்டத்தை முன்னெடுத்தாலும் அவையெல்லாம் தொகுதி வாரியாக செயற்படுத்தப்பட்டன. அந்த போராட்டங்கள் எல்லாம் தமிழினத்தின் நலன் கருதி எடுக்கப்பட்டவை.

தமிழினத்தின் மீது அளவற்ற பாசமும் பற்றும் கொண்டிருந்த திருமதி.பிலோமினா லோறன்ஸ் நம் தலைவர்கள் எடுக்கின்ற எந்த போராட்டங்களிலும் சரி முதன்மையாக இருந்து செயற்பட்டவர்களில் ஒருவராக விளங்கினார். ஆரம்பத்தில் திரு. இராஜவரோதயம் அவர்களின் தொகுதியாக திருகோணமலை இருந்த போதும் சரி, அதன்பின்பு திரு. மாணிக்கராஜா அவர்களுடைய தொகுதியாக விளங்கியபோதும் சரி அடுத்து திரு.நேமிநாதன் அவர்களுடைய தொகுதியாக விளங்கிய போதும் சரி, அவர் தன்னலமற்ற ஒரு சேவகியாக பாடுபட்டார்.

தற்போதைய பிரதிநிதி திரு. சம்பந்தன் அவர்களுடைய காலத்திலும் அவர் தொடர்ந்து செயற்பட்டது எமக்கெல்லாம் பெரும் வியப்பை தருவதாக இருந்தது. பதவி ஆசை எதுவுமற்று அவர் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தன்னை அர்ப்பணித்ததை எண்ணுகின்றபோது கவிஞர் பாரதிதாசனுடைய கவிதை தான் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

'ஒரு தமிழன் தமிழுக்காக உயிர் வாழ்கின்றான் உயிர் வாழ்வான் தமிழுக்கே தனை ஏய்கின்றான்' என்ற கவிதை அவருக்கு சாலவும் பொருந்தும் திருகோணமலைக்கு நாம் போகின்ற போதெல்லாம் என்னுடைய கணவரையும், எம்மையும் மிக அன்பாக வரவேற்று உபசரிக்கின்ற அவருடைய அன்பை நாம் என்றைக்கும் மறந்துவிட முடியாது. அவருக்கு பின்னணியில் இருந்து செயற்பட்ட அவர் கணவர் திரு.லோறன்ஸ் அவர்களையும் நாங்கள் மறந்து விட முடியாது. அவ் இருவருடைய மலர்ந்த முகங்களையும் நாம் திருமலை செல்கின்றபோது பார்க்காமல் இருக்கவே முடியாது.

அண்ணே அக்கா என்று அன்போடு உபசரித்த என் அருமைச் சகோதரி மறைந்து விட்டாலும் எம் நினைவுகளிலிருந்து நாம் மறந்துவிட முடியாது.

www.padippakam.com



1961ல் நடந்து கொண்டிருந்த சத்தியாக்கிரகத்திலும் சரி, திருமலை பாதயாத்திரையிலும் சரி, உண்ணாவிரதங்களிலும் ' சரி அறவழியில் நடந்த எந்தப் போராட்டங்களானாலும் சரி திருமதி. பிலோமினாவை முன்னணிலையில் பார்க்க முடியும். அவர் மேடைப் பேச்சுக்களிலும் சளைத்தவர் அல்ல. நாங்கள் இருவரும் எத்தனையோ மேடைகளை சந்தித்திருக்கின்றோம். எங்களுக்குள்ளேயே சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை விளக்கிக் கூறும்போது அவர் சுலபமாக அவற்றை புரிந்து கொள்வார்.

தந்தை செல்வா அவர்களின் தலைமையிலும் சரி, அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையிலும் சரி அந்த தாயின் தூயபணி என்றும் நிற்கவில்லை. திரு.லோறன்ஸ் அவர்களை எந்நிலையிலும் மறக்க முடியாது. அவரை நான் எந்நிலையிலும் நினைவு கூர விரும்புகின்றேன். தன் மனைவியை முன்னணியில் விட்டு விட்டு தானும் அமைதியாக எல்லா செயற்பாடுகளையும் பின்நின்று செயற்படுத்தி வெற்றிகாணுவதில் அவருக்கும் ஒரு தனிப்பங்குண்டு. நாங்கள் செல்லுகின்ற நேரங்களில் தன்னுடைய வீட்டிக்கு சில சமயங்களில் அழைத்து தன் அன்பை வெளிக்காட்டிக்கொள்வார்.

இந்த நேரத்திலே அந்த அன்பு சகோதரியை எண்ணிப்பார்க்கின்றேன்! அவருடைய அன்பையும், வெளிப்படையாக எம்முடன் பேசுகின்ற பாங்கையும் தங்களுள் ஒருவராக எம்மை அழைத்து பேசி மகிழ்வதையும் மறக்க முடியாது..

பிறந்தவரெல்லாம் இறப்பது உறுதி என்று பாடிவைத்த புலவர்கள் எங்கள் மனங்களிலே அந்தப் பாசத்தை எப்படி மறப்பதென்று எழுதி வைக்கவில்லை. ஒவ்வொருவராக மறைந்து விட்டாலும் இருப்பவர்களின் நினைவுகள் அவர்களை மறப்பதே இல்லை.



அக்காச்சி என்று சகோதரி பிலோமினாவுடைய அன்பு பேச்சை என்னால் மறக்க முடியாது. இன்று அவருடைய புதல்வி ஜென்னி அவருக்குச் செய்கின்ற கடமையை நான் மதிக்கின்றேன். அவரிடம் இருக்கின்ற தமிழ் பற்றையும் நான் பாராட்டுகின்றேன். என் கணவர் அடிக்கடி கூறும் வழக்கமான குறள் ஒன்றை இங்கு தந்து எனது நினைவுக்குறிப்பை நிறைவுசெய்கின்றேன்.

'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும்
பெருமை உடைத்திவ்வுலகு!



படிப்பகம்

www.padippakam.com





# இரா சம்பந்தன்

*தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுத் தலைவர்,*

திருகோணமலை கல்லூரி வீதியில் வசித்துவந்த திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களை நான் மிக நீண்ட காலமாக அறிவேன். திருமதி பிலோமினா அவர்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடன் நீண்டகாலமாக இணைந்து செயற்பட்டதுடன் இக்கட்சிகளின் அரசியல் முன்னெடுப்புக்களின் போதெல்லாம் மிக முக்கியமாகப் பங்காற்றிய ஒருவராவார். மேலும் இவர் எமது கட்சியின் பெண்கள் பிரிவின் பிரதான சக்தியாக இருந்தவர். இந்தக் காலத்தில் இவர் ஆற்றிய மகத்தான பணி அதிக பெறுமதி வாய்ந்ததும் மதிப்புக்குரியதும் ஆகும். இவர் தனது இறுதி நாட்களில் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

எமது மக்களின் சமத்துவத்திற்கும் நீதிக்குமான போராட்டத்தின் போது திருமதி பிலோமினா அவர்கள் ஆற்றிய மகத்தான பணிக்காக நாங்கள் அவரை எப்போதுமே நன்றியுணர்வுடன் நினைவு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.



இந்த சந்தர்ப்பத்தில் அவரது பிரிவால் துயருறும் திருமதி பிலோமினாவின் கணவன் திரு.லோறன்ஸ் மற்றும் அவருடைய பிள்ளைகளுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com





# வீ. ஆனந்தசங்கரி

தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி

## தமிழ் மகளிர்க்கு முன் உதாரணமாக வாழ்ந்து காட்டியவர் பிலோமினா லோறன்ஸ் அம்மையார்.

திருமதி பிலோமினா லோறன்ஸ் அம்மையார் யாழ் மண்ணில் உதித்திருந்தாலும் தான் புகுந்த பட்டணமான திருமலையிலேயே பிரபலமடைந்திருந்தார். அன்னார் பற்றி இளைய தலைமுறையினர் குறிப்பாக, தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் அறிந்திருக்க வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமானதாகும். தமிழுக்கும் தமிழருக்கும் அன்னார் ஆற்றிய தொண்டு மிகப்பெரியதாகும்.

திரு . லோறன்ஸ் ஐயா அவர்களைக் கைப்பிடித்து திருகோணமலையில் குடியேறிய அம்மையார் ஆரம்பத்தில் தமிழரசுக்கட்சிக்கு பிரச்சாரம் செய்து வந்தார். திருமலை மாவட்டத்தில் அன்னாரின் காலடி படாத வீடுகளே கிடையாது. காலப்போக்கில் மேடையேறிப் பேச ஆரம்பித்த அம்மையார் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளராக திகழ்ந்தார்.



தமிழ் உலகில் சிறந்த முன்னணி பேச்சாளராக திகழ்ந்த திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திருமதி. கலா தம்பிமுத்து ஆகியோருடன் இணைந்து செய்த பிரச்சாரமே 1970ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வடகிழக்குப் பகுதியில் மிகப் பெரும் வெற்றியை ஈட்டிக்கொடுத்தது.

1972 தந்தை செல்வா தனது அரசியல் விரோதியாக அதுவரை இருந்த பெரு மதிப்பிற்குரிய ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் வீடுதேடிச் சென்று தமக்குள் இருந்து வந்த பகைமையை மறக்கச் செய்து தமிழரசுக் கட்சியையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் செயலிழக்கச் செய்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி வைத்த சம்பவம் திருமதி லோறன்ஸ் அம்மையாருக்கும் மற்றும் அனைவரையும் போல் உற்சாகத்தை கொடுத்து மேலும் பிரச்சாரத்தில் ஈடுபடத்தூண்டியது.

1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் தொகுதிகளில் ஒன்றே ஒன்றைத் தவிர மற்றைய எல்லா தொகுதிகளிலும் வெற்றியீட்ட வைத்த பெருமையில் திருமதி. லோறன்ஸ் அவர்களைப் போன்றோருக்கு பெரும் பங்குண்டு.



படிப்பகம்

www.padippakam.com



காலம் ஓடியது. முன்னனி பேச்சாளர்களின் உற்சாகம் குறைந்ததற்கு வேறுபல அரசியல் காரணங்களும் இருந்தன. அதில் சிக்கிய பிலோமினா அம்மையாரும் பிறந்த நாட்டை விட்டு 2003ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் குடியேறி-னார். பிறந்த மண் பாசம் இறுதிக்காலத்தில் அவரை விட்டு வைக்கவில்லை. 2007ம் ஆண்டு கடைசிப் பகுதியில் நாடு திரும்பியிருந்தார்.
அம்மையார் இறப்பதற்கு ஒருசில நாட்களுக்கு முன்பு திருமலையில் -அவரின் இல்லத்தில் சந்தித்ததில் அவரின் உடல் நிலையை உணர்ந்து பாரிசுக்கு சென்று குடும்பத்ததுடன் வாழும்படி ஆலோசனை வழங்கினேன். ஆனால் அம்மையார் தனது உடுப்புப் பெட்டியை அடுக்கும் போதும் அவர் உள்ளம் நாட்டை விட்டு வெளியேற இடம் கொடுக்கவில்லை. பிறந்த மண்ணுக்கே பெருமதிப்பு கொடுத்து இந்த மண்ணுக்கே தன்னை அர்ப்பணித்த திருமதி லோறன்ஸ் அவர்களின் மண் பற்று பாராட்டுதலுக்குரியதாகும். இவரைப்போல் எம்மவர் ஆயிரக்கணக்கில் பிறந்த மண்ணை மறக்க முடியாது தவிப்பதை நான் அறிவேன்.

திருமதி. பிலோமினா அம்மையாரைப் போல அவரது கைப்பிடித்த கணவர் லோறன்ஸ் ஐயா அவர்கள் அவர்களின் பிள்ளைகள் ஜென்னி, சாந்தி, பாபு மற்றும் மருமகள் ராணி, பேத்தி திவேனா ஆகியோரும் இனப்பற்றுடனும் மண்பற்றுடனும் வாழ்வது அனைவரினதும் உள்ளத்தை தொடும் விடயமாகும்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராதிப்போமாக.





படிப்பகம்

www.padippakam.com



# ஞா. ஞானசேகரன்

*தலைவர், ஈழ தேசிய ஜனநாயகவிடுதலைமுன்னணி*
*(ஈ.என்.டி.எல்.எப்)*

17-07-2012 செவ்வாயன்று இயற்கை எய்திய திருமதி. ஜென்னி ஜெயச்சந்திரன் அவர்களின் தாயாரான திருமதி. பிலோமினாலோறன்ஸ் அவர்களுக்கு எங்கள் இயக்கத்தின் (ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னி) சார்பாக அஞ்சலியையும், மரியாதையையும், வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழர்கள் ஈழத்தின் அடிமைகள் ஆக்கப்பட்ட நாள் முதல் பலதரப்பட்ட அறிவா-ளிகளும், மூத்த குடிமக்களும், இளைஞர்களும் அந்த அடிமைத் தனத்திலிருந்து விடுபட தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டனர். 1948 முதல் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்களுடைய காலம் முடிவுறும் போது அடுத்த தலைமுறை அந்தமுயற்சியை மேற்கொண்டது.

1961ஆம் ஆண்டு முதல் இரண்டாந் தலைமுறையினர் தமிழ் இனத்தின் விடுதலைக்கான விதையை விதைக்க ஆரம்பித்தனர். 1972ஆம் ஆண்டு இலங்கையைக் குடியரசாகப் பிரகடனப்படுத்தி, தமிழ் இனத்துக்கு உரிமைகள் எதுவும் கிடையாது என்று உறுதிப்படுத்தியது இலங்கை அரசு.



தமிழ் இனம் விடுதலை பெற்றால் தான் வாழ்வு என்ற விதையைத்தான் விதைத்தனர். எங்கள் மூத்தவர்கள். பலர் அறிவுபூவமாகச் செயல்பட்டனர், இன்னும் பலர் உணர்ச்சி பூர்வமாகச் செயல்பட்டனர், அறிவுக்கும் உணர்ச்சிக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் அறிவு பூர்வமாகப் பல பணிகளை மேற்கொண்டவர். அரசியல், சமூகசேவை இரண்டிலும் ஈடுபட்ட சில பெண்மணிகளில் இவருக்கு முக்கிய பங்குண்டு.

விடுதலையை அறுவடை செய்யப் புறப்பட்டவர்கள் அறுவடை செய்து ஆற்றினில் வீசிவிட்டுச் சென்றுவிட்டனர். அனைத்துமே வீணானது. தமிழரது வாழ்வில் இந்தத் துயரம் திருமதி. பிலோமினா அவர்களையும் வருத்தியது என்பது உண்மை. இத்துயரம் பல ஆயிரக்கணக்கானவர்களைப் பாதித்தது என்பதும் உண்மை.

ஈழத்தின் ஏனைய பகுதியைப் போன்றல்லாமல் திருமலை பலவழிகளிலும் எதிரிக-ளால் சூழப்பட்டது. தமிழ் இனத்தின் மேல் கொண்ட பற்றுதலினால் எதிரிகளைக் கண்டு அஞ்சாமல் தமிழ் இனத்துக்காக திருமதி. பிலோமினாலோறன்ஸ் அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



தமிழர் பிரதேசத்தைக் காப்பதற்கான பணியில் முழுமையாக ஈடுபட்டு அதனால் சிறைசென்றதை நாம் வரலாற்றுப் பதிவேட்டில் ஏற்றவேண்டும்.

தமிழரது விடுதலைப் போராட்டத்தில் பலரது தியாகங்கள் பலவந்தமாக மறைத்து மூழ்கடிக்கப்பட்டன. பல இடங்களில் முன்நிலைப்படுத்தப்பட வேண்டியவர்கள், ஒதுக்கப்பட்டு, நிராகரிக்கவும் செய்துள்ளனர். இன்னும் பலரோ அமைதியாக பொது வாழ்க்யைிலும், சமூகசேவையிலுமிருந்து ஒதுங்கிக் கொண்டனர்.

ஆனால் திருமதி. பிலேமினா அவர்கள் மீண்டும் திருமலைக்குச் சென்று தன்னால் ஆன உதவிகளைத் தமிழ் மக்களுக்கு ஆற்றவேண்டும் என்ற தனது உள்ளக் குமுறலுடன் களமிறங்கிய வேளையில் காலன் மீட்டுச் சென்றுவிட்டான்.

திருமதி. பிலோமினா அவர்களது ஆத்மாசாந்தியடைய வேண்டும், அவர் விட்டுச் சென்ற பணியினை அவரது வாரிசுகளும், உறவினர்களும், நண்பர்களும் தொடரவேண்டும் என்றுவேண்டிக் கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com






# த. சித்தார்த்தன்

*தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்).*


## திருமதி பிலோமினா என்னும் ஆளுமை

வீரமும் ஆளுமையும் கொண்ட சமூக பிரக்ஞையுள்ள பெண் அவர். தமிழ் தேசிய எழுச்சியின் தீர்க்கமான தருணங்கிளில் அவர் தமிழரசுக் கட்சியுடன் தன்னை இனம் கண்டார். திருமலையின் பட்டி தொட்டி எங்கும் தேசிய எழுச்சிக்கு உயிரூட்டினார். அவருடைய பேச்சாற்றல் மக்களை விழிப்படைய வைத்தது. வடக்கு கிழக்கில் பெருந்திரள் மக்கள் கூட்டங்களில் அறப்போராட்டங்களில் பங்கு பற்றினார். தந்தை செல்வாவின் அறவழியே அவருடைய பாதை.

துடிப்புள்ள இளம் தலைமுறை அவரைப் பெரிதும் நேசித்தது. மூத்த இளைய தலைமுறைகளுக்கிடையே அவர் பாலமாகத் திகழ்ந்தார். யாழ் முற்ற வெளியிலும் வேறு அரங்கங்களிலும் அவரது பேச்சாற்றலை கண்டு வியந்திருக்கிறோம். திருமலையைச் சூழ்ந்து நின்ற நெருக்கடிகளின் குறியீடாக அவரின் குரல் ஒலித்தது.



தீவிர போராட்ட காலகட்டத்தை தவிர பெண்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே பங்களிக்க முடிந்தது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் பெண்களின் பங்களிப்பு அரசியலில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் இல்லை.

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், கலா தம்பிமுத்து போன்றவர்கள் பிலோமினா அக்காவின் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இவர்களின் பங்களிப்புக்கள் அடுத்தலைமுறையினருடன் பகிரப்பட்டிருக்கவேண்டும். மூத்த தலைமுறையினரின் அனுபவங்கள் கிரகிக்கப்பட்டே போராட்டம் முன் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். அது எமது சூழலில் நிகழவில்லை.

இனக்கலவரங்கள் காரணமாக வன்னியிலும் கிழக்கிலும் மலையக மக்கள் இடம் பெயர்ந்து வந்து குடியேறிய காலத்தில் காந்தியத்திலும் தன்னை இணைத்துக்கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியிலும் தளராது வீறுடன் பணியாற்றினார். தீவிர ஈடுபாடு காரணமாக சிறைவாசத்தையும் அனுபவித்தவர்.

அவருடைய மகள் ஜென்னி தற்போது பிரான்சில் தீவிர சமூக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருபவர். அவரது ஆளுமையின் மறுவார்ப்பாக தனது மகளை உருவாகியருக்கிறார். தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தில்

www.padippakam.com



கால்நூற்றாண்டுக்ளுக்கு முன்னர் தன்னை இணைத்துக் கொண்ட ஜென்னி சிரேஸ்ட உறுப்பினரான பார்த்தன் அவர்களை திருமணம் செய்தார். அவர்களது இல்லற வாழ்வும் நீடிக்கவில்லை. 1984 களின் முற்பகுதியலேயே மரணம் அவரை நேருக்கு நேர் எதிர் கொண்டது. தோழர் ஜென்னி உறுதி தளரவில்லை. இன்றுவரை புத்துணர்வுடனும், தேடலுடனும், கனவுகளுடனும் வாழ்பவர்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சங்கிலியில் திருமதி பிலோமினா லோரன்ஸின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com





# திருநாவுக்கரசு சிறீதரன்

பொதுச் செயலாளர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## திருமலையின் மகள்

ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில் பிலோமினா அவர்களின் பெயரும் முக்கியத்துவம் பெறுகிறது.

அறவழியில் தமிழர்கள் தமது உரிமைகளைக் கோரிய காலத்தில் 1960 களில் தமது போராட்ட பயணத்தை ஆரம்பித்தவர். அரசியல் போராட்ட அரங்கங்களில் பெண்களுக்கு வாய்ப்பு கிடைப்பதும் பெண்கள் பங்கு பற்றுவது அவ்வளவாக வரவேற்ககப்படாததுமான காலத்தில் அவர் தீர்மானகரமாக பிரவேசித்தார். மக்களை விழிப்படையச் செய்வதில் அவரது பேச்சாற்றல் பெரும் பங்காற்றியது படித்த உயர் வர்க்க அரசியல்வாதிகளுக்கு ஈடுகொடுத்து அவர் அரசியல் அரங்கில் நின்றிருந்தார். இது மிகவும் அசாத்தியமானது. பொருளாதார அரசியல் பின்பலம் இல்லாமலேயே தனது ஆளுமையால் நிற்க முடிந்தது.

திருமதி கலா தம்பிமுத்து, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் போன்றவர்கள் இவர்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசுக் கட்சியின் மேடைப் பேச்சாளர்களாக திகழ்ந்தார்கள். பிலோமினா அவர்களை நினைவு கூரும் இவ்வேளையில் தமிழ் அரசியலில் பெண்களின் பங்களிப்பு பற்றியும் குறிப்பிட வேண்டும். புஷ்பராணி அவர்களின் 'அகாலமும்' அதனை உணர்த்தி நிற்கிறது. எப்போதும் பெண்கள் உப பிரிவினராக கறிவேப்பிலையாகவே தமிழ் அரசியலில் பயன்பட்டு வந்திருக்கிறார்கள். ஈழப்போராட்ட வரலாறு ஈழ ஆண்களின் போராட்ட வரலாறாக இருந்ததும், பாசிசமாகி நலிவடைந்து சென்றதற்கு காரண-மாக இருக்கலாம். பெண்கள் தீவிரமான போராட்டதில் சண்டைகளில் பங்கு பற்றியிருக்கலாம். ஆற்றல்களை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் தீர்மானிக்கும் குழுக்களில் தலைமைத்துவத்தில் பங்கு வகிக்கவில்லை என்றே கூறலாம். ஒரு சில சுயாதீன ஆளுமைகள் இருந்தன. வரலாறு ஆண்களிலேயே தொடங்கும். இது எமது சமூகம் எவ்வளவு தூரம் ஆணாதிக்க வகைப்பட்டதாக மாறிவிட்டது என்பதை உணர்த்தி நிற்கிறது.

மாற்றம் நிகழ வேண்டுமானால் ஈழத்தமிழ் தேசிய இயக்கத்தில் மாத்திரமல்ல தீண்டாமைக்கெதிராக முன்நின்ற பெண்கள் இலங்கையில் சமூக மாற்றம் மற்றும்



படிப்பகம்

ஜனநாயக இயக்கத்தில் பணியாற்றிய பெண்கள் தோட்டத் தொழிலாளர் இயக்கங்களில் பெண்கள் என்ற பல பரிமாண அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

விவியன் குணவர்த்தனா போன்றவர்களின் வரலாறும் நோக்கப்பட வேண்டும்.

பெண்களின் செயற்பாட்டிற்கான இடைவெளி குறைந்த சமூகமாகவே தமிழ் சமூகம் காணப்படுகிறது. சிங்கள மக்கள் மத்தியில் பெண் அரசியல்வாதிகள் உருவான அளவிற்கு தமிழகத்தில் இந்தியாவில் பெண்களின் பங்கு பற்றுதல் அளவிற்கு இங்கு எம்மத்தியில் இல்லை என்றே கூறிவிடலாம்.

புலம் பெயர்ந்து சென்று வளர்சியடைந்த நாடுகளில் பல்கலாச்சார சூழலில் பெண்களுக்கு நம்பிக்கை அளிக்க கூடிய இடைவெளிகள் காணப்படுகின்றன. ராதி-கா சிற்சபேசனும், சுமங்கலா கைலாசபதியும் ஐரோப்பாவில் பல பகுதிகளில் மக்களின் பிரதிநிதிகளாக இடம்பெற்றிருக்கும் பெண்கள், இலங்கையின் சூழலில் அவ்வாறான நிலையை அடைதல் சந்தேகமே. இது கலை இலக்கியம் தொழில் நுட்பம் அறிவியல் வேறு துறைகளுக்கும் பொருந்தும். பிலோமினா போன்றவர்கள் அர்பண உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள் ஆனால் அவர்கள் வாழும் காலத்தில் உரிய இடத்தை அடைவது கடினமாகததான் இருந்தது.

கடந்து வந்த 30 வருடங்களின் பின்னரும் முன்னோக்கிய மாற்றங்கள் எதுவும் பெரிதாக நிகழ்ந்து விடவில்லை. இது எமது சமூகச் சூழலில் நிலவும் நோயின் அறிகுறியாகும். தமிழ் தேசிய ஒடுக்கு முறைக்கெதிரான ஒரு அடித்தளத்தை உருவாக்கியவர்கள் இவர்கள். அவருடைய புதல்வி ஜென்னி பிரான்சில் வசிக்கிறார். சலிப்பில்லாத உற்சாகமும் நம்பிக்கையும் கொண்ட பெண். பிலோமினா அவர்களின் ஆளுமையும் சூழ இருந்தவர்களின் தாக்கமும் ஜென்னியின் அரசியல் பிரக்ஞையில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும்.

மயிலிட்டி புஸ்பராணி தனது ‘அகாலமும்’ இதனைக் குறிப்பிடுகிறார். பிலோமினா போன்றவர்களின் வரலாறு மிக விரிவாக எழுதப்பட வேண்டும்

www.padippakam.com





# செல்வநாயகம் சந்திரஹாசன்

*தமிழின தந்தை அமரர்.எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மகன்*

## இன உணர்வால் சிகரம் தொட்ட
## திருமதி. பிலோமினா லோறன்ஸ்

கிழக்கு மண்ணின் பழமைக்கும் செழுமைக்கும் வளமூட்டி வரலாற்றில் ஆழப் பதிந்து கிடக்கும் திருமலைப் பிரதேசத்தில் 1970களில் அரசில் மேடைகளில் கணீரென்று ஒலித்த குரலுக்குச் சொந்தக்காரி திருமதி . பிலோமினா லோறன்ஸ் அவர்கள். இன விடிவு நாடிய அவரது ஆழமான கருத்துக்களும், தெளிவான செந்தமிழ் உச்சரிப்பும், அந்த நாட்களில் திருமலைப் பிராந்தியத் தமிழர்களை ஓரணியில் கட்டிப் போட்டிருந்தன.



இலங்கைத் தமிழர்களின் உரிமைக் குரலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மேடைகளில் மிகப் பலப் பொருந்திய பெண் நட்சத்திரப் பேச்சாளராக விளங்கிய திருமதி. பிலோமினா லோறன்ஸ்சின் குரல் கேட்காத பகுதிகள் திருமலைப் பகுதியில் இல்லை என்றே கூறலாம். அவர் இல்லாத அரசியல் மேடைகள் அர்த்தமில்லா அரங்குகளாகவே தெரிந்தன என்றால் அது மிகையன்று. 'லோறன்ஸ் அக்கா' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களின் கணவர் திரு.லோறன்ஸ் அவர்களும் இன உணர்வும், சமுதாய அக்கறையும் கொண்ட உன்னத மனிதரே. தனது மனைவியின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு அருந்துணையாற்றிய ஒருவர்.

லோறன்ஸ் குடும்பத்திற்குச் சொந்தமான 'மொறிஸ்மைனர் டாக்ஸி' அக்காலத்தில் தமிழரசுக் கட்சியின் செயல்பாடுகளில் அனைவருக்கும் தெரிந்த அடையாளம். திரு. லோறன்ஸ் அவர்களால் ஓட்டப்படும் அந்த டாக்ஸி வந்து நின்றால் லோறன்ஸ் அக்கா பேச வந்து விட்டார் என்பது சொல்லாமலே தெரியும் காலமது.

திரு.நேமிநாதன், திரு.தங்கத்துரை, திரு.சம்பந்தன் என எல்லோரது வெற்றிகளிலும் திருமதி. பிலோமினாவுக்கும் பங்குண்டு. பொதுக் கூட்டங்களுக்குப் பெண்கள் திரளாக வருவதற்கு அவரும் ஒரு காரணம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாதரணித் தலைவியாகவும் அவர் செயல்பட்டிருக்கிறார். திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களுடன் லோறன்ஸ் அக்காவுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. காந்தீயத்தின் செயலணித் தலைவியாகவும் அவர் இயங்கியிருக்கிறார்.

www.padippakam.com



தலைவி என்றால் உத்தரவுபோடும் தலைவியாக அல்ல களத்தில் இறங்கிச் செயலாற்றும் தலைவியாக.

கப்பல்துறை, பன்குளம், பாரதிபுரம், மூதூரில் சில கிராமங்கள் என்பவை இவரது உழைப்புக்குச் சான்று. இனக் கலவரங்களால் அனைத்தையும் இழந்து, ஏதிலிக-ளாக திருகோணமலைக்கு வாழ்விடம் தேடி வந்த எம் உடன்பிறப்புக்களான மலை-லயக வம்சவாளித் தமிழர்களுக்கு இருப்பதற்கு நிலமும், வாழ்வாதார ஏற்பாடுகளுக்கு வழிவகையும் காட்டி, அவர்கள் தன்மானத்துடன் தம் சொந்தக் காலில் நிற்க காரணமான இன உணர்வும், சமூக அக்கறையும் மேலோங்கிய தன்மானத் தமிழ்ப் பெண்மணி, காந்திய அமைப்பின் செயலணித் தலைவி திருமதி.பிலோமினா லோரன்ஸ் மறக்க முடியாதவராக என்றும் எம் உள்ளங்களில் நிலைத்து வாழ்வார்.

வணக்கம்.

www.padippakam.com





# இரா. துரைரட்ணம்

கிழக்கு மாாணசபை உறுப்பினர், மட்டக்களப்பு

## சரிந்து போன தமிழ் சமூகத்தின் மகுடத்திற்கு சமர்ப்பணம்!

கடந்த 5 சகாப்தங்களை கடந்து எமது தமிழின விடிவிற்காகவும் இந்த சமூகத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட திருமதி.பிலோமினா. லோ-றன்ஸ் அவர்கள் இட்ட உரம் (விதைக்கப்பட்டவை) இன்று நல்ல அறுவடைக்காக காத்திருக்கின்றது.

எமது தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு-மறுக்கப்பட்டு - ஒடுக்கப்பட்டு இன்று சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு நாம் ஏதிலிகளாக்கப்பட்டோம்.இதற்கான விடிவிற்காய் பாடுபட்டு தன்னுயிரை துறந்த தியாகிகள்-முன்னோடிகள்,செயற்பாட்டாளர்கள் வரிசையில் அம்மையார் லோ-றன்ஸ் அவர்களும் நிரந்தரமான ஓர் இடத்தை தக்கவைத்துள்ளார்.



இந்த வகையில் காந்தீயத்தின் முக்கிய உறுப்பினரும், தமிழீழ விடுதலைக்கழகத்தின் ஆரம்பகால ராணுவ பொறுப்பாளருமாக செயற்பட்ட இவரது மருமகனான தியாகி இரா.ஜெயச்சந்திரன் (பார்த்தன்) 1984ல் எமது மட்டுநகர் மண்ணிலேயே இலங்கையரசுடன் மோதி தளத்திலே பலியானார்.இவரது மகள் ஜென்னி. ஜெயச்சந்திரனும் சிறுவயதிலேயே தன்னை விடுதலைக்கு அர்ப்பணித்து தமிழீழ விடுதலைக்கழகத்தின் முக்கிய உறுப்பினராக செயற்பட்டு புலம்பெயர்ந்தாலும் இன்றுவரை தமிழர்விடுதலைக்கான செயற்பாடுகளில் முழுநேரமாக தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.இவரது ஒரே மகனும் 1986ல் இலங்கையில் சிறைவாசம் இருந்து அதனால் பாதிக்கப்பட்டு தற்போது புலம்பெயர்ந்திருந்தாலும் இதுவரையில் சிறைவாசத்தின் பாதிப்புகளுடனேயே வாழ்கின்றார்.

இவரது கணவரும் அரசியல் நெருக்கடிகளால் 1996ல் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.இவ்வாறு இவரது குடும்பமே விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது இளமைக்காலத்திலேயே அரசியலில் பிரவேசித்த அம்மையார் தனது மே-டைப் பேச்சாற்றலால் எமது தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சாரத்தை மேற்கொண்டு அவர்களை தமிழரசுக்கட்சி என்ற ஒரு கொடியின் கீழும் பின் தந்தையால் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற



படிப்பகம்

www.padippakam.com



தாரக மந்திரத்திற்குள் மக்களை ஒன்றுபடுத்தியும் செயற்பட்டார்.

வீட்டிற்குள் முடங்கிக்கிடந்த எமது தமிழ் சமூக பெண்களை வீடுவீடாகச் சென்று செய்த பிரச்சாரத்தாலும், நேர்த்தியான தனது மேடைச் சொற்பொழிவுகளாலும் வெளியுலகைப் பற்றி சிந்திக்க வைத்தார்.இந்த எம் பெண்களையும் தமிழ் மக்களின் போராட்டத்தில் வெறும் பார்வையாளராக மட்டுமில்லாமல் பங்காளராக வெளிக்கொணர்ந்தார்.இவரும் பறிபோய்க் கொண்டிருக்கும் எமது எல்லைபுற பிரதேசத்தை சேர்ந்தவரானதால் இந்த எமது வடகிழக்கு பிரதேசத்தில் மாறிமாறி வரும் இலங்கை சிங்களபேரினவாத அரசால் காலத்திற்கு காலம் நடைபெற்றுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிராகரித்தும் ,கண்டித்தும் தனது கருத்துக்களை -ஆவேசங்களை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் தமிழ் குடியேற்றத் திட்டங்களை தமிழரசுக்கட்சிமூலமும் பின் காந்தீயத்தின் மூலமும் செயற்படுத்துவதில் முழுமூச்சாக செயற்பட்டார்.

இவ்வாறாக பேச்சில் மட்டுமல்லாமல் ஒரு செயல்வீரராகவும் இருந்து செயற்பட்டு ஒருவருடம் சிறைசென்று மீண்டுவந்து 1985ற்கு பின்பு எமது தமிழ் தலைமைகள் தாம் என்று சொல்லப்பட்ட அரசியலின் வன்முறை போக்கை பார்த்து தன்னுள்ளேயே கண்ணீர்வடித்து துவண்டு போயிருந்தார். அவரின் கடைசிக்கால கருத்துக்களில் கூட தமிழ் மக்களின் விடிவுக்காய் தமிழ்தலைமைகளின் ஒற்றுமையையே வலியுறுத்த நின்றார்.

எனவே அவரினதும் அவரைப்போன்ற விடுதலைக்காய் தம்மை அர்ப்பணித்த - உயிர்பறிக்கப்பட்ட இல்லதொழிக்கப்பட்ட எம்மவர்க்காகவாவது எமது ஒன்றுபட்ட ஒற்றுமையை வேண்டி நின்போம். இது தான் நாம் இவர்களைப்போன்றோருக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும்.



இவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் இவரினது குடும்பத்தார் - நண்பர்கள் - தோழர்கள்அனைவருடனும் எனது கண்ணீர் அஞ்சலியை பகிர்ந்து கொள்கின்றேன்



படிப்பகம்

www.padippakam.com



# வீர சுப்பிரமணியம்

*கனடா தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமைப்பாளர.*

1961 ஆண்டளவில் திருகோணமலையில் பா.உ.திரு. இராஜவரோதயம் அவர்கள் வீட்டில் ஒரு அரசியல் சந்திப்பு நிகழ்வில் 22 வயது மதிக்கத்தக்க ஒரு இளம் பெண்மணியை பெண் கைக்குழந்தையுடன் முதல் முதலில் சந்தித்தேன். அன்றைய கால அறவழிப் போராட்டத்தில் வடகிழக்கு தழுவிய பெரியதொரு சத்தியாக்கிரக போராட்டத்தை எமது தமிழ் தலைமைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களும் வீதி வீதியாக இறங்கி செயற்பட்ட காலம். ஆனால் இப்போராட்டம் திருமலையை பொறுத்தளவில் ஆண்களை மையப்படுத்தியதாகவே அமைந்தது. ஆனால் இன்று இந்த முதல் பெண்ணை துருதுருப்பான மிடுக்கான ஒரு நேர்த்தியான தோற்றத்தில் காணும்போது ஆச்சரியமாக இருந்தது. நான் சகஜமாக பேசியதில் தான் லோறன்ஸின் மனைவி பிலோமினா என்பதையும், கணவரின் மூலம் இங்கு வந்ததாகவும் குறிப்பிட்டார். பின்பு அவரின் பேச்சிலிருந்து அவரின் ஆற்றலும் ஆளுமையும், தமிழுணர்வும் வெளிப்பட்டது. அன்றைய எனது வயது 20 ஆக இருக்கலாம் அன்று தொட்ட 'அக்கா' என்ற அரசியல் பந்தம் ஆலமரமாய் எமது கடைசி சந்திகள் பிரிவுவரை நீடித்தது.



அதுபோல் லோறன்ஸ் அண்ணரை எனக்கு முதலே தெரியும் என்பதால் அவரின் மனைவி என்றதும் தமிழுணர்வுள்ள நல்லதொரு பொருத்தமான தம்பதியர்தான் என கணக்குப்போட்டேன். அன்று எமது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூட இல்லாத மோட்டார் வாகனம் ஒன்றை லோறன்ஸ் அண்ணை சொந்த வாகனமாக தானே சாரதியாக தொழில் செய்தார். இந்த வாகனம் தான் எமது அரசியலில் எத்தனையோ ஆயிரம் பேரை தாங்கிச் சென்றது. இந்த தம்பதியரைப்போல இந்த வாகனமும் அரசியலில் சந்திக்காத நபர்களே இல்லையெனலாம்.

இன்று 5 சகாப்தங்களை கடந்தும் இவற்றை நினைக்கும்போது சில தனிமனித வரலாறுகள் எப்படி சமூகத்தை ஆட்கொள்ளும் என்பதை லோறன்ஸ் அக்கா மூலம் உணர்கின்றேன். அன்றைய முதல் சந்திப்பில் கூடி நின்ற எம்மில் பலர் இன்றில்லை அதில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. ராஜீ, திரு மாணிக்கசபாபதி, திரு. கா.கோ. செல்லத்துரை (ரயில்வே திணைக்களத்தில் பெரிய பதவியில் இருந்த இவர். 1967ற்கு பின் திரு. நீதிராஜா அவர்களின் தலைமையில் திருகோணமலையில் உப்புவெளியில் கட்டப்பட இருந்த பல்கலைக்கழகத்தின் அத்தனை ஏற்பாடுகளுக்கும்நிறைவேற்று அதிகாரம் உள்ள அதிகாரியாக செயற்பட்டார். இதே நேரம் தனிப்பட்ட நிலையில் பன்குளத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்த போது



படிப்பகம்

திரும்பிவரும் வழியில் இலங்கைராணுவத்துடன் சேர்ந்த விமானப் படையினர் இவரை அடித்துக்கொன்று நெருப்பு மூட்டி எரியும் நெருப்பில் வீசியெறிந்தார்கள் என்ற பதிவையும் இதில் நினைவு கூறுகின்றேன். இவ்வாறான இன அரசியல் நெருக்கடிகளினூடு தான் திருமலையில் நாம் அரசியல் பண்ணினோம் என்பது மறக்க முடியாத வழுக்கள்) திரு. ராமநாதன், திரு. சிவகுரு மாஸ்ரர், திரு. தங்கவேலு, திரு. நிலாவெளி கந்தசாமி நடராஜா விதானையார், திரு. தமோதரம்பிள்ளை (இவரும் இனக்கலவரத்தின்போது ராணுவத்தால் சந்தியில் கட்டிப் போடப்பட்டு டயர் கழுத்தில் போட்டு பெற்றோல் ஊற்றி கொடுமையாக கொலை செய்யப்பட்டார்.) போன்ற மாணிக்கங்களும் மற்றும் இன்று உயிரோடிருக்கும் திரு. சோமசுந்தரம், திரு. சிவகுருநாதன் (தினக்குரல் பத்திரிகை ) ஆகியோரும், இது போன்ற சிலரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களிடையே ஒரு பெண்ணாக நின்று இத்தனை ஆண் சகோதரங்களுக்கும் சளைக்காமல் எல்லா அறவழிப் போராட்டங்களிலும் தனது குழந்தைகளுடன் இணைந்து கொண்டது மட்டுமல்லாது, இவரது உழைப்பினாலேயே மகளிரையும் இந்த சாத்வீக அரசியலுக்குள் உள்வாங்கி மகளீர் அணியை வளர்த்தெடுத்தார். தனது பேச்சாற்றலாலும் ஆளுமையாலும் வீடு வீடாக பெண்களை அணிதிரட்டி திருமலையில் தமிழரசுக் கட்சிக்குள் தனியாக பெண்கள் அணியை உருவாக்கிய தன் முதன்மை வகித்தவர் இவரே. இவர் கத்தோலிக்க மதத்தை சீராக கடைப்பிடிக்கும் ஒருவராக இருந்தாலும் தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் உள்ள பண்பாட்டு விழுமியங்களை மனதிற்கொண்டோ என்னவோ அத்தனை இந்து கோவில்களுக்கான வழிபாடுகளுக்கான மரியாதையையும் கட்சியின் அங்கத்தவரோடும், எம் சமூக மக்களுடனும் முன்னின்று நடாத்துவார். இவரின் இந்த சமய ஐக்கியத்தின் அடிப்படையால் கத்தோலிக்க சமயத்தவர் மத்தியிலும் எமது தமிழ் மக்களின் பிரச்சனையை ஆளுமைப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கா தமிழரசுக் கட்சியின் திருமலை செயற்குழு கூட்டத்தில் என்னுடனும், மறைந்த திரு. ஈழத்துநாதனுடனும் மற்றும் அந்தந்த காலகட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் உறுப்பினர்களுடனும் செயற்பட்ட நிலையில் மகளிர் அணியின் செயலாளராக இருந்து கொண்டு காலத்திற்கு காலம் பல பெண்களை உள்வாங்கியும் வளர்த்தெடுத்தும் செயற்பட்டார். இதில் மாதர் அணியின் தலைவியான அருந்ததி ஆசிரியர், செல்வி. செல்வமணிவடிவேல் (பின்னாள் கல்வி அதிகாரி இந்தியாவில் பல்கலைக்கழகங்களில் சிறப்பு கல்வியை மேற்கொண்டவர். ஒரு எழுத்தாளர். தற்போது லண்டனில் வசிப்பவர்) கன்னிப்பெண்ணாக இருந்த நிலையிலும் அக்காவால் பயிற்றப்பட்டு சிறந்த மேடைப்பேச்சாளராக பிரகாசித்த செல்வி. திலகவதி, திருமதி கண்மணி இரத்தினவடிவேல் (பிற்பட்ட காலங்களில் நகரசபை உறுப்பினராகவும் ,தற்போது ஜே..பி யாகவும் தற்போதும் அரசியலில் முன்னிற்பவர். இவர்களைப் போன்ற பல பெண்களோடு ஒன்று சேர்ந்து பயணித்தார்.

அதே போல் வடக்கின் மகளிர் நட்சத்திரமாய் மின்னிய மதிப்பிற்குரிய அமரர். அமிர்தலிங்கம் அவரது துணைவியார் திருமதி. மங்கையற்கரசி அவர்களுடனும், மட்டக்களப்பின் தவப்புதல்வி செல்வி கலாமாணிக்கம் பின் திருமதி.கலா தம்பிமுத்து

www.padippakam.com



ஆக முப்பெரும் தேவிகளாய் வடகிழக்கில் அரசியல் பரப்புரைகளை சிறப்பாக ஓடியோடி நடாத்தி வீட்டு சின்னத்தின் விளக்கு என்றுமே பிரகாசிக்க என்றும் தம்மை அர்ப்பணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கா தன் அரசியலை என்றும் தனது சொந்த தேவைகளுககாகவோ பதவிகளுக்காகவோ: பாராளுமன்ற கதிரைகளுக்ககவோ பயன்படுத்தியதில்லை என்றும் எந்தப் பதவிகளையும் நிராகரித்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமரர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜவரோதயம், மாணிக்கராஜா, நேமிநாதன், தங்கத்துரை இன்று எமது தலைவர் திருவாளர் இ.சம்பந்தன் அவர்கள் உட்பட யார் மாறிமாறி எமது தலைமைகளாக வந்நதாலும் அந்த வெற்றிகளுக்குப் பின்னாலும் அக்கா உட்பட மேற்குறிப்பிட்ட அத்தனை பேரும் எங்களைப் போன்றோரும் தான் அரசியலில் மாறாமல் வழி நடத்தினோம் என்பதை இதில் பெருமையுடன் பதிவாக்குகின்றேன்.

அக்கா அரசியலின் பிரச்சாரத்தில் மட்டுமல்ல எங்களுடன் சேர்ந்து குடியேற்றத் திட்டங்களிலும் பெரும் பங்காற்றினார் என்பது நினைவுகூறப்பட வேண்டியது. 1965 - 1967களில் திருமலையில் காடுகளை வெட்டி சில குடியேற்றங்களை மேற்கொண்டோம். அந்த நிலையில் என்னை போன்ற சிலர் உவர்மலைப் பகுதிலும். அக்காவை போன்றோர் பன்குள வீதியில் உள்ள பத்தாம் கட்டையில் கித்துலூற்று என்ற குடியேற்றத்தையும் கட்சிரீதியாக மேற்கொண்டோம். இந்த திட்டங்களுக்கு அன்று தீவிர இளைஞர்களாக இருந்த திரு.சேனாதிராஜா, தந்தையின் மகன் திரு.சந்திரகாசன், ஈழத்துநாதன் போன்றோரும் இன்னும் பல இளைஞர்களும் செயற்பட்டனர். இந்த வேலைத்திட்டங்களின் போது லோறன்ஸ் அண்ணாவின் வாகனம் தான் எல்லாமாக இருந்தது. இங்கு பணியாற்றும் எல்லோருக்குமான உணவு ஒழுங்குகளையும், சமையல் வேலைகள் உட்பட அத்தனை நிர்வாக வேலை-களையும் பிலோமினா அக்காவும், லோறன்ஸ் அண்ணையும் இழுத்துப்போட்டு ஓடி ஓடி செய்த அந்த கால உபசரிப்பையும் பங்களிப்பையும் மறக்க முடியாது. இப்படி தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க என்னென்ன வேலைத் திட்டங்களோ, காடுகளை வெட்டி காணிகளை விரிவாக்கும் பணிகளையோ இந்த திருமலை மண்ணுக்குரியவர்கள் காத்து நின்று ஒன்றுபட்டு செயற்பட்டோம் என்பதை இன்றும் நினைத்து இதன் எல்லாவற்றையுமா நாம் இழந்தோம்? என்று துடித்து நிற்கின்றோம்.



இப்படி 1961லிருந்து அக்கா 1979வரை தமிழரசுக் கட்சி பின் தமிழர் விடுதலைக் கூட்டணியாகி தலைவர்களும் மாறிமாறி வந்தாலும் தொண்டர்கள் நாங்கள் தொண்டர்களாகவே மக்களுடன் வாழ்ந்தோம். 1980ல் அக்கா காந்தீய குடியேற்றங்கள், பாலர் பாடசாலை மேற்பார்வையாளரென காந்தீய செயற்பாடுகளோடு இணைந்து கொண்டாலும் எம் மண்ணுக்காகவே செயறபட்டுக் கொண்டிருந்தார். இந்நிலையில் 1984ல் தமிழ் பிரதேசங்களில் இலங்கையரசின் கெடுபிடிகளால் முக்கியஸ்தர்களுட்பட பலரும் கைதானதில் பிலோமினா அக்காவும், ஈழத்துநாதன், டொக்டர் சத்தியமூர்த்தி உட்பட பலவிதத்தில் பலரும் கைதாகிய நேரம் நான் மயிர் இழையில் தப்பியிருந்தேன். இந்த காலகட்டத்துடன் எமது வீரம் செறிந்த திருமலையின் சாத்வீக அரசியல் அன்று முடிவுக்கு வந்தது.

www.padippakam.com



எனினும் அக்காவைப் போன்றோரும் எம்மைப் போன்றோரும் எங்கிருந்தாலும் அதே தமிழின விடுதலை உணர்வோடும் ஏக்கங்களோடும் தான் இன்னும் விடுதலைக் கனவுகளோடு தான் வாழ்கின்றோம். இந்நிலையில் அரசியலிலும் வாழ்க்கையிலும் மிகநொந்துபட்ட அக்கா பிற்காலத்தில் வெளிநாட்டில் தனது கணவர் பிள்ளைகளுடன் சிறிதுகாலம் வாழ்ந்தாலும் அந்த அந்நிய மண்ணில் ஒட்டாமல் திரும்பி வந்து எந்த மண்ணுக்காக பாடுபட்டாவோ அந்த மண்ணிலே தன்னை சங்கமிக்க பண்ணியுள்ளார். இந்த கொடுப்பினை எமக்கெல்லாம் கிடைக்காத வரம்.

எனினும் அவரின் இழப்பு தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தனிப்பட்ட ரீதியில் அக்கா என்ற சொல்லின் ஆழத்தில் எனக்கிருந்த பாசத்திற்கும் பெரும் ஈடில்லாத இழப்புத்தான். எத்தனையோ ஆண்டு ஒன்றுபட்டு இயங்கிய எம்மிருவருக்கும் என்றுமே முரண்பாடுகள் வந்து மோதியதில்லை. அவருக்கு அரசியலில் ஏற்படும் சிறுசிறு முரண்பாடுகளை கூட என்னிடம் சொல்லி அதற்கான தீர்வை எமக்கூடாகவே தேடிக்கொள்வோம்.

இப்படி கொள்கைக்காக எம் தமிழினத்திற்காக ஒரு லட்சிய பெண்ணாக வாழ்ந்து சாதித்த என் சகோதரிக்கு என்றும் என் இதயத்தில் ஓர் மரியாதைக்குரிய இடத்தை வைத்துள்ளேன். அவரின் அன்பு கணவரினதும் அருமை பிள்ளைகளுடனும் நானும் எனது துன்பத்தை பகிர்ந்து கொள்கின்றேன்.





படிப்பகம்

www.padippakam.com





# சி துண்டாயுதபாணி

*எதிர் கட்சித் தலைவர், கிழக்கு மாகாணம், திருகோணமலை*

## திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் பற்றி..

1970ம் ஆண்டுத் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போதுதான் முதல் முதலாக திருமதி பிலோமினா அவர்களை நான் அறிந்து கொண்டேன். அப்போது திருகோணமலை தொகுதியில் திரு.நேமிநாதன் அவர்களும், மூதூர் தொகுதியில் திரு.அ.தங்கத்துரையும் போட்டியிட்டனர். இதன் போது இவர்களுக்கான பிரச்சார வேலைகளில் நான் ஈடுபட்டிருந்தேன். இந்த சந்தர்ப்பத்தில்தான் முதன்முதலாக திருமதி. பிலோமினா அவர்களுடன் நட்புக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அவர் அப்போது பிரச்சார பணிகளில் முன்னின்று பணியாற்றிக் கொண்டிருந்தார்.

திருமதி.பிலோமினா அவர்கள் கட்சிக் கொள்கையில் பற்றுறுதி கொண்டவர். தனது குடும்பத்தினரையும் தனது கொள்கை வழி நடக்கச் செய்தவர். அன்றைய சூழலில் இடம்பெற்ற பல்வேறு தேர்தல்களிலும் கட்சியின் வெற்றிக்காக அரும்பாடு பட்டவர். இதன் காரணமாக அன்றிருந்த முக்கிய தலைவர்களின் அபிமானத்தையும் அவர் பெற்றிருந்தார். திருமதி பிலோமினா கட்சித் தொண்டர்களுடனும் மக்களோடும் இனிமையாகப் பழகிய ஒருவர். இது அவரின் சிறப்பாகும். எனது பணிநிமித்தமாக நான் திருகோணமலையை விட்டு வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டதால், அவருடனான தொடர்புகள் குறைந்தன. எனினும் அவரது அரசியல் செயற்பாடுகள் பற்றிய செய்திகளை நான் அவ்வப்போது செய்திகளாக கேள்விப்பட்டிருக்கிறேன். இடைக்கிடை அவரை சந்தித்தும் கொள்வேன்.

சமூக வழிகாட்டலிலும் தலைமைத்துவத்திலும் பெண்களின் பங்கு மிகவும் குறைவாகவிருந்த ஒரு காலகட்டத்தில் பிலோமினா அவர்களது சமூக ஊடாட்டம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்றாகும்.

அவர் எம்மைவிட்டு மறைந்துவிட்டாலும் அவர் ஒரு பெண் என்னும் நிலையில் எங்களுடைய உரிமைசார் அரசியலுக்கு துணிவுடன் ஆற்றிய பங்களிப்பும் ஈடுபாடும், நமது அடுத்த தலைமுறைக்கு ஒரு உத்வேகத்துக்குரிய செய்தியாக இருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.





படிப்பகம்

www.padippakam.com





# ஐ தி சம்பந்தன்

உதவிச் செயலாளர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு (பிரித்தானியா)

## இலட்சியத்திற்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த திருமதி. பிலோமினா லோறன்ஸ்

ஒரு இலட்சிய மேதையாக இவ்வுலகில் 72 ஆண்டுகள் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த திருமதி. பிலோமினா லோறன்ஸின் இழப்பு தமிழரசுக் கட்சிக்கு ஒரு பேரிழப்பாகும். தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக்கட்சியில் இணைந்தவர்கள் இலட்சியப் பாதை தவறாதவர்கள். அந்த வழி வந்த ஒரு தொண்டர் தான் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள். இவர் யாழ் மண்ணில் பிறந்து வரலாற்றுப் பெருமை பெற்ற திருகோணமலை மண்ணில் வாழ்ந்து வந்தவர். இந்த மண்வாசனை கொண்டவர்கள் தமிழ் உணர்வு நாட்டுப்பற்றுக் குன்றாதவர்கள். அந்த உணர்வும் நாட்டுப்பற்றும் மிக்க திருமதி பிலோமினா வடகிழக்கை இணைக்கும் பாலமாக விளங்கியவர்.



நானும் இளமையிலிருந்து தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததால் திரு-மலை திரு. ஈழத்துநாதன், திரு. வீரசுப்பிரமணியம், திருமதி. பிலோமினா லோ-றன்ஸ் ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. 1970 - 1977 இல் நான் கட்சி அலுவல்களுக்காகவும் தொழிற்சங்க விடயமாகவும் திருமலைக்குச் சென்று வரும் காலத்தில் திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரது அரசியல் ஈடுபாட்டையும் பேச்சு ஆற்றலையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

ஒரு இளம் பெண் பேச்சாளர், தமிழரசுக் கட்சிப் பற்றாளர் என்று பெயர் பெற்று விளங்கியவருடன் நானும் இரு முறை மேடையில் பேசிய ஞாபகம்.. இந்த வாய்ப்பை ஏற்படுத்திய அருமை நண்பர் திரு. ஈழத்துநாதன் அவர்களை மறக்கமுடியாது. இரு நிகழ்வுகளும் பல வருடங்களாகியும் எனது இதயத்தை விட்டு அகலவில்லை. அந்த நினைவு அலைகளை மீளச் சிந்திப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர் அன்னாரது அருமை மகள் ஜென்னி அவர்கள். இவர் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வருபவர்.

நூலைப் போல் சேலையும் தாயைப்போல் பிள்ளையும் என்பதற்கு இணங்க அவரும் சமூக அரசியலில் ஈடுபாடு கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகி-றார். சில வருடங்களாக அவருடன் அடிக்கடி தொடர்புகொண்டு வரும் போது



படிப்பகம்

www.padippakam.com



தனது தாயைப் பற்றிக் கூறுவார். தாய்ப் பாசம் மிக்க மகளாக வயது வந்த தாயாரின் நலனில் அக்கறை உள்ளவராக இருந்து வந்தார்.

நான் இலங்கையில் நிற்கும் போது அருமைத் தாயார் திருமதி. பிலோமினா லோறன்ஸ் 17.07.12 அன்று மறைந்தார் என்ற செய்தி, இலண்டன் வந்த பின்பு தான் அறிந்தேன். இவரது மகள் ஜென்னி என்னை தொடர்புகொண்ட போது அந்த இழப்பை அறிந்து வேதனை அடைந்தேன்.

அன்னாரது இறுதி யாத்திரையில் எல்லா தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கு பற்றி அஞ்சலி செலுத்திய காட்சி அவரது அரசியல் ஈடுபாட்டின் வெளிப்பாடாகும்.

தமிழர்களுடைய அரசியலில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான கால கட்டத்தில் அன்னாரது மறைவு தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பெரும் இழப்பாகும்.

எமது மதிப்புக்கும் உறவுக்கும் பாலமாக இருந்த திரு. ஈழத்ததுநாதன் அவர்கள் திருமதி. பிலோமினா லோறன்ஸை எனக்கு அறிமுகம் செய்யும் போது திருமலையில் தமிழ் உணர்வுமிக்க பேச்சாளர் என்றார். அவரது பேச்சைக் கேட்ட பின்னர் அதை அறிந்துகொண்டேன். இவர்கள் போன்றவர்களின் செயற்பாட்டால் வரலாற்றுப் பெருமை பெற்ற திருகோணமலை தமிழர் தேசமாக விளங்குகிறது.

தந்தை செல்வா, 1951 இல் தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு திருமலையில் நடைபெற்ற போது ஆற்றிய உரையில் சரித்திரச் சிறப்பு மிக்க திருகோணமலையில் இம்மாநாடு நடப்பது நீர்வளம், நில வளம் எல்லாம் நிறைந்த இப் பூமியில் தமிழ் பேசும் இனம் பல நூற்றாண்டுகளாகச் செழிப்பாக வாழ்ந்து வந்திருக்கிறது. அந்தப் பெருமையை, மகிமையைக் காப்பாற்றுவதற்குத் தகுதி உள்ளவர்கள் திருகோணமலை மக்களே! தமிழ் இனத்தைக் காப்பதற்கு இங்கிருக்கும் ஆர்வத்தை நான் மெச்சுகின்றேன். திருகோணமலை வாலிபரின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் நான் வணக்கம் செலுத்துகின்றேன். என்றார் தந்தை செல்வா.

அவர் கூறிய தமிழ் உணர்விற்கும், வீரத்திற்கும், தியாகத்திற்கும் இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி. பிலோமினா லோறன்ஸ். எல்லோரையும் அன்பாக அரவணைக்கும் பெரும் குணம் படைத்தவர். இறுதிவரையும் தமிழரசுக் கட்சியின் இலட்சியத்திற்காக வாழ்ந்து, திருகோணமலைக்குப் பெருமை தேடிய இலட்சிய மேதை.

அன்னாரது இழப்பு தமிழரசுக் கட்சிக்கும், திருகோணமலை மக்களுக்கும், மேலாக குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிராத்திப்போமாக.



படிப்பகம்

www.padippakam.com





# சே சிறிஸ்கந்தராஜா

பிரதித் தலைவர், நகரசபை, திருகோணமலை

திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களை எனக்கு 1964 ம் ஆண்டு முதல் அதாவது எனது 16 வயது முதல் நன்றாகத் தெரியும். 1964 இல் ஏற்பட்ட புயலினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காக இளைஞர்களாக இருந்த எம்முடன் இணைந்து பங்காற்றியவர். 1970 ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழரசு மாதர் முன்னணி தலைவியாக செயலாற்றியவர். பெண்கள் அரசியலில் ஈடுபட திருமலையில் காரணமாக இருந்தவர். மேடைப் பேச்சில் வல்லவரான இவர் தமிழினத்தின் விடுதலைக்காக மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அக்காவுடன் இணைந்து பங்காற்றியவர்.

இதன் பின்பு 1970 இல் நகரசபைத் தேர்தலில் நான் 3 ம் வட்டாரத்தில் போட்டியிட்ட சமயம் எனது வெற்றிக்காக முழுநேர பங்களிப்பை வழங்கியவர். அவரது அன்புக் கணவர் திரு.லோறன்ஸ் அவர்கள் 2 ஸ்ரீ 6990 எனும் மொறிஸ்மைனர் கார் வைத்திருந்தார். அந்தக் கார் ஒரு தமிழ்த் தலைவருக்கே இல்லை. குடும்பமாக திருகோணமலை மண்காக்க அஹிம்சை வழியில் செயலாற்றிய பிலோமினா லோறன்ஸ் அக்கா அவர்கள் பின்னாளில் காந்தீயத்துடன் இணைந்து பணியாற்றி வந்து இன்று அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எமது இன விடுதலைக்காக அவர் கண்ட கனவு நனவாகட்டும்.





படிப்பகம்

www.padippakam.com





# ச செல்வராசா [சுப்ரா]

*நகராட்சி மன்ற தலைவர் திருகோணமலை*

திருமதி லோறன்ஸ் பிலோமினா அவர்கள் எமது கட்சியின் மூத்த உறுப்பினராவார். அவர் தனது சேவையை எமது பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ பா. நேமிநாதன் காலத்திலும் அதன் பின்னர் கௌரவ இரா சம்மந்தன் அவர்கள். கௌரவ அ. தங்கத்துரை அவர்கள் காலத்திலும் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினராக காணப்பட்ட ஓர் இலட்சிய மங்கை.

கட்சியின் கொள்கை விளக்கங்களில் சட்ட திட்டங்களிலும் அசைக்க முடியாத பற்றுறுதி கொண்டவர். செயல்பட்டவர். மேடைகளில் அவரின் பேச்சை மக்கள் விரும்பிக் கேட்டனர். தலைவர்களுடன் கட்சி செயற்பாட்டில் விட்டுக்குக் கொடுக்காமல் வாதிட்டவர். கட்சியின் பல உறுப்பினர்கள் அழிந்துபோனவர்களில் அவர்களின் பங்கும் செயல்பாடும் மிகவும் போற்றத்தக்கது. அன்னாரின் குடும்பமே திருகோணமலை மண்ணில் மிகவும் விரும்பி நேசிக்கப்பட்ட குடும்பமாகும்.



1964 ம் ஆண்டில் புயல் காற்றின் போதும் 1983 ம் ஆண்டு இன வன்செயலின் போதும் கட்சியின் உறுப்பினர்களுடன் அவர்களின் செயல்பாடு போற்றத்தகுந்த வகையில் அமைந்திருந்தது. என்பது திண்ணம்.

எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார். எல்லோருக்கும் உதவியும் செய்வார். வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் சமய சமூக தொண்டுகளிலும் ஈடுபட்டு சேவை செய்வார். திருகோணமலையில் உயிர் வாழ்ந்த காலம் முழுவதும் சகல இனத்துடனும் நெருங்கிப்பழகி சமய,அரசியல்,சமூக, பொதுத்தொண்டுகளில் பங்காற்றியவர். என்பதிலும் இலங்கை தமிழரசுக்கட்சியின் வீர மங்கயுமாவார்.



படிப்பகம்

www.padippakam.com






# கண்மணி இரத்தினவடிவேல்

*சமாதான நீதவான், கௌரவ உறுப்பினர் (முன்னாள்) நகராட்சி மன்றம், திருகோணமலை.*


## மகளிருக்கு பெருமை சேர்த்தவர் திருமதி. பிலோமினா லோறன்ஸ் அக்கா

திருமதி. பிலோமினா லோறன்ஸ் அக்காவின் காலத்தில் திருமலையில் தான் மகளிர் அமைப்பு உருவானது. ஆவர் தனக்கே உரித்தான பேச்சு திறமையினால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகளிர் அமைப்பின் செயலா-ளராக செயற்பட்டு கட்சிக்கு வலுச் சேர்த்தார். கட்சிக்கு பெரும் தூணாகவே தன்னை ஆக்கிக் கொண்ட பெருந்தகை. மண்பற்று என்றால் என்ன என்பதை அவரிடம் தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடன் இணைந்து செயற்பட்ட அந்த நாட்களை என்னால் மறக்க முடியாது. மகளிரை வழிநடத்துவதிலே முன்னின்று செயற்பட்டு தன்னம்பிக்கை, துணிச்சல், அஞ்சாமை என்பவற்றை எமக்கு புகட்டியவர் என்று சொன்னால் அது மிகையாகாது.



காலத்தின் கோலத்தினால் வெளிநாடு சென்ற போதும் தனது இறுதிக்காலத்தை தான் பிறந்த மண்ணில் கழிக்க வேண்டும் என்பதற்காக மீண்டும் திருமலைக்கே வந்து 17.07.2012 இல் அவர் விருப்பப்படியே தாய்மண்ணுடன் இரண்டறக் கலந்து விட்டது எனது நெஞ்சை தொட்டு நெகிழ வைத்த ஒரு நிகழ்வாகும். லோறன்ஸ் அக்கா ஒரு பெண்ணாக, இல்லத்தரசியாக வாழ்ந்த போதும் திருமலை மண்ணுக்கும் தமிழ் மக்களுக்கும் தன்னாலான உச்ச கட்ட சேவையினை வழங்குவதிலே பின்னிற்கவில்லை.

ஆகவே இவர் புகழ், நினைவலைகள் என்றென்றும் இந்த மண்ணின் சரித்திரத்திலே நிரந்தரமாக இடம் பெறும்.

இறந்தும் இறவா சான்றோர்களுள் இவரும் ஒருவர் என்று திருமலை மாவட்ட மகளிர் ஒன்றியத் தலைவி என்ற வகையில் கூறுவதில் பெருமை அடைகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com





# பொன் சத்தியசீலன்

*தமிழ் மாணவர் பேரவையின் முதல் தலைவர், லண்டன்*

எமது தமிழினத்தின் போராட்ட வரலாற்றில் திருகோணமலை மண் எமக்கு அடையாளம் காட்டிய வீறு கொண்ட ஒரு பெண் என்றால் லோறன்ஸ் அக்கா என்று எல்லோராலும் அழைக்கப்படும் திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களே!

தமிழரசுக்கட்சியின் முக்கிய செயற்பாட்டாளரான இவர், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் விசேடமாக பெண்கள் மத்தியிலும் வடகிழக்கு மாகாணங்களில் நெஞ்சுரம் செறிந்த மேடைப்பேச்சாளராக வலம் வந்தார்.

'வீடு' என்ற சின்னத்திற்கு நேரே புள்ளடி போடுங்கள் என்ற தமிழரசுக்கட்சியின் தாரக மந்திரத்தை நினைவுகூறுவோமானால் அதன் எண்ணப்பாட்டில் எமக்குத் தெரிவது லோறன்ஸ் அக்காவின் முகமும்,அவரின் ஆணித்தரமான அரசியல் பிரச்சார முழக்கமும் தான். திருமலையில் மதிப்பிற்குரிய இராஜவரோதயம், மாணிக்கராஜா,நேமிநாதன்,தங்கத்துரை, சம்பந்தன் என்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முதற் கொண்டு தந்தை செல்வா, அமிர் அண்ணா போன்ற அத்தனை தலைமைகளோடும் ஈடுகொடுத்து பயணித்து அவர்களின் வெற்றிகளுக்குப் பின்னாலும் அனைத்து தமிழ்பேசும் மக்களின் முன்நகர்த்தலில் முன்னோடிகளில் பெண் என்ற நிலையில் குறிப்பிடத்தக்க ஒருவராகவும் விளங்கியவர்.



திருகோணமலையில் வீர சுப்பிரமணியம், மறைந்த ஈழத்துநாதன், சிறீஸ்கந்தராஜா போன்ற சக செயற்பாட்டாளர்களோடு ஈடுகொடுத்து அரசியலை நடாத்தியது மட்டுமல்லாது தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழீழ விடுதலை இயக்கம் (TLO) தமிழ் மகளிர் பேரவை போன்ற இறுதியில் இயக்க வடிவங்கள் பெற்ற இளைஞர்கள் வரை ஆதரவு கொடுத்து தனது கொள்கையில் நின்று எல்லோர் மத்தியிலும் தன் உறுதி தளராது செயற்பட்டவர்.

இவ்வாறு மண்ணையும் மக்களையும் நேசித்த இவர்17.07.12ல் தான் நேசித்த மண்ணிலே தன் மூச்சினை நிறுத்திக் கொண்டார்.அவரின் வீரம் செறிந்த பேச்சும் - மூச்சும் அம் மண்ணிலே சங்கமித்ததை நினைவுகூர்ந்து என் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com





# ஆ ரகுபதி பாலசிறீதரன்

*முன்னாள் அகில இலங்கை தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர்*

## அமரராகிய எனது சகோதரி பிலோமினா லோறன்ஸ் அவர்கட்கு கண்ணீர் அஞ்சலிகள்!

எமது தமிழ்பேசும் மக்களின் போராட்டவரலாற்றில் 1958ற்கு பிற்பட்டகாலங்கள் மாறிமாறி வந்த இனவாத அரசின் செயற்பாடுகளால் தமிழ் மக்கள் தமது உரிமைக்காக தமிழ் தலைமைகளுடன் சேர்ந்து அறவழிப்போராட்டங்களை மேற்கொண்டனர்.இந்த காலகட்டத்தில் பெண்களின் முன்னணி வரிசையில் ஒரு சிலரே முன்நின்றனர்.இதில் குறிப்பிடத்தக்கவர் நாம் எல்லோரும் அக்கா, அக்கா என்று அன்புடன் அழைக்கும் திருமதி.பிலோமினா லோறன்ஸ் அவர்களே.இந்த தமிழ் மக்கள் போராட்டத்தில் 1970ற்கு பிற்பட்ட காலத்தில் தமிழ் இளைஞர் பேரவை,தமிழ் மகளிர் பேரவை என இளைஞர் அமைப்புக்கள் முகிழ்ந்தெழத் தொடங்கிய காலம். நாம் எல்லோருமே அகிம்சை வழியை முன்னெடுத்த வர்கள்தான். காலப்போக்கில் பலகூடறாக பலவழிப்பாதையாக எமது போராட்டம் பிரிந்து சென்றது தவிர்க்க முடியாததானது.



இந்நிலையில் நான் அகில இலங்கை தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளராக செயலாற்றிய நிலையில் எமது அரசியல் வாழ்வில் அக்காவும் எம்முள் ஒருவரானார்.எம்மை விட மூத்தவராயினும் இளைஞராகிய எமக்கு என்றும் முன்னோடியாகவும்,எமது அரசியல் பாதைகளை புரிந்து கொண்டு எமக்கு எல்லாவிதத்திலும் ஈடுகொடுத்தும் செயற்பட்டார்.தலைமுறை இடைவெளியில் விரி சல் ஏற்படாதவாறு எல்லோரையும் அரவணைத்து செயற்பட்டமை குறிப்பிடத் தக்கது. அவர் ஒரு சிறந்த மேடைப்பேச்சாளராக இருந்தமையால், நானும் அமைப்பாளராக மாவட்டம் மாவட்டமாக திரிந்து மேடைகளில் சொற்பொழி வாற்றுவதன் மூலம் நாம் இருவரும் ஒரே பாதையில் பயணித்துள்ளோம். திருகோ ணமலை என்று போனால் அது அக்கா வீடாக மட்டும்தான் இருக்கும். அக்காவின் கணவர் லோறன்ஸ் அண்ணர் எங்களை வழிப்பயணத்திலிருந்து வரவேற்பது தொடங்கி அக்கா வீட்டின் விருந்துபசாரம் வரை குடும்பமாக அவர்கள் அனைவரி-னதும் உபசரிப்பை நான் மட்டுமல்ல திருமலைக்கு சென்ற எந்த தலைவர்களும், எந்த இளைஞர்களும்,எந்த தொண்டர்களும் மறக்க முடியாதது.

இவ்வாறு போராட்ட வரலாற்றில் முக்கிய இடம்பெற்றிருந்து கடைசிவரை தனது மண்ணை நேசித்து இந்த மண்ணிலே மறைந்த லோறன்ஸ் அக்காவிற்கு எனது கண்ணீர் அஞ்சலியையும் அவரைப்பிரிந்து துயரும் லோறன்ஸ் அண்ணர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரினருக்கும் ஆறுதலையும் எனது குடும்பம் சார்பாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

www.padippakam.com



# சீ ருூ

வழக்கறிஞர், லண்டன்

## அன்புத் தங்கை ஜென்னிக்கு ஒரு மாஜிப்போராளியின் மடல்.!

பால் என நீ அழுதபோது பால் தந்த உன் தாய்!
பசியென வந்தபோது பல ஈழப்போராளிகளுக்கு உணவளித்தவள் உன்தாய்!
ஈழத்தாயாக கனவுடன் அலைந்தவள் உன் தாய்!
இறுதிவரை ஈழக்கனவினை சுமந்தவள் உன்தாய்!

உன் தாயின் பெருமையை ஈழப்போராளிகள்
என்றும் நினைத்திருப்பர்.
உன் தாயின் மறைவு உனக்கு மட்டுமல்ல!
உலகத் தமிழருக்கும் ஓர் சோகச் செய்திதான்.





படிப்பகம்

www.padippakam.com





# அ வரதராஜபெருமாள்

*இணைந்த வடகிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர்*

## எம்மை அரவணைத்து நின்ற சகோதரிக்கு எமது கண்ணீர் அஞ்சலி

திருமதி பிலோமினா லோரன்ஸ் என்னும் பெயர் திருகோணமலைத் தமிழர்களால் இன்னும் பல தசாப்தங்களுக்கு மறக்க முடியாத ஒரு பெயர் என்பதில் சந்தேகமில்லை. அவர் திருகோணமலையில் இயற்கையெய்தினார் எனக் கேள்விப்பட்ட போது எனது மனம் ஒரு நல்ல சகோதரியை திடீரென இழந்து விட்ட தாக்கத்தைத் தந்தது. அதே கணநேரத்தில் நாங்கள் இளம் அரசியல் இயக்க செயற்பாட்டாளர்களாக இருந்த காலத்தில் அவரும் அவரது குடும்பத்தவர்களும் எங்களுக்கு எவ்வாறெல்லாம் ஆதரவாகவும் எமது வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பாகவும் இருந்தார்கள் என்பது ஒரு திரைப்படம் போல் ஓடி மறைந்தது. அவரை நாங்கள் அன்போடு அக்கா என்று அழைத்ததற்கிணங்க அவர் எங்களுக்கு மிகுந்த சகோதர பாசத்தோடும் எமது அரசியற் செயற்பாடுகளுக்கு பெரும் அனுசரணையாகவும் இருந்தார்.



அன்றைக்கு ஈழப்போராளிகள் என்போரை வீட்டுக்குள் அழைத்து சாப்பாடு தருவதற்கு தங்க இடம் தருவதற்கு கைவிரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கே குடும்பங்கள் இருந்தன என்பதை இங்கே நான் குறிப்பிட்டேயாக வேண்டும். பெரும் அரசியற் தலைவர்களோடு பழகிய சகோதரி பிலோமினா லோரன்ஸ் அவர்கள் எங்களை வயதில் இளையவர்களான இவர்கள் எதைச் சாதிக்கக்கூடியவர்கள் என்ற சந்தேகம் எதுவுமின்றி எமக்கு உறுதுணையாக உற்சாகம் தந்தவர்களில் ஒருவராக இருந்தவர்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தமிழரசுக் கட்சியின் காத்திரமான பாத்திரம் மறுக்கப்படவோ மறைக்கப்படவோ முடியாத ஒன்றாகும். திருமதி பிலோமினா லோரன்ஸ் அவர்கள் திருமலை மாவட்டத்தில் இந்தத் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவர். இந்த விடயம் இன்றைக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர்களாக இருப்பவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும் என்பது கேள்விக் குறியே. தமிழரசுக் கட்சியின் பிரதான பெண் மேடைப்பேச்சாளர்களில் யாழ்ப்பாணத்துக்கு திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களைப் போல மட்டக்களப்புக்கு திருமதி கலா தம்பிமுத்து அதைப்போலவே திருகோணமலையின்



படிப்பகம்

www.padippakam.com



பிரதானமானவராக திருமதி பிலோமினா லோரன்ஸ் அவர்களே திகழ்ந்தார்கள் என்றால் மிகையாது.

அவரை நானும் எனது இளம்கால அரசியல் நண்பர்களும் அக்கா என்றே உரிமையோடு அழைப்போம். அவர் அதே அளவு சகோதர பாசத்தோடு நாம் திருகோணமலை சென்ற வேளைகளிலெல்லாம் உணவு தந்து, அரசியல்ரீதியில் உற்சாகம் தந்ததோடு எமக்கு அரசியல் ரீதியாக அவரறிந்த பலரையும் அறிமுகமும் செய்தவர். அவரது குடும்பம் பணவசதி படைத்த குடும்பம் அல்ல. ஆனாலும் விருந்தோம்பலுக்கு ஓர் உதாரணமாக உயர்ந்த மனம் படைத்த ஒரு குடும்பம். அவர் தமிழரசுக் கட்சியை திருகோணமலையில் வளர்த்தவர் அவர் திருகோண-மலை மக்கள் மத்தியில் தமிழரசுக்கட்சிக்கான செயற்பாடுகளால் புகழ் பெற்றிருந்தவர் என்றாலும் ஈழவிடுதலை இயக்கங்கள் தோன்றி செயற்பட்ட காலத்தில் கட்சி என்ற எல்லைக்கப்பால் இயக்கங்களில் செயற்பட்டவர்களுக்கு ஆதரவாக இருந்தார். இவரது குடும்பத்தவர் ஒவ்வொருவரும் இலங்கைத் தமிழர்களின் அடிப்படைச் சுதந்திரங்களுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்காகவுமான போராட்டத்தில் தியாகம் செய்தவர்கள்.

நான் வடக்கு கிழக்கின் முதலமைச்சராக திருகோணமலையில் இருந்த காலத்தில் மீண்டும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர் எந்த அரச-ியல் இயக்கத்தோடும் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாதவராக இருந்தபோதிலும் போராட்டத்தின் காரணமாக சமூகத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். அதற்காக மாகாண சபையால் ஏதாவது செய்ய முடியுமா என அவர் கேட்ட பொழுது என்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வாய்ப்புக்கிடைத்ததே என்பதற்காக எனக்குள் ஒரு திருப்தி உண்டு. ஆனால் அவர் தனக்கு மிகவும் தெரிந்த ஒருவர் முதலமைச்ராக இருக்கிறார் என்பதற்காக தனிப்பட்ட ரீதியில் எந்த உதவியையும் கேட்டதுமில்லை! எதிர்பார்த்திருக்கவும் மாட்டார் என்பேன். அப்படி நான் செய்ய முயன்றிருந்தாலும் அது அவரை அவமா-னம் செய்யும் முயற்சியாகவே இருந்திருக்கும். ஏனெனில் இந்த உயர்ந்த உள்ளங்களெல்லாம் மற்றவர்களுக்காகவே வாழ்ந்து தேய்ந்து பழக்கப்பட்டுப் பே-ானவை. அதிலேயே மகிழ்வையும் கண்டவை.

சகோதரி பிலோமினா லோரன்ஸ் அவர்கள் எனது குடும்பத்தவர் ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிந்தவர் நன்கு பழக்கப்பட்டவர் அவரது இழப்ப எனது அரசியற் குடும்பத்துக்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல தனிப்பட்டரீதியில் எனது குடும்பத்தவர்களுக்கும் ஏற்பட்ட இழப்பே. அவரது இழப்பால் அவரது கணவர் திரு லோரன்ஸ் அவர்களுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் ஏக்கத்தை எதனாலும் ஈடுகட்ட முடியாது. சகோதரி பிலோமினா லோரன்ஸ் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துதான் சென்றிருக்கிறார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி நிம்மதி அடைவோம். அவர் மக்கள் மனங்களில் மட்டுமல்ல இயற்கையிலும் ஒரு நட்சத்திரமாகவே வாழ்வார்.





படிப்பகம்

www.padippakam.com





# கி பி அரவிந்தன் (பிரான்ஸிஸ்)

*ஈரோஸ் அமைப்பின் முன்னாள் செயற்குழு உறுப்பினர். பிரான்ஸ்*

## 'பிலோமினா அக்கா'

திருக்கோணமலையில் இருந்து அரசியல் கட்டுரைகள் எழுதிவரும் எனது இளம் நண்பர்களில் ஒருவரான யதீந்திராதான் அக்கா காலமான செய்தியை அறியத்தந்திருந்தார். பிலோமினா அக்கா மெல்ல மெல்ல என் நினைவரங்கில் உயிர்த்தெழ தொடங்கினார்.

அது ஒரு காலம் எழுபதுகளின் முற் கூறு நாற்பதாண்டுகளுக்கு முந்தியது. ஈழத் தமிழரின் அரசியல் போக்கில் சந்தி பிரித்த, பிரிந்த காலம். என்னொத்தவர்களும், எங்களுக்கு சற்று மூத்த அண்ணன்மார்களும், சற்று இளைய தம்பிமார்களும் கொண்டதான ஒரு கூட்டுக்கலவையான தலைமுறை முகிழ்ந்து அரசியல் களத்தில் கால் பதித்திருந்தது. சந்தி பிரித்தது.



யாழ்ப்பாண குடாநாட்டினுள் முகிழ்ந்த வடலிகளான அந்த இளந்தலைமுறை குடாநாட்டின் வெளியேயும் கால்பரப்பியபோது திருக்கோணமலை நகரில் அவர்களின் முதல் தரிப்பிடமாக லோறன்ஸ் - பிலோமினா தம்பதியினரின் வீடு மாறியது.

தமிழரசுக் கட்சியினதும் தமிழர் கூட்டணியினதும் தலைமை மீதான நம்பிக்கை கொண்ட தீவிர செயற்பாட்டாளர்களான லோறன்ஸ் - பிலோமினா தம்பதியினர் இளம் தலைமுறையினராகிய எங்களை வரவேற்றதும் விருந்தோம்பலுடன் நட்புணர்வு கொண்டதும் தங்குமிட வசதியளித்ததும் அவர்களது உயர் பண்புகளாகும்.

ஈழத் தமிழரின் அரசியல் போக்கு பற்றிய அவர்களுடனான விவாதங்களின் போது, நாங்கள் இளம்பருவ கோளாறுடன் துடுக்குத்தனமான பதிலளித்ததையும், நாவி னால் சுட்டு காயங்கள் ஏற்படுத்தியதையும் பெரிதுபடுத்தாமல், இன்முகம் மாறாது இயல்புடன் இருந்தது நினைவுக்கு வருகின்றது.

அந்த நிகழ்வுகளை இப்போது நினைக்கையில் குற்ற உணர்வில் என் நெஞ்சு குறுகுறுக்கின்றது. சொந்த வண்டி ஓட்டுனரான லோறன்ஸ் அண்ணரும், திருக்கோணமலை மாவட்டத்தில் மேடைதோறும் தன் பேச்சாற்றல் மூலம் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com



பரப்புரையாற்றிய பிலோமினா அக்காவும் இணைபிரியாத தம்பதியினராக காவிய வாழ்வை வாழ்ந்தனர் என்றால் மிகையில்லை.

பிலோமினா அக்கா புகழ் வெளிச்சம் தேடிய மேடைப் பேச்சாளரோ பரப்புரையாளரோ அல்ல. எதனைப் பேசினாரோ அதனை செயல்முறையிலும் காட்டும் நெஞ்சுரம் வாய்க்கப் பெற்றவர். அறவழிப்போராட்ட வழிமுறையில் களம் பலகண்டவர். எழுபதுகளின்போது திருக்கோணமலை மாவட்டத்தில் இவர் பங்கேற்காத அறவழிப் போராட்டங்களே இல்லை என்று சொல்லிவிடலாம்.

1973ம் ஆண்டில் தமிழ் இளைஞர் பேரவையால் முன்னெடுக்கப்பட்ட 'ஐம்பது நாள் ஐம்பது இடங்கள்' தொடர் பட்டினிப் போராட்ட நிகழ்வில் ஒருநாள் ஓரிடமாக திருக்கோணமலை நகரிலும் இடம்பெற்றிருந்தது.

அந்த நிகழ்வை ஒருங்கிணைப்பதிலும் வெற்றிகரமாக்குவதிலும் பிலோமினா அக்காவின் அயராத உழைப்பு என்னால் மறக்க முடியாத ஒன்றாகும். அதில் அக்கா ஆற்றிய உரை இன்றும் என் காதில் ரீங்கரிக்கின்றது. இது ஒன்றே போதும் அவரது உயிர்ப்பை எடுத்துரைக்க.

பிலோமினா அக்காவின் காதல் துணைவரான லோறன்ஸ் அண்ணரினதும் அவர்களது அன்புக் குழந்தைகளினதும் துயரினை நானும் பகிர்ந்து கொள்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com





# அன்னலிங்கம் ஐயா

*ஈழவர் ஆய்வு நிறுவனம், மதுரை. ஈரோஸ் அமைப்பின் செயற்பாட்டாளராக இருந்தவர். தர்க்கீகம் பத்திரிகையை நடத்தியவர்களில் முக்கியமானவர்.*

1975 கால கட்டத்திலிருந்து பிலோமினா லோறன்ஸ் அவர்களை எனக்குத் தெரியும் இவர் தமிழரசுக் கட்சியில் தேர்தலுக்காக பணியாற்றியதிலிருந்து இவரை நான் அறிந்து கொண்டேன். சமூகத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்றிருந்த காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக பாடுபட்டு கிராமம் கிராமமாக மேடை மேடையாக பிரச்சாரப் பீரங்கியாக செயல்பட்டவர். ஒரு பெண் வெளியில் சென்று பொது வேலை செய்தாலே பழிச்சொல்லுக்கு ஆளாகும் சமுதாய காலகட்டத்தில் இதை எல்லாம் தாண்டி மன உறுதியுடன் செயல்பட்டவர்.

தமிழர் விடுதலைக்கூட்டையின் உருவாக்கத்துக்குப் பின் தமிழர்களுக்கான தீர்வு ஈழம்தான் என்ற கோரிக்கையை முன் வைத்து 1977ல் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் தன்னை அர்ப்பணித்து இரவு பகல் பாராது உழைத்தவர் என்பது ஊர் அறிந்த செய்தி. இதன் பின்னாளில் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவான கால கட்டங்களில் எல்லா அமைப்புகளுக்கும் உதவியும் ஆதரவும் கொடுத்துள்ளார். அவர் வீட்டில் உணவருந்தாத இயக்கங்களே இல்லை என்றளவிற்கு செயற்பட்டார். அவரின் குறைந்த வருமானத்தில் இயக்கத்துக்காக உழைப்பவர்களுக்கு உதவாமல் இல்லை. இந்த உதவியைப் பெற்றதில் நானும் ஒருவன்.



இவர் என்ன கருத்து வேறுபாடுகள் இயக்கத்துள் இருந்தாலும் ஈழம் என்ற இலட்சியத்துக்காக போராடுபவர்கள் என்ற அடிப்படையில் இவரின் கருத்துக்கள் இருந்தன.

இவர் ஈழத்துப் பெண்மணிகளுக்கு ஒரு முன்னோடியாகவும் உந்து சக்தியாகவும் தமிழர்கள் பிரச்சினையில் ஒரு அத்திவாரமாகவும் இருந்துள்ளார். இவரின் சுதந்திர தாகம் இவரின் மகளான ரஜனியையும் விட்டு வைக்காது தொடர்கிறது. பிலோமினா அக்காவின் காலத்தில் ஈழம் மலராதது துரதிஷ்ரம்தான். பிலோமினா அக்காவின் இலட்சியமான ஈழ விடுதலையை வென்றெடுக்க உயிருடன் இருக்கும் நாம் அனைவரும் பாடுபடுவோம்.

அவரின் இழப்பால் கவலை கொள்ளும் குடும்பத்தினர், நண்பர்கள், தோழர்கள் அனைவருடனும் நானும் எனது வருத்தத்தையும் அனுதாபத்தையும் பகிர்ந்து கொள்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com





# ஜோசப்பின் வேதநாயகம் (துவம் அக்கா)

*தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி காலத்தில் இவர் கட்சியில் முக்கிய செயற்பாட்டாளர்.*

## மலரும் நினைவுகள்

அது ஒரு வசந்த காலம். இரவு பகலென்று பாராமல் ஓடியாடி திரிந்த காலம். சிறுவயதில் நடந்தவைகள் ஒருபோதும் அழியாதவையாகும். என்றும் மனதில் நிலைத்து நிற்கும். அவைகளை நினைத்து பார்க்கின்றேன். அந்த நாட்கள் திரும்ப வராதா என்ற ஏக்கம். 1942ம் ஆண்டு எனக்கு ஏழு வயது. என்னுடன் ஒரு பக்கத்து வீட்டு சிறுமி விளையாடுவாள். 'ராசாத்தி'என்ற அழகான பெயர் ஒல்லியான தேகம், துறுதுறுவென்ற பார்வை எல்லாம் கூடிய ஒரு வாயாடிச் சிறுமி. நான் எங்கு சென்றாலும் என்னோடு கூடவருவாள். இருவரும் மற்றச் சிறுவருடன் ஊஞ்சல் ஆடுவோம். தும்பி பிடிப்போம். சின்ன சோறு கறி மண்ணில் விளையாடு-வோம். எங்கள் குடும்பமும் அவர்கள் குடும்பமும் அன்பாக பழகிய காலம் அது.



ராசாத்தியின் தந்தை பெயர் செல்லத்துரை செபஸ்தியாம்பிள்ளை. தாயார் பெயர் அருளம்மா செல்லமுத்து. இருவரும் அழகானவர்கள். குடும்பம் ஓகோ என்று போய் கொண்டிருந்தது. ஆனால் கடவுளுக்குப் பொறுக்கவில்லை அவர்களின் வாழ்க்கையில் புயல் வீச ஆரம்பித்தது. ஏதோ ராசாத்தி படித்து முன்னேறினாள். அதன்பின் அவர்களுக்கும் எனக்கும் இருந்த உறவு விட்டுப் போய்விட்டது.

இலங்கையில் இனக்கலவரம் தொடங்கியது. திருமலையில் திருமதி. பிலோமினா. லோறன்ஸ் என்ற பெயர் முக்கியமாக அடிபட்டது. திருமலையில் தமிழின விடுதலைக்காக போராடும் குடும்பம் என கேள்விப்பட்டேன். அது ராசாத்தியின் குடும்பம் என நான் அறிய வெகு காலமாகிவிட்டது. ராசாத்தி தான் பிலோமினா என அறிந்து நான் மிகவும் சந்தோசப்பட்டேன். ஆனால் அவரின் தொடர்பு கிடைக்கவில்லை. காரணம் அந்த நேரம் நானும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றிக் கொண்டிருந்தேன்.

பிலோமினா விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றிக்கொண்டு மேடைகளில் சொற்பொழிவு ஆற்றினார். பிலோமினாவின் கணவர் லோறன்ஸ் மிகவும் நல்லவர் என கேள்விப்பட்டேன். இப்படி தம்பதிகள் அமைவது அபூர்வம்.

விடுதலை போராட்ட வீரர்கள் திருகோணமலையில் கால் வைத்தால் போதும் கணவரும் மனைவியும் அவர்களை அழைத்துச் சென்று சகல உதவிகளும்

www.padippakam.com



செய்வார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அங்கு சென்றால் அன்புடன் வரவேற்று உபசரித்து உணவு கொடுத்து பல உதவிகளும் செய்வார்கள். திரு. லோறன்ஸ் ஒரு கார் வைத்திருந்தார். அந்த காரில்தான் எல்லோரையும் ஏற்றி இறக்குவார். எல்லோரும் அந்தக் குடும்பத்தை பற்றியே பேசுவார்கள்.

நான் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்த போது திரு. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அடிக்கடி பிலோமினாவைப் பற்றி கதைத்துள்ளார். எனது மருமகன் அ. வரதராஜப்பெருமாள் முதலமைச்சராக இருந்தபோது நான் திருமலைக்கு அடிக்கடி போய் வருவேன். அப்போது பிலோமினா என்னைப் பார்க்க வருவார். லண்டனிலுள்ள என் மகனை சந்தித்த நேரமெல்லாம் என்னைப் பற்றி விசாரிப்பதாக என் மகன் தொலைபேசியில் கூறுவார்.

அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் என்னை தொலைபேசியில் அழைத்து பேசினார். காலன் அவரை நெருங்குகின்றான் என்பதை அவரின் உள்மனது சொல்லியதோ என்னவோ நானறியேன்.

தமிழினம் உள்ளவரை அவர் ஆற்றிய தொண்டையும், அவவையும் மறக்க முடியாது. மறந்தால் நாம் மனிதர்கள் அல்ல, தமிழினமும் அல்ல. அவரின் புகழ் எல்லா காலத்திலும் பேசப்பட வேண்டும். தமிழின வரலாற்றில் அவர் பெயர் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டும். அவர் மறைந்தாலும் அவர் புகழ் மறையாது.

www.padippakam.com





# தங்க மகேந்திரன்

*இளைஞர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர், தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூலவர்களில் ஒருவர். இந்தியாவில் வாழ்கின்றார்.*

12.07.2012 வியாழக்கிழமை என்னுடைய எதிர்காலம் இருண்ட காலமாக மாறிய நாள். ஏனெனில் எனது அருமை மகன் ம.சுசீந்திரன் 25 வயதுடைய இளைஞன் அவனை இறைவன் தன்னுடையவனாக்கிக் கொண்டான். எவ்வித கெட்ட பழக்கமும் இல்லாதது மட்டுமல்ல இனிய சுபாவமும், நன்னடத்தையும், அறிவு பூர்வமாகச் சிந்தித்து செயல்படும் அவனை இறைவன் தன்னுடையவனாக்கியதில் ஆச்சரியமில்லை. ஆனால் எமக்கு சொல்லொண்ணாத் துயரும் இழப்பும் வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை.

ஒவ்வொரு போராளியும் ஈழத்தின் விடுதலைக்காக போராட வந்தான் ஆனால் காலத்தின் போக்கில் நாம் ஒருவரை ஒருவர் அழிக்க முற்பட்டோம். அழித்தோம் பின்னர் நம் பொது எதிரியுடன் போட்டி போட்டுக்கொண்டு இணைந்து ஈழத்துக்காக போராடும் போராளிகளை அழித்தோம். காட்டிக் கொடுத்தோம். இதனை நாம் தொடர்ந்து செய்கிறோம்.



திருகோணமலை என்பது என்னை ஈன்ற மண். இந்த மண்தான் ஈழப் போராட்டத்தின் போது ஆரம்பம் முதல் முன்னின்று போராடிய மண். இந்த மண்ணின் மைந்தர்கள் வீரம், விவேகம், போர்க்குணம், மற்றும் தோழமை எண்ணம் கொண்டவர்கள். முக்கியமானது பதவிக்கு ஆசைப்படாதவர்கள்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்த மண்ணின் சிறப்பம்சம். நானும் முதலில் அரசியலைக் கண்டது தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் மூலம்தான். பின்னர் நாம் கட்சி சார்பற்ற தேர்தலில் ஈடுபடாத இயக்கமாக ஆரம்பித்ததுதான் 'கோணை நகர் தமிழணி இயக்கம்' பொங்கு தமிழர் இன்னல் காணப் புறப்படு புறப்படு தோழா புறப்படு என்ற தாரக மந்திரத்துடன் திருகோணமலையில் செயல்பட்டது. இந்த அமைப்புதான் திருகோணமலை இளைஞர் பேரவையாகவும் பின்னர் தமிழ் ஈழ விடுதலை இயக்கமாகவும் பரிணமித்து வளர்ந்து வந்தது. இக்கால சட்டங்களின் மூலம் தேர்தல்களில் நாம் பங்கெடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பலர் உண்மையான விடுதலையை விரும்பியதால் எமக்குத் தங்களால் இயன்ற உதவிகளைப் புரிந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு உதவி செய்தவர்களில் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சகோதர உணர்வுடன் எமக்கான உதவிகளைப் பல வழிக-ளிலும் செய்தார் நானறிந்தவரை அவர் நேரத்தைக் கவனியாது ஈழத்தின் விடுதலைக்காக தன்னால் முடிந்தவரை உழைத்தவர். அவருடைய வீட்டில் நாம் சக தோழர்களுடனும் போராளிகளுடனும் கூடிப் பேசும் நேரம் பசியறிந்து எமக்கு அன்னமிட்டவர். எமது அமைப்பில் பலர் அவர் கையால் சாப்பிட்டவர்கள்தான் என்பது மறக்கமுடியாத உண்மை.

நாங்கள் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களை அக்கா என்றுதான் அழைப்போம். சாதி, மத, இயக்க பேதமற்று எங்களுக்கு தமிழ் மக்களுக்கு உதவி-னார். அத்துடன் தனக்கொரு குடும்பம் பிள்ளைகள் உண்டு என்று நினைக்காமல் போராட்ட குணம் கொண்ட உண்மையான தமிழ் பெண் அவர். 12.07.2012 என்மகனை இழந்தேன் 17.07.2012 செவ்வாய்க்கிழமை அன்று தாய் அன்புடன் எங்களுடன் இணைந்து போராடிய எங்களால் அக்கா என்று அழைக்கப்படும் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

நம் தமிழ்மக்களுக்காக போராடும் உள்ளமும் எவ்வித பதவி ஆசை இல்லாதவருமான ஒரு தாயன்பு கொண்ட போராளியை இனிக் காண்பது அரிது. அவரது இழப்பு அவரது குடும்பத்துக்கும் மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழினத்துக்கும் பேரிழப்பாகும். இவர் ஆயுதம் ஏந்திப் போராட வில்லை ஆனால் உண்மையான பல போராளிகளை உருவாக்க உதவியவர். ஏன் உருவாக்கினார் என்றே கூறலாம்.



அவரது இழப்பினால் வாழும் அவரின் குடும்பத்துக்கு நானும் எந்தன் குடும்பமும் ஆறுதல் கூறினாலும் அந்த இழப்பு நம் ஒவ்வொருவருக்குமுண்டு தமிழை, தமிழினத்தை, தமிழீழத்தை சுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பது வெளிப்படையாகும். முக்கியமானது நம் இனத்தை, மொழியை ஈழத்தின் விடுத லையை நினைக்கும், போராடும் யாரும் இன்னொரு சக போராளியை அழிக்க முற்படமாட்டான் அவ்வாறு அழிப்பவன் அழிக்க முயல்பவன் மொழியையும் இனத்தையும் ஈழத்தையும் காப்பவனாக மாட்டான். அவன் தன் சொந்த சுயதேவைக்கு அவற்றை உபயோகிக்க முயல்பவனே.



படிப்பகம்

www.padippakam.com





# சி புஸ்பராணி

*சிறை சென்ற முதல் பெண் போராளி. 'அகாலம்' என்ற நினைவுப் பதி-வின் நூலாசிரியர். யாழ் மயிலிட்டியைச் சேர்ந்தவர். தற்போது பாரிஸில் வாழ்கின்றார்.*

ஈழப்போராட்ட வரலாற்றில் லோறன்ஸ் அக்காவின் பங்களிப்புக்கள் ஏராளம் ஏராளம். இதை எனது நூலான 'அகாலத்திலும்' குறிப்பிட்டிருக்கின்றேன். இவரது அர்ப்பணிப்புக்கள் பல வடிவங்களில் ஈழப்போராட்ட வரலாற்றில் நீக்கமற கலந்திருந்ததானது இவரோடு பழகிய அனைவருக்கும் தெரியும். ஆரம்பகாலத் தமிழரசுக் கட்சியின் அறவழிப்போராட்டங்களில் தொடங்கிய இவரது அயராத போர்க்குணம் இறக்கும்வரை தொடர்ந்து கொண்டே இருந்தது. எந்தவொரு கட்டத்திலும் இவர் இதிலிருந்து பின்வாங்கியதில்லை. தமிழரசுக் கட்சி, பின் கூட்டாக செயற்பட்ட தமிழர் விடுதலை கூட்டணியின் பிரபல மேடைப் பேச்சாளராக இருந்தது மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் மகளிர் பேரவையின் உபதலைவியாக செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அரசியலில் இரண்டு தலைமுறைகளுக்கும் மேலாக தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட இவர், திருமலை காந்தீய மேற்பார்வையாளராக இயங்கிய இறுதிக்காலத்தின் போது கொடுமையான சிறை வாழ்க்கையையும் அனுபவித்தார்

1975இல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலின் போதே இவரை முதலில் நான் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இதற்கு முன்னரே இவரைப்பற்றி நிறையவே கேள்விப்பட்டருக்கின்றேன். 1973ம் ஆண்டு 'தமிழ் இளைஞர் பேரவை' ஆரம்பிக்கப்பட்டபின் திருகோணமலைக்குப் பிரச்சார வேலைகளுக்குச் செல்லும் எமது இளைஞர் பேரவையினர் தங்கும் கோட்டையாக அக்காவின் வீடே இருந்தது. யாருக்கும் அஞ்சாத இவரது நெஞ்சுரம் போராளி இளைஞர்களை அன்புடன் அரவணைத்தது மறக்க முடியாத பதிவாகும். எனது சகோதரன் புஸ்பராஜா உட்பட வரதராஜப்பெருமாள், தங்கமகேந்திரன், பத்மநாபா, அன்னலிங்கம் ஐயா, பிரான்சிஸ் என்று நீண்டுகொண்டே போகும் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்களின் பேரன்பையும், மதிப்பையும் பெற்றவர் லோறன்ஸ் அக்கா.

சிறிதுகாலங்கள் பிரான்ஸில், மகள் ஜென்னியுடன் வசித்த இவர் அடம்பிடித்து தாயகம் திரும்பிவிட்டார். தன் மரணம் தன் மண்ணிலேயே இடம்பெற வேண்டும் என்ற இவரது பிடிவாதம் நிறைவேறிவிட்டது. எவ்வளவோ போராட்டங்களுக்கு பின்னர் இவரை திரும்பவும் பிரான்ஸிற்கு அழைத்துவர மகள் ஜென்னி



படிப்பகம்

www.padippakam.com



புறப்பட்டவேளை எல்லாமே முடிந்துவிட்டது. 'அம்மாவை கூட்டிவர திருமலைக்குப் போகப் போகின்றேன்' என்று தன் மகிழ்வை என்னுடன் பகிர்ந்துகொண்ட ஜென்னியிடமிருந்து இரண்டொரு நாட்களுக்குள்ளாகவே 'புஸ்பராணியக்கா அம்மா எங்களை விட்டு போய்விட்டார்' என்ற கதறல் தொலைபேசிமூலம் கேட்டபோது கலங்கிப் போய்விட்டேன்.

பிலோமினா அக்காவை எப்படி என்னால் மறக்க முடியும் சரளமான அவரது மேடைப் பேச்சும் அந்தக் கம்பீரமான ஓர்மமும் இன்னும் என் நினைவில் நிறைந்திருக்கின்றது.

என் நினைவில் வீற்றிருக்கும் உன்னதமானவர்களில் அக்காவும் ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com





# செல்வத்துரை ரவீந்திரன்

*தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாட்டாளர். சன்சோனிக் ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சாட்சியங்களை நெறிப்படுத்த உதவியவர். அவுஸ்திரேலியா, மெல்போனில் வாழ்கின்றார்.*

இதய சுத்தியுடன் தமிழ் மக்களின் விமோசனத்திற்காக அதன் போராட்ட பாரம்பரியங்களில் தன்னை இணைத்துக் கொண்டு பாடுபட்ட இன்னுமொரு ஒரு ஜீவன் முள்ளிவாய்க்கால் அவலங்களையும் கண்டு நொந்து இறைவனடியை தேடிக்கொண்டது. திருகோணமலையில் பிலோமினா லோறன்ஸ் மிக இளம் வயதிலேயே தமிழர் பிரச்சனைகளோடு தன்னை இணைத்துக் கொண்டவர். அது அவரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவைத்தது. தமிரசுக் கட்சியில் ஆரம்பித்த இந்த ஈடுபாடு தமிழர் விடுதலைக்கூட்டணியின் திருமலை மாவட்ட முக்கிய செயற்பாட்டாளராக ஆக்கியது. அவரது ஆற்றலும் கொள்கைத் தெளிவும் வடகிழக்கின் பிரச்சார கூட்டங்களில் சிறந்த மேடைப் பேச்சாளராகினார். தமிழ் மகளிர் பேரவையின் தலைவி சிவகுமாரின் தாயார் திருமதி. அன்னலட்சுமி பொன்னுத்துரை, செயலாளர் திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் அதன் உப தலைவியாக இவரும் செயலாற்றினார்கள்.



கூட்டணியின் 1976ம் ஆண்டு வெற்றிகளில் உவகை பூண்டு தமிழீழத்திற்கான அடுத்த போராட்டத்தை முன்னின்று நடத்துவோம் என்று பெருமிதம் கொண்டார். ஆனால் 1977 கலவரங்களும் அதைத் தொடர்ந்த அவலங்களும், கூட்டணியின் போக்கும் பல முரண்பாடுகளை தோற்றுவித்து அவரை பலத்த விசனத்தில் ஆழ்த்தியது. என்றாலும் தொடர்ந்தும் கட்சியின் செயற்குழு உறுப்பிலிருந்து கூட்டணியை திருமலையில் கட்டிக்காப்பதிலேயே கவனமாக இருந்தார்.

மகளீர் பேரவையின் இளையோர்கள், இளைஞர் பேரவையின் நடவடிக்கைகளில் ஆட்பட்டனர். பேச்சிலும் தீர்மானம் போடுவதிலும் கவனம் செலுத்தாமால் அவர்கள் 1977ல் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மறுசீரமைப்பதிலும் பிரதேசங்களை பலப்படுத்துவதிலும் கவனம் செலுத்த தலைப்பட்டனர். அது பிலோமினா அவர்களையும் கவர்ந்தது.

திருமலை, மூதூர் ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்ட காந்தீயத்தின் பணிகளுக்கு மேற்பார்வையாளராக டொக்டர். ராஜசுந்தரம், டேவிட் ஐயா, சந்ததியார் போன்றோர் வேண்டுகோளின் பேரில் பணியாற்றினார். இந்த காலகட்டத்தில்தான் இவரையும் அறிந்தேன். முதலில் தேர்தல் காலங்களில் இவர் ஆற்றிய மேடைப் பேச்சுக்கள் குறித்து போலிஸ் புலன்விசாரணையாளர் செய்த குறிப்புக்களின் பேரில் விளங்கங்கேட்டு இவரை சந்தித்து பல மணிநேரம்



படிப்பகம்

www.padippakam.com



அளவளாவினேன். அந்த சந்தர்ப்பங்களில் அவரது நோக்கங்களையும் சீரிய சிந்தனைகளையும் வன்முறையில் நம்பிக்கையற்ற தன்மையையும் எங்களின் இயலாத்தன்மையையும் வன்முறை எம்மை சூழ்வதையும் எடுத்துக் கூறியது. அவரது கருத்துக்களும் மேடைகளிலேயே மற்றவர்கள் பேசியவற்றின் நினைவுகளும் 'சன்சோனி கமிசனின்' ஆணைக்குழுவின் முன் ஆஜரான புலனாய்வுத் துறையினர் குறுக்குவிசாரணை செய்து இனத்துவேசமான பேச்சுக்கள் நடாத்தப்படவில்லையென்று ஆதாரப்படுத்த உதவியது.

தொடர்ந்து இவரை நான் காந்தீய வேலைத்திட்டங்களின் கூட்டங்களிலே, அகதிகள் புனர்வாழ்வு சங்கத்தின் பிரதிநிதியாக வவுனியா திருமலையில் அடிக்கடி சந்தித்ததேன். அந்த காலகட்டத்தில் பாராளுமன்ற அரசியலேயே நம்பிக் கொண்டிருந்த கூட்டணியின் போக்கில் அவருக்கிருந்த உள்ளார்ந்த விசனத்தையும் திருமலையில் நடக்கும் ஆக்கிரமிப்புக்களினால் கவலைகளையும் உணர்ந்து கொண்டேன்.

காந்தீயத்தின் தோழர்களோடு தன்னை ஐக்கியப்படுத்தியது அதன் தலைவர்களின் கைதினைத் தொடர்ந்து இவரையும் அநுராதபுர சிறையில் தள்ளியது 1984 மார்ச் அளவில் சந்ததியார், உமா மகேஸ்வரன் போன்ற இளைஞர்களுக்கு புகலிடம் கொடுத்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு ஒரு வருடம் விசாரணை சிறைவாசம் என்று அனுபவித்தார்.



பரவலான அட்டுழியங்களும் கூட்டணியின் இயலாமையும் இளைஞர்கள் சிறைகளில் பட்ட துன்பங்கள் அவமானங்கள் அவரைப் பலமாக பாதித்தது. அவர் சிறையில் வாடும்போது எனக்கெதிரான நடவடிக்கைகளால் நான் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிறையிலிருந்து வெளியேறிய பின் பிலோமினா அவர்கள் தன்னை அந்நியப்படுத்தி தன் மதத்தோடு ஒன்றிவிட்டார் என அறிந்தேன். மதத்தின் ஊடாக மக்களின் வாழ்விற்காக பல அளப்பரிய பணிகள் செய்து வந்தார். கணவன் பிள்ளைகள் பிரான்ஸில் அடைக்கலம் பெற்றுவிட்டாலும் தனக்கும் அந்த வசதி இருந்தாலும் அவற்றையெல்லாம் விட்டு விட்டு தன்மண்ணிலேயே வாழ என்று அங்கேயே சேவை செய்து உயிர் நீத்தார்.

ஏதிர்பாராமல் அவரது மகளென்ற அறிமுகமில்லாமல் அவரது மகள் ஜென்னியுடன் நான் தமிழ் மக்கள் விடுதலை பற்றி பேசும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டது. தாயின் சடங்குகளுக்காக புறப்பட்ட போதுதான் அந்த உறவு புரிந்தது. தாய் தன்னைப் போலவே ஒரு ஆதங்கமான, ஆழமான, இதயசுத்தியான ஒருவரை தந்துவிட்டுத்தான் மறைந்தார் என மகிழ்தேன்

எங்களது விடுதலைப் போராட்டத்தின் ஒரு விழிம்பில் பிலோமினா அவரது ஆசைகளையும், எதிர்பார்ப்புக்களையும், ஏமாற்றங்களையும் வேதனைகளையும் கொண்ட வடிவங்களே எமது இன்றைய நிலைகளையும் ஆட்டிப்படைக்கின்றன. அவரின் சீரிய நோக்குகளை புரிந்து கொள்ள ஆதரவுதரும் அவருடைய ஆத்மா சாந்தியடைய எமது வேண்டுதல்கள்

www.padippakam.com





# நீலகண்டர் கந்தசாமி

*மனித உரிமைச் செயற்பாட்டாளர். மேர்ஜ், அவுஸ்திரேலியா.*

## திருமதி பிலோமினா லோரன்ஸ் அவர்களின் நினைவாக எனது சமர்ப்பணம்

திருமதி பிலோமினா லோரன்ஸ் அவர்கள் காலமாகிவிட்டா என்ற செய்தியைக் கேட்டு மனவேதனைப் பட்டவர்களில் நானும் ஒருவன். திருமதி பிலோமினா அவர்கள் எங்களை விட்டுச் சென்றாலும் அவர்களிடம் இருந்து நாம் கற்றுக் கொண்ட அனுபவங்கள் அனேகம். நெருக்கடியான கால கட்டங்களில் எவ்வாறு செயல்படுவது என்பதும், எப்படியான சேவைகளை மக்களுக்கு ஆற்ற முடியும் போன்ற பல ஆலோசனைகளும் என்றும் எங்கள் மனதில் பதிந்துநிற்கின்றன.

திருமதி பிலோமினா அவர்களை நான் 1970 நடுப்பகுதியில் சந்தித்த போதிலும் 1980 ஆரம்பத்தில் இருந்து நெருங்கிப்பழகக் கூடிய சந்தர்பம் கிடைத்தது. குறிப்பாக இவர் திருகோணமலை காந்தியத்தில் பொறுப்பாக இருந்த காலகட்டத்தில் தான் எனக்கு அவருடன் கலந்துரையாடவும், அவருடைய சேவையையும் நேரடியாக காணக் கூடியதாகவும் இருந்தது. திருமதி பிலோமினா அவர்களின் பொது வாழ்வையும் சேவையையும் மூன்று கட்டங்களாக பிரித்துப் பார்க்கலாம்.



முதலாவதாக, அவருடைய அரசியல் நடவடிக்கைகள். இரண்டாவதாக, கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று தமிழ் மக்களுக்கு ஆற்றியசேவைகள். மூன்றாவதாக அவர் மதத்திற்கு ஆற்றிய தொணடு.

திருகோணமலை மாவட்டத்தில் வசித்து வந்த பிலோமினா அவர்கள் தனது அரசியல் நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சியுடன் ஆரம்பித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் வளாச்சியுடன் உச்சநிலை அடைகின்றார். தமிழரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்ட இவர் தந்தை செல்வாவின் வழிகாட்டலில் சாத்வீகம், அகிம்சை என்ற தத்துவங்களுடன் தன்னை சங்கமித்துக் கொண்டார். தமிழரசுக் கட்சியானது தமிழர் விடுதலைக் கூட்டணியாக உதயமான போது இவர் அதன் செயற்பாடுகளுடன் தன்னை நிறுவன ரீதியாக இணைத்துக் கொண்டார். திருமதி பிலோமினா அவர்கள் தமிழ் மகளிர் பேரவையின் உப தலைவி என்ற அந்தஸ்தை அடைந்து தன்னை திருகோணமலை மாவட்டத்திற்கு அப்பாற்சென்று தமிழர் விடுதலை கூட்டணியினால் வரையப்பட்ட தமிழீழம் என்ற முழுப் பரப்பிற்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்றால் அது அவரது கொள்கைப் பிடிப்பும்



படிப்பகம்

www.padippakam.com



அயராத உழைப்பும் என்றுதான் கூறலாம். தமிழ் தேசிய இனத்தின் பிரச்சனைகளை அணுகித் தீர்க்கும் வகையில் அவர் கொண்டிருந்த அணுகுமுறையில் தெளிவும் உறுதியும் கொண்டிருந்தார். ஆனபடியால் தான் அவர் தமிழர் விடுதலை கூட்டணிக்கு அப்பாற் சென்று தன்னை காந்தியத்துடன் இணைத்துக் கொண்டார். இந்த நிலைப்பாடு திருமதி பிலோமினாவிற்கு தனித்துவமான குணாம்சமாகும். தமிழரசுகட்சியினதும் தமிழர் விடுதலை கூட்டணியினதும் பிரச்சாரக் கூட்டங்களில் நல்ல மேடைப் பேச்சாளராக இருந்தவர் என்பதைவிட தனக்கு அடுத்த பரம்பரையை உருவாக்குவதற்காக பெண்களை மேடைப் பேச்சாளராக உருவாக்கினார் என்றால் அது அவரது பரந்த மணப்பாண்மையை எடுத்துக் காட்டுகின்றது.

திருமதி பிலோமினா அவர்களின் பொதுவாழ்வில் இரண்டாவது கட்டம் திருகோண-மலையில் காந்தியத்தின் தோற்றத்துடன் ஆரம்பமாகிறது. 1970க்குப் பின்பு மலையக தோட்டப் பகுதியில் மலையகதமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளினால் கணிசமான மலையக தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வடக்கு கிழக்கிற்கு பாதுகாப்பாக செல்லவேண்டிய நிலமை ஏற்பட்டது. இந்நிலையில் காந்தியம் தனது சேவையை பலமடங்குகளாக அதிகரிக்கவேண்டி இருந்தது. இந்நிலையில் திருமதி பிலோமினா அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் காந்தியத்தைப் பொறுப்பேற்று மிகத் திறம்பட அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நான் நேரில் பார்க்கக்கூடியதாக இருந்தது. பாலர் பாடசாலைகள், தையற் பயிற்சிநிலையம் மற்றும் இலவச வகுப்புக்கள் போன்றவற்றை மிகவும் திறமையாகவும் தொடர்ச்சியாகவும் நடாத்திவந்தமை இவரது சமூகத் தொண்டினை பிரதிபலிக்கக் கூடியதாக இருந்தது.



1979 ஆடி மாதத்தில் அப்போதய ஜனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (மேர்ச்) வணபி-தாபோல் கஸ்பஸ் அடிகளாரின் தலைமையில் உருவானது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வடக்குகிழக்கு மாகாணங்களில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தென் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்யுமாறும் பல போராட்டங்களை பல மட்டங்களில் நடாத்தியது. திருமதி பிலோமினா அவர்கள் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்தவத்துக்குமான இயக்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக பாடுபட்டார்.

மூன்றாவது கட்டமானது, இவர் சமயத்துறைக்கு ஆற்றிய பணிகளாகும். இவர் நல்ல ஒரு கிறீஸ்தவராக இருந்தார். ஆனால் மற்ற சமயத்தை சார்ந்தவர்களுடனும் மிக நெருங்கி எந்த விதவித்தியாசமும் இன்றி பழகினார். இவர் உண்மையில் நல்லதோர் கிறிஸ்தவராக இருந்து மக்களுக்கு சேவை செய்வதன் மூலம் ஆண்டவருக்கு சேவை செய்ய முடியும் என்ற தத்துவத்தையும் இவர் மக்களுக்கு ஆற்றிய பணிகளையும் கண் கூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

www.padippakam.com



திருமதி பிலோமினா அவர்களின் வீடு பலருக்கு தஞ்சம் புகுந்த வீடு. விருந்தோம்பல் என்பது இவருடைய தனிச்சிறப்பு. இந்ததுணிச்சலான ஒரு முடிவுதான் இவருக்கும் இவருடைய குடும்பத்தினருக்கும் பல நெருக்கடிகளையும் சோதனைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

திருமதிபிலோமினாஅவர்களின் வழித் தோன்றலான அவரதுமகள் ஜென்னி அவர்கள் தனது தாயார் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்வது என்பது போற்றுதற்குரியதாகும்.

திருமதி பிலோமினா அவர்களின் அன்பு, பணிவு, அடக்கம் போன்ற நற்குணங்களையும் செயற்திறன், துணிச்சல், வீரம், பேச்சுத்திறன் போன்ற திறமை-களையும் தேசப்பற்று, இனப்பற்று, மண்பற்று, மதப்பற்று என்பதில் இருந்து இவரது அர்ப்பணிப்பையும் நாங்கள் தெட்டத் தெளிவாக உணரக் கூடியதாக இருந்தது.

திருமதி பிலோமினா அவர்களின் இழப்பு தமிழ் மக்களும், திருகோணமலை மாவட்டத்தின் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் என்று கூறி திருமதி பிலோமினா லோரன்ஸ் அவர்களின் குடும்பத்திற்கு ஆழந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டு இவரதுபணியை அவரதுமகள் தொடர்து செயலாற்றுவார் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் என்னுடைய இந்த அனுதாபச் செய்தியை முடித்துக் கொள்கின்றேன்.

சமாதானம் பண்ணுபவர்கள் பாக்கியவான்கள்.
அவர்கள் தேவராச்சியத்தில் இருப்பார்கள்.

www.padippakam.com





# திலகவதி பரராஜசேகரன்

*மகளிர் பேரவையின் கொழும்புக் கிளையின் தலைவியாக இருந்தவர். 1977 கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து உதவியவர். தற்போது பிரான்ஸில் வாழ்கிறார்.*

திருமதி. பிலோமினா லோரன்ஸ், இப்பெயர் கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக, திருமலை மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரத்தில் மிகவும் பேசப்படும் ஒரு பெயராகத்தான் நான் முதலில் அறிந்திருந்தேன். ஆனாலும் ஓர் இனிமையான சூழலில் அவருடனான முதற் சந்திப்பு எனக்கு நிகழவில்லை. இச்சந்திப்பு, மிதவாதத்துக்கெதிரான இளைஞர் எழுச்சிக் காலத்தில் ஏற்பட்டதாயினும் பகை முரண்பாடாக அது மாறாது இருவரும் மனம் திறந்து எமது கருத்துக்களைப் பரிமாறியிருந்தோம். திருமலை மாவட்டத்தின் எல்லைப் புறங்களின் பாதுகாப்புக் குறித்து மிகவும் அக்கறையோடு என்னோடு அன்று அவர் விவாதித்தது இன்றும் என் மனதில் பசுமையாகப் பதிந்திருக்கிறது.

தமிழ் மகளிர் பேரவையின் உப தலைவியாகவும், திருமலை மாவட்டப் பொறுப்பாளராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாட்டாளருமாக ஆரம்பத்தில் நான் அறிந்திருந்த திருமதி. பிலோமினா அவர்களை அவளூடாக அவர் குறித்து நான் அறிந்ததிலும் பாரக்க அவரது மகள் திருமதி. ஜென்னி ஊடாக மிக ஆழமாக அறியும் வாய்ப்புக் கிடைத்தது. கட்சி அரசியலோடு மாத்திரம் நின்று விடாமல் காந்தீய அமைப்பின் திருமலை மாவட்டச் செயற்றிட்டங்களின் பொறுப்புக்களைச் செவ்வனே சுமந்து மக்கள் பணியிலும் தன் பங்கினை திறம்பட ஆற்றியிருந்தார்.



அரசியலுக்கப்பால் எனது தனிப்பட்ட வாழ்விலும் அவர் அக்கறை செலுத்தியிருந்தார். எனது நம்பிக்கைகளுக்கு அப்பால் தனது தளராத இறை நம்பிக்கையோடு எனது இல்வாழ்வு நிறைவானதாக அமைய அவர் வேண்டுதல் செலுத்தியிருந்தமை நான் என்றும் நினைவு கூரும் நிகழ்வாகும். தமிழ் மக்கள் உரிமைப் போராட்ட வரலாற்றில் அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்படுமளவு ஓர் சிறப்பான இடம் திருமதி. பிலோமினா அவரகளுக்கு என்றும் உண்டு. தான் நேசித்த மண்ணில் தன் மக்கள் மத்தியில் தான் வாழ்ந்த இல்லத்தில் அவரின் இறுதிக்காலம் அமைந்திருந்தமை அவர் ஆழ்மனத்தின் உறுதியான முடிவின் வெளிப்பாடேயென்றே எண்ணத் தோன்றுகிறது.

அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆறத லைத் தெரிவிப்பதோடு அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

www.padippakam.com





# ஆ யதீந்திரா

அரசியல் ஆய்வாளர்.

## மனிதர்கள் சாதாரணமாக மறக்கப்படும் ஒரு சூழலில்

அமரர் பிலோமினா லோறன்சின் நினைவுகளுக்கு அப்பால், அமரர் பிலோமினா அவர்களின் இறுதி நிகழ்வில் பங்குகொண்ட போது, அவர் ஜென்னி அக்காவின் தாயார் என்பதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் பிலோமினா அவர்களை தெரிந்து கொள்வதென்பது, திருகோணமலையின் அன்றைய அரசியல் வரலாற்றை தெரிந்துகொள்வதற்கு ஒப்பானது. இதனை அவரது மறைவுக்கு பின்னர்தான் உணர்ந்துகொள்ள முடிந்தது. குற்ற உணர்வு மனதை அழுத்துகிறது அவர் எனக்கு மிகவும் அருகாக இருந்தும் கூட, அவருடன் தொடர்பு கொள்ளவோ, உரையாடவோ முடிந்திருக்கவில்லை. அந்தளவிற்கு எங்கள் மத்தியில் ஒரு தலை முறைசார் இடைவெளி இருந்திருக்கிறது. துரதிஸ்டவசமாக ஈழ அரசியல் தலை முறைகளை தழுவி எழுவதற்கு பதிலாக, தலைமுறைகள் மத்தியில் வெறுப்புக்களையே விதைத்துச் சென்றிருக்கிறது.

இவ்வகை வெறுப்புக்களின் வழி சிந்திக்கப் பழகிய தலைமுறையினர் மத்தியில், 'நமக்கு முன்' என்னும் கரிசனை இருப்பதில்லை. இதுதான் அன்னை பிலோமினா அவர்கள் எனக்கு அருகாக இருந்தும் அவரை சந்திக்க முடியாமல் போனதன் விளக்கம். பிலோமினா அவர்களை மட்டுமல்ல எங்களுக்கு அருகாக இருந்த எத்தனையோ பேரை எனது தலைமுறை தீண்டாமலேயே இருந்தது. நாங்கள் அரசியல் தீண்டாமையை பெருமையுடன் பேணிக் கொண்டோம். விடுதலைப்புலிகளின் அழிவு வரை ஏனைய இயக்கங்கள் என்பவை தீண்டத்தகாத அமைப்புக்களாகவே இருந்தன. ஏனைய இயக்கங்களின் நியாயங்களை காது கொடுத்துக் கேட்பதற்கு கூட எவரும் விரும்பியிருக்கவில்லை. அந்தளவிற்கு எங்கள் சிந்தனை வெறுப்புக்களின் தீ நாக்காக இருந்திருக்கிறது.

மக்களுக்காக கொள்கை என்னும் நிலை போய், இறுதியில் மக்கள் கொள்கையின் பலிக்கடாக்களாக்கப்பட்டனர். எங்கள் மனங்கள் மரத்துப் போயின. இறுதியில் நாங்கள் வரித்துக் கொண்ட கொள்கைக்கு நரமாமிசப் படையல் தேவைப்பட்டது. மனிதர்களை விட கொள்கை பெரிதென்னும் வாதங்கள் தலைத்தெறித்தாடும் தேசங்களில் எல்லாம் இது சாதாரணம். இப்போது திரும்பிப் பார்க்கும் போது ஒன்று மட்டும்தான் தெரிகிறது மாறி மாறி நிகழ்ந்த கொலைகளுக்கு விளக்கம் சொல்வதிலேயே, எங்கள் தலைமுறையின் ஆற்றல் விரயமாகியிருக்கிறது. இறுதியில்





படிப்பகம்

www.padippakam.com



இப்போது நிமிர்ந்தெழுவதற்கு ஆற்றலற்றவர்களாக இருக்கிறோம். மனிதர்களின் பாலான நேசத்திலிருந்து ஒரு அரசியலை கட்டியெழுப்புவதில் நாங்கள் அனைவரும் தோற்றுப் போனவர்களே! இதுதான் ஈழ அரசியலின் துரதிஸ்டம். ஆனால் இன்றுவரை அது தொடருவதான், ஈழத் தமிழ் மக்களின் துரதிஸ்டம் ஆகும்.

ஒரு வேளை ஜென்னி அக்காவின் தொடர்பு கிடைக்காது இருந்திருந்தால், அமரர் பிலோமினாவின் இறுதி நிகழ்வில் கூட பங்குகொள்ள முடியாமல் போயிருக்கலாம். அந்தளவிற்கு பிலோமினா அவர்கள் எனக்கு தெரியாதவராகவே இருந்தார். ஜென்னி அக்காவின் ஊடாகத்தான் அவரது கடந்தகாலம் பற்றி சிறிது அறிந்து கொள்ள முடிந்தது. ஒரு காலத்தில் பிலோமினா அவர்களது இல்லம் பல்வேறு விடுதலை இயக்கங்களின் மூத்த உறுப்பினர்களின் தொட்டிலாக இருந்திருக்கிறது. பிலோமினா அவர்கள் மிதவாத அரசியலின் குரலாக இருந்த போதும், பிற்காலத்தில் தோன்றிய விடுதலை இயங்கங்களின் ஆதரவாளராகவும் இருந்திருக்கிறார்.

அவர் நேசித்த அரசியல், பின்னர் அவர் ஆதரித்து நின்ற ஆயுதப் போராட்ட அரசியல் எல்லாவற்றிலும் வெறுப்புற்று தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். இறுதியில் தனது நாட்களை கிறிஸ்தவ மதப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டார். இது பலருக்கும் நிகழும் ஒன்றுதான். தங்களது நம்பிக்கைகள் தங்கள் கண்முன்னே சிதைந்தழிவதை எதிர்கொள்ள முடியாதவர்களின் இறுதித் தரிப்பிடம் பெரும்பாலும் ஆண்மீகமாகவே இருந்திருக்கிறது. ஆனால் சிலரோ எதிலும் நாட்டமில்லாமல் தங்களின் வாழ்வை தாங்களே கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொள்கின்றனர். இந்த சமுதாயத்தையே தலை கீழாக புரட்டிப் போடும் புரட்சிகர கனவுகளுடன் வந்த பலருக்கும் இது நிகழ்ந்திருக்கிறது. சிலரால் மட்டுமே இப்படியான சூழலிலிருந்து மீண்டெழ முடிகிறது. இதற்கு அமரர் பிலோமினா அவர்களின் புதல்வியே ஒரு சான்று.

ஜென்னி ஒரு காலத்தின் போராளி ஆனால் அவர் ஒரு தோல்வி அடைந்த போராளி. ஜென்னி மட்டுமல்ல, இன்று உயிர்வாழும் அனைத்து விடுதலை இயங்கங்களைச் சேர்ந்த போராளிகளும் அந்த தோல்வியின் சாட்சிகள்தான். இதில் ஒருவர் மேலென்றும் பிறிதொருவர் கீழென்றும் பிரித்து நோக்க, எங்களிடம் இப்போது எதுவுமில்லை. ஆனால் ஜென்னி தனது தோல்விக்குள் முடங்கி விடாமல் தனக்கு அடுத்த தலை முறையினருடனும் ஊடாடுகின்றார். இதுவே அவர் என்னைப் போன்றவர்களுடனும் நட்புக் கொண்டிருப்பதன் பின்னணி. எங்களுக்கு இடையிலா ன நட்பும் உரையாடலும் இப்போது முற்றிலும் வேறுபட்ட ஆனால் ஒரு வேரின் கிளைகளான மூன்று தலைமுறைகளை தழுவியதாக இருக்கிறது. இப்போது எங்கள் அனைவர் மத்தியிலும் இப்படி ஒரு நட்பும், இப்படியொரு ஊடாட்டமும் தேவையாக இருக்கிறது. இது இல்லாமைதான் நாங்கள் இன்று இப்படி இருப்பதற்கான காரணம். மனிதர்களாகிய நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொள்வதில் என்ன தடைகள் இருக்க முடியுமென்று இப்போதாவது நாங்கள் சிந்திக்க வேண்டும்.

www.padippakam.com



இன்று ஜென்னி என்று ஒரு புதல்வி இருப்பதால், அமரர் பிலோமினா நினைவு கொள்ளப்படுகின்றார். அவர் பாக்கியசாலி என்றே சொல்ல வேண்டும். எங்களைச் சுற்றி எங்களுக்காக வீழ்ந்தவர்கள் எத்தனை பேருக்கு அந்த பாக்கியம் கிட்டியது? இன்று எங்கள் நினைவுப்பரப்பில் துளியளவுகூட இல்லாமல் போனவர்கள் எத்தனை நூறு? எங்களால் சாதாரணமாக மனிதர்களை மறக்க முடியும் - ஆகக் குறைந்த வரலாற்று நன்றி உணர்வு கூட இல்லாமல்.

மனிதர்கள் சாதாரணமாக மறக்கப்படும் ஒரு சூழலில் அமரர் பிலோமினா லோறன்ஸ் அவர்கள் குறித்து ஒரு சில வரிகளையாவது எழுத முடிந்ததே என்பதில் திருப்தி. அன்னை பிலோமினாவை நினைத்துப் பார்க்கும் இந்த தருணத்தில் எங்களுக்காக வீழ்ந்தவர்கள் பலரையும் ஒரு முறை நினைத்துப் பார்க்க முடிந்ததில் இரட்டிப்புத் திருப்தி. வீழ்ந்தவர்கள் எவரும் பிறரின் போற்றுதல்களுக்காக வீழ வில்லையாயினும், அவர்களை நினைவு கொள்ள வேண்டியது சமூகநேசம் கொண்ட மனிதர்களின் கடமையாகும்.





படிப்பகம்

www.padippakam.com





# ச வி கிருபாகரன்

*மனித உரிமைச் செயற்பாட்டாளர். பாரிஸ் - லண்டன்.*

## அனுதாபச் செய்தி - திருமதி பிலோமினா லோரன்ஸ்

திருகோணமலையை சேர்ந்த திருமதி பிலோமினா லோரன்ஸ் பற்றி எனது சிறுவயதிலேயே நன்றாக கேள்விப்பட்டிருக்கிறேன். காரணம் தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு, தமிழீழ மக்களின் சாத்வீக அரசியல் போராட்டவேளையிலே, அன்று கைவிட்டு எண்ணக்கூடிய தமிழீழ பெண்களே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள். இதில் திருமதி பிலோமினா லோரன்சும் ஒருவராவர்.

அந்நாட்களில் யாழ் குடநாட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார மேடைகளில் தமிழரசுக் கட்சியின் சார்பாக திருகோணமலையிலிருந்து வருகை தந்துள்ள பிலோமினா லோரன்ஸ் உரையாற்றுவதாகவும் ஆக்கபூர்வமான கருத்துக்களை அவரது குரல்வளம் நிறைந்த உரைகள் மூலம் வெளிப்படுத்துவதாக அன்றைய பெரியோர்கள் பலர் கதைப்பதை அறிந்திருக்கிறேன். திருகோணமலைக்கு நூற்றுக்கணக்கான தடவைகள் சென்று வந்தபொழுதிலும் இவ்அம்மையாரை நேயில் சந்திக்கும் பாக்கியம் எனக்கு ஒரு பொழுதும் கிடைக்காவிடினும் இவரது கணவர் திரு லோறன்ஸ் உட்பட இவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் நேரில் சந்தித்து அவர்களது பந்தபாசம், விருந்தோம்பல்களை நன்கு அறிந்துள்ளேன்.



விசேடமாக இவரது மகள் ஜென்னி, தனது தாயார் போன்று தமிழீழ மக்களின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வில் அன்றும் இன்றும் பெரும் பங்களித்து வருவது பெருமைக்குரிய விடயம். கடந்த இரு மாதங்களிற்கு முன் திருமதி லோறன்ஸ் விரைவில் பிரான்ஸிற்கு வரவிருப்பதாக அறிந்து நாம் சந்தோஷப்படும் வேளையில் தான் பிறந்து வாழ்ந்த மண்ணை நேசித்த காரணத்தினாலோ என்னவோ கடந்த யூலை மாதம் 17ம் திகதி இவ் அம்மையார் திடீரென இறைவனடி அடைந்ததை அறிந்து மிக கவலையடைகின்றோம்.

திருமதி பிலோமினா லோறன்ஸின் மறைவையிட்டு ஆழ்ந்த துன்பத்தில் வாழும் இவரது குடும்ப அங்கத்தவர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதபங்களை தெரிவித்து கொள்கிறோம். திருமதி பிலோமினா லோரன்ஸின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

www.padippakam.com





## வீ ராம்ராஜ்

*ரிபிசி வானொலி பணிப்பாளர், ஊடகவியலாளர், ஈஎன்டிஎல்எப் அமைப்பின் முக்கியஸ்தர்.*

### அமரத்துவம் அடைந்த அன்னை பிலோமினா லோறன்ஸ்க்கு எமது அஞ்சலிகள்

தமிழ் மக்களின் தலைநகரமான திருமலை மண்ணை இருப்பிடமாக கொண்ட இவர் தமிழ் மக்கள் அம் மண்ணில் பட்ட வேதனைகளையும் துன்பங்களையும் துயரங்களையும் கவனத்தில் கொண்டு அந்த மக்களின் விடுதலைக்காக அகிம்சை ரீதியில் குரல் கொடுதத்தோடு 1961ல் தமிழரசுக்கட்சியுடன் இணைந்து கொண்டார்.

பிற்பட்ட காலங்களில் அக்கட்சியின் சிறந்த மேடை பேச்சளாரக யாழ்ப்பாணம் வவுனியா மட்டக்களப்பு திருமலை அம்பாறை மாவட்டங்களில் மக்களின் மனங்களை கவர்ந்தார். இவரின் திறமையினால் திருமலை மகளீர் பேரவை செயலாளராகவும் அகில இலங்கை தமிழ் மகளிர் பேரவையின் உபதலைவியாகவும், அகில இலங்கை தமிழரசுக்கட்சியின் செயற்குழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.



தமிழரசுக்கட்சி தமிழர் விடுதலை கூட்டணியாக பரிணமித்த போது பல முரண்பாடுகள் மத்தியிலும் விசுவாசமான தொண்டராக பணியாற்றினாலும் கூட்டணியின் செயற்பாடுகள் தொடர்பாக தனது விமர்சனங்களை முன்வைக்க தவறவில்லை.

1980களில் திருமலை - மூதூர் மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட காந்தீயத்தின் மேற்பார்வையாளராக செயற்பட்டார். வவுனியாவிலிலுள்ள காந்தீய தலைமையகம் அரசாங்கத்தால் சீல் வைக்கப்பட்ட நிலையிலும் தொடர்ந்து திருமலையின் மூதூர் கிராமமட்டங்களில் காந்தீயம் செயற்பட்டதில் கடைசிவரை செயற்பட்டவர்.

1984முற்பகுதியில் தமிழ் இளைஞர்கள் உட்பட பல அரசியல் சார்ந்த சிந்தனையாளர்களும் இலங்கை அரசால் கைது செய்யபட்ட வேளையில் இவரின் செல்வ மகள் தற்போது பிரான்சில் வசிக்கும் ஜென்னி அவருடைய கணவனும் தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகத்தின் போராளியும் இலங்கை பொலிசாரனால் படுகொலை செய்யபட்டவருமான பார்த்தன் என போராளிகளால் அழைக்கப்பட்ட ஜெயச்சந்திரன் ஆகியோரின் தலைமறைவான நடவடிக்கையினாலும் காந்தீய வேலைத்திட்டங்களாலும் 1984 மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் அனுராதபுரத்தில் சிறைத்தண்டனை அனுபவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



சிறையிலிருந்து விடுதலையான பின் மனவிரக்தியின் நிமித்தம் தன்னை தனிமைப்படுத்திய நிலையில் கத்தோலிக்க சமயத்தின் சேவையுடன் இணைத்துக்கொண்டு சாகும்வரை முழுமூச்சாக சமயத்திற்கும் அந்த சமய சமூகத்தினருடனும் இருந்து செயற்பட்டார்.

2003ல் பிரான்ஸ்க்கு வந்து குடும்தாருடன் இணைந்து கொண்டாலும் நாட்டின் ஈர்ப்பினால் அந்த மண்ணில்தான் சாக வேண்டுமென்ற பிடிவாதத்தில் அங்குசென்றுதனித்திருந்து தொடர்ந்து கோவில் பணியாற்றினார்.

அன்னையை நானும் எனது குடும்பத்தாரும் பிரான்ஸிற்கு செல்லும் போது எல்லாம் பெரும்பாலும் சந்திப்பது உண்டு. அவர் தாயக விடுதலையில் முழுமையான நம்பிக்கையுடன் வாழ்ந்தார். பல்வேறு அனுபவங்களையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார். எமது ரிபிசி வானலையில் நடைபெறும் அரசியல் விவாதங்கள் மற்றும் சமூகம் தொடர்பான நிகழ்ச்சி தொடர்பாகவும் தன்னுடைய கருத்துக்களை முன் வைக்கத் தவறியதில்லை.

எங்களின் குழந்தைகளினின் தேவைகளை மிகவும் இலகுவாக புரிந்து கொண்டு அவற்றை நிவர்த்தி செய்தவர். தோழி ஜென்னிக்கும் எனக்கும் நடக்கும் அரசியல் விவாதங்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து பல்வேறு விதமான ஆலோ சனைகளையும் அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்வார்.

அன்னையின் இழப்பால் வேதனையுற்றிருக்கும் கணவர் மகள் மகன் மருமகள் பேரப்பிள்ளைக்கு மற்றும் குடும்பாத்தாருக்கும் எமது கவலையையும் அன்னையின் உடல் ஆத்மசாந்தியடையவும் பிராத்திக்கின்றோம்.

www.padippakam.com





# வி சிவலிங்கம்

*ரிபிசி வானொலி, ஆய்வாளர்*

## எனது பார்வையில் திருமதி. பிலோமினா லோறன்ஸ்

தமிழ் அரசியல் வரலாறு பல சிறந்த மனித ஆத்மாக்களை அடையாளம் காட்டிச் சென்றிருக்கிறது. தேசியவாத அரசியல் அதன் ஆரம்ப காலத்தில் இளைஞர்களை கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால் அவர்களில் மிகச் சிலரே இறுதிவரை அப் பயணத்தைத் தொடர்கிறார்கள். அநியாயங்களைத் தட்டிக் கேட்பதாக கூறிச் செல்பவர்கள் எதிரியின் கொடுமைகளை மட்டும் பேசி, தனது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள ஒடுக்குமுறையைக் கண்டுகொள்ள தவறுகிறார்கள். அதனுள்ளே செயற்படும் சமூக அசைவியலை இனம் காண தவறுகிறார்கள். இதனால் தேசியவாதம் அவ்வப்போது எதிர்நோக்கும் தோல்விகளைக் கண்டதும் அதிலிருந்து ஒதுங்கிவிடுகிறார்கள். தேசியத்தை தமது தோள்களில் தாங்கி நிற்பதாக முழங்கிய பலரை இப்போது காணவில்லை. ஆனாலும் தேசியவாதத்தினால் ஈர்க்கப்பட்ட சிலர் தான் வாழும் சமூகத்தில் உள்ள மக்களில் ஒரு சாரார் துன்பத்தில் உழலுவதை பொறுக்க முடியாது சமூக சேவகர்களாக மாறிவிடுகிறார்கள்.

இவர்கள் சமூகத்தில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வே அதன் அடிப்படை என்பதை காணத் தவறுகிறார்கள். அவர்கள் நியாயப்படுத்தும் தேசியவாதம் அவ்வாறான ஒடுக்குமுறைக்கான கூறுகளைக் கொண்டிருப்பதை அடையாளம் காண மறுக்கிறார்கள். தாம் நேசிக்கும் தலைவர்கள் நல்லவர்கள் வல்லவர்கள் எனக் காண்கிறார்களே தவிர, அவர்களது முடிவுகள் எந்த மக்களின் நலன்களுக்கு உகந்ததாக அமைகிறது என்பதை அறிந்து கொள்ளும் சக்தி அற்றவர்களாக உள்ளார்கள். மற்றவர்கள் அதன் உள் முரண்பாடுகளை வெளிப்படுத்தும் போது அவற்றைத் தாம் நம்பும் தேசியவாத சிந்தனைக்கு தடையானதாக எண்ணுகிறார்கள் அத்துடன் எதிர்க்கிறார்கள்.

திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களை இத்தகைய ஒரு மனிதராகவே காண்கிறேன். தேசியவாதம் பலவீனப்பட்ட போது அவருள் இருந்த மனிதநேய உணர்வுகள் அவரை ஒரு சமூக சேவகியாகவே உருவாக்கியது. அவரது வாழ்நாளின் இறுதிக் காலத்தை பிரான்ஸில் தனது மகளுடன் அமைதியாக கழித்திருக்க முடியும். ஆனால் அவரது தெரிவு அதுவாக இருக்கவில்லை. அல்லல்படும் தனது மக்களுக்கு சேவை செய்து வாழ்வை முடித்துக் கொள்ள அவர் தீர்மானித்தார். ஆரம்ப காலத்தில் தமிழ் தேசியவாத ஈர்ப்பில் அகப்பட்ட அவர் காலப்போக்கில் அதன்

www.padippakam.com



இயலாமையை கண்டுகொண்டதும் சோர்வடையாமல் தனது மீதிக் காலத்தை சமூக சேவையில் இணைத்துக் கொள்ள அதுவே காரணமாக அமைந்தது.

இவ்வாறான சமூக அர்ப்பணிப்புள்ள மனிதர்கள் குறிப்பாக பெண்களை எமது தமிழ் சமூகம் உரிய வகையில் அடையாளம் காணத் தவறியுள்ளது. பிலோமினா அவர்களின் மேடைப் பேச்சுகள் தொடர்பாக அக் காலவேளையில் படித்த ஞாபகம், இருந்த போதிலும் அவர் பிரான்ஸில் தனது மகள் ஜென்னியுடன் தங்கியிருந்த வேளை சில நிமிடங்கள் பேசக் கிடைத்தது பெரும் பாக்கியம் எனக் கருதுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



# காந்தியம்

அற்ற சிறார்கள் அழிவில்லாக் கல்வியும்
கற்கின்ற போதே உயிர்காக்கும் சத்துணவும்
பெற்றிட தொண்டர் பல கூடி உழைப்பால்
தோற்றினர் காந்தீயம்



படிப்பகம்

www.padippakam.com





# ச அ டேவிட்

*தலைவர், 'காந்தியம்'*

## திருமதி பிலோமினா லோறன்ஸ் அம்மா இரங்கலுரை.

எப்போ ஒருமனிதன் தன் சமூகவாழ்வை முதலாவதாகவும் தன் சொந்த வாழ்வை இரண்டாவதாகவும் மதித்து வாழத் தொடங்குகிறானோ அன்று அவர் மதிப்புக்கு உரியவன் ஆகிறான்.

எந்த சமூகத்தில் இப்படியானவர்கள் பெருமளவு இருக்கின்றார்களோ, அந்தச் சமூதாயம் சீராய்ச் சிறப்பாய் முன்னேறும்.

தமிழீழத்தில் தந்தை செல்வா காலம் இந்த தத்துவத்துக்குச் சான்று. திருகோண மலையில் காந்தி மாஸ்ரர் ஓர் சிறப்பான எடுத்துக் காட்டு.



பிலோமினா லோறன்ஸ் அம்மாவும் இந்தத் தத்துவத்துக்கு அருமையான உதாரணம். அவருடைய வாழ்வே ஆரம்பம் முதல் இறுதி மட்டும் சமூக வாழ்வு என்று சொல்ல வேண்டும்.

தமிழீழம் உருவாக வேண்டுமென்றால் ஈழத் தமிழர் ஒவ்வொருவரும் பிலோமினா லோறன்ஸ் அம்மாவைப் பின்பற்ற வேண்டும்.

இவருடைய மறைவுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தை அறிவிக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com





# பொ கந்தையா (காந்தி மாஸ்ரர்)

போசகர் 'காந்தியம்' சமூக சேவகர்

திருமதி பிலோமினா லோரன்ஸ் அம்மா அவர்களை நான் பல வருடங்களாக அறிவேன். எனது வீட்டுக்கு அருகாமையில்தான் அவரின் வீடு இருந்தது. ஐயாவுடனும் பிள்ளைகளுடனும் நன்கு பழகியிருந்தேன். தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் அம்மா குடும்பத்துக்கு மிகுந்த அக்கறையிருந்தது. தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் சகல உரிமைகளோடும் வாழ வேண்டும் என்று அம்மா விரும்பினார்கள். தமிழ் அரசியல் கூட்டங்களிலெல்லாம் தமிழ் மக்கள் உரிமைக்காக பெரிய பிரசங்கம் செய்து மக்களை வழி நடத்தினார்கள். அம்மா பெரிய அரசியல் பேச்சாளராக விளங்கினார்.

தமிழ் மக்கள் எவ்வளவோ மதிப்பிருந்தும் திறமையிருந்தும் ஊக்கமிருந்தும் எல்லாமிருந்தும் ஒற்றுமையில்லாத காரணத்தினால் இன்றிருக்கும் கீழ் நிலைக்கு பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். 'ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக் கெடும்' என்ற பழமொழியின் படி எங்கள் மத்தியில் ஒற்றுமையில்லாத காரணத்தினால் மிகவும் கேவலமான நிலைக்கு கீழிறங்கி வந்துள்ளோம். இன்றும் எல்லோரும் ஒரே நோக்கத்தோடு தமிழ் மக்கள் நல்ல அரசியல் வாழ்வுக்காக பாடுபட ஆயத்தமாக இல்லை. எங்களினம் அடைந்த நட்டங்கள் இழப்புகளுக்குக் கணக்கில்லை இன்னும் நாங்கள் இதை உணருகிறோமில்லை.



'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றும் 'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு' இனிமேலாவது தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் எங்கள் உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டும். வெளிநாடுகளில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் கடைசி காலத்தில் இந்த நாட்டுக்கு வந்து சேர வேண்டும். வெளிநாட்டுப் பிரஜையாகக் கூடாது. 'பெற்ற தாயும் பிறந்த உன் நாடும் நற்தவ வானிலும் நனி சிறந்தனவே' ஆதலால் தாய் நாட்டை மறக்கக் கூடாது. வெளிநாட்டில் இருப்பவர் பலர் தாய் நாட்டையும் மறந்து தமிழ் பாசையையும் மறந்து தமிழ் பேசத் தெரியாதவர்களாக உள்ளனர். இது பரிதாபமான நிலை இலங்கையில் தமிழர் தொகை குறைந்து கொண்டு போகிறது. இன்னும் சில காலத்தில் மூன்றாவது இனமாக வந்து விடுவோம் என அஞ்ச வேண்டியுள்ளது.

அம்மாவின் பிரிவு எங்கள் போன்ற அன்பர்களுக்கும் தமிழினத்துக்கும் பெருமிழப்பாகும். அம்மா வெளிநாடுகளில் இருந்தாலும் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டிருப்பார்கள். அவரின் இறப்பு ஈடு செய்ய முடியாத நட்டமாகும் அம்மாவின் குடும்பம் தமிழ்த் தொண்டு செய்யவும் நல் வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன். 'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.'



படிப்பகம்

www.padippakam.com





# தர்மலிங்கம் கிருபாகரன்

*செயற்பாட்டாளர், காந்தியம் & ஈரோஸ்.*

லோறன்ஸ் அக்கா, 1974 எனக்கு 16 வயது இந்த வயதில்தான் இந்தப் பெயரை அறியக்கேட்டிருக்கிறேன். தமிழ் தேசியம் எவ்வாறு தன் பாதையைத் தொடர்வதென்று கடுமையாக யோசித்த காலம். சிங்கள அரசின் கெடு பிடிகளுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று ஆதங்கப்பட்ட நேரம். எனது தந்தையாருடன் ஒரு நாள் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போது எம்மை மறித்து அண்ணா இன்று பின்னேரம் 5 மணிக்கு எல்லோரும் கூடிக்கதைக்க வேண்டும் கட்டாயம் வாங்கோ என கூறி கட்டாயம் மகனையும் கூட்டிக்கொண்டு வாங்கோ என்று எனது கன்னத்தில் தட்டிவிட்டுச் சென்று விட்டார். எனது அப்பாவிடம் யார் இவ என்று கேட்டேன் இவதான் ஜான்சி ராணி என்று சொல்லிச் சிரித்தார். அன்றுதான் ஜான்சி ராணி யாரென்று தாயாரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.



அன்று தொடக்கம் லோறன்ஸ் அக்கா வீட்டுக்கு அரசியல் ஆர்வம் காரணமாக அடிக்கடி செல்வேன். அன்பான உபசரிப்புடன் கலந்த அரசியல். என்னையும் அரசியலில் பொது வேலைகளில் ஈடுபடுத்த ஊக்கப்படுத்துவா அவ்வாறே காந்தீயம் என்ற அமைப்புடன் சேர்ந்து பிந்தங்கிய கிராமங்களில் பாலர் பாடசாலைகளை அமைப்பது அவற்றினை மேற்பார்வை செய்வது போன்ற வற்றிலும் ஈடுபட்டேன். இதனால் ஈழ புரட்சிகர அமைப்புகளுடன் தொடர்புகள் அனைத்தும் ஏற்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் லோறன்ஸ் அக்காவைத் தெரியாத மூவின மக்களில் ஒருவரும் இருக்க மாட்டார்கள் பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பின் என்றும் செல்லக்கூடாது எனது பணி தமிழ்த்தேசிய உணர்வை ஊட்டி தீர்வு வரை நகர்த்த வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொண்டு சகல இயக்க உறுப்பினர்களுடனும் அன்பாகவும் கண்டிப்பாகவும் பழகி ஈழப்போராட்டத்தை முன்னின்று நடத்தும் கொள்கை வகுப்பாளராக ஆக்ரோசமாகக் கதைக்கும் போது என் அப்பா சொன்ன ஜான்சி ராணி என் கண்முன்னே நிற்பா.

இவ்வளவு கண்டிப்பான லோறன்ஸ் அக்காவுக்கு ஒரு மென்மையான பக்கமும் உண்டென்பதை உணர்ந்த போது என்னையும் அறியாமல் ஆச்சரியமும் துக்கமும் வந்தது. 1980 ஆண்டின் பின் அரசியல் கெடுபிடியால் லோறன்ஸ் அக்காவை அடிக்கடி சந்திக்க முடியாமல் போய்விட்டது. 1982 இன் பின் தொடர்ச்சியாக சந்திக்க முடியாத படிக்கு எனது பாதை வேறு திசைக்கு மாறிவிட்டது. ஆனால் இன்று வரை அவரைப்போல ஒரு அக்காவை ஜான்சி ராணியை என் வாழ்வில் சந்திக்க வில்லை.

www.padippakam.com



2003 ஆண்டளவில் அவரை மீண்டும் சந்தித்தேன். என்னைக் கட்டிப்பிடித்து இவ்வளவு நாளும் எங்கயடா இருந்தாய் என்று இரண்டு அடியும் போட்டு அணைத்துக் கொண்டு என்ன செய்கிறாய் என்று கேட்ட போது எனக்கு அழுகைதான் வந்தது. எப்படியெல்லாம் தமிழ்தேசியத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கனவுகண்ட எம்போன்றோர்க்கு அரசியல் அனாதைகள்தான் நாங்கள் என்று அவருக்கு சொல்லவேண்டும்போல் இருந்தது. ஆனால் சொல்லவில்லை அவரே முந்திக்கொண்டு இன்று சர்வதேசமே எமது பிரச்சினையை திரும்பிப் பார்க்கத் தொடங்கி விட்டது. இனி எப்படியும் ஒரு தீர்வு வரும்போல இருக்கு என்று நம்பிக்கையுடன் கூறிய வார்த்தைக்கு மேல் என்னால் கதைக்க முடியாமல் போய்விட்டது. இங்குதான் லோறன்ஸ் அக்கா நிக்கிறார் என்று எண்ணி சந்தோசத்துடன் எமது இருவரினதும் குடும்ப உறுப்பினர்களின் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு வெளியில் செல்ல முடியாத கனமான இதயத்துடன் விடைபெறும் போது எனது பிள்ளைகள் நாட்டுக்கு வரும்போது உனக்குச்சொல்லி அனுப்புவேன். கட்டாயம் வந்து பார்க்க வேண்டும் என்று கூறி அனுப்பிவைத்தார் ஆனால் அவரின் இறுதி ஊர்வலத்தில் கூட கலந்து கொள்ள முடியாத மன வேதனையும் கவலையும் என்னை இன்னும் வாட்டுகிறது.

இறுதி வரை மறக்க முடியாத ஓர் நல்ல மனிதர். நல்ல சிந்தனையாளர்தான் எம் லோறன்ஸ் அக்கா.






படிப்பகம்

www.padippakam.com





# கலாபூஷணம் செ விபுணசேகரம்

*செயற்பாட்டாளர் காந்தியம். சமாதான நீதவான், முன்னைநாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்*

## நீத்தார் பெருமை

திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களை 1980 முதல் காந்தீயத்தின் வழி காரணமாக நன்கு அறியக்கூடியதாக இருந்தது. இதனால் அன்னாரோடு பழகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. திருகோணமலைப் பிரதேசத்தில் காந்தீய அமைப்பு வளர்ச்சியுற்ற காலம் அது. இக்காலத்தில் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் காந்தீய அமைப்பின் மாவட்ட இணைப்பாதளராக பொறுப்புடனான பதவியில் இருந்தார். மூதூர் பிரதேசத்தில் இக்காந்தீய அமைப்பின் ஊடாக சமூகத்துக்கு என்ன செய்யலாம் என்பதையிட்டுச் சிந்தித்தார். நானும் கட்டைபறிச்சான் பிரதேசத்தின் காந்தீய அலுவலர் பதவியில் இருந்தேன். சிறுவர் கல்வியில் நாட்டங்கொண்ட திருமதி.லோறன்ஸ் அவர்கள் பாலர் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமுள்ளவராக இருந்தார். என்மீது கொண்ட நம்பிக்கை காரணமாக எங்கெங்கு பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டுமோ, அங்கெல்லாம் அமையுங்கள் என அன்புக் கட்டளையாக விடுப்பார். நானும் அவருக்கு விசுவாசமாகவே நடந்தேன்.

நிதியைப் பொறுத்தவரையில் ஒரு நேர்மையுள்ள சீமாட்டியாகவே திகழ்ந்தார். மற்றையோரை அன்போடு நேசிக்கும் அருமைக் குணமுள்ளவராகத் திகழ்ந்தார். மற்றையோருக்கு உதவி செய்யும் மனப்பாங்கு உடையவராகவும் திகழ்ந்தார். கஷ்டப்பட்டோரை கண்ணியத்தோடு நோக்கினார். அவர்களுக்கு எவ்வழியில் உதவி செய்யலாம் எனச் சிந்திப்பார். அந்த வகையான கைங்கரியத்தினாலோ, என்னவோ, அவருடைய மகள் ஜென்னியும், நலிந்தோருக்கு உதவிடும் நற்பண்புள்ளவராக திகழ்கின்றார். தாயைப் போல பிள்ளை, நூலைப்போல் சேலை என்று தெரியாமலா சொன்னார்கள்.

இறுதிச் சடங்கு நடைபெற்ற போது முன்பின் தெரியாத புதுமுகங்கள் ஓடியாடித் திரிவதை காணக்கூடியதாக இருந்தது. இவர்கள் யார்? ஜென்னி அவர்களால் உதவிக்கரம் நீட்டி ஆதரிக்கப்பட்ட ஜீவன்கள். பல்கலைக் கழகப் பட்டதாரிகள். பல்கலைக் கழக மாணவர்கள், வைத்திய கலாநிதிகள் என்றின்னோரன்ன வகையில் அங்கு பொலிந்து தோன்றினர். தானில்லாவிட்டாலும், தன்னைப்போல் ஒரு வாரிசை, மற்றையோருக்கு உதவுவதற்காக விட்டுச் சென்ற ஜீவனை என்றும் மறக்கமுடியாது.

www.padippakam.com



திருமதி. லோறன்ஸ் அவர்களுடைய கணவர் திரு.லோறன்ஸ் அவர்கள் ஒரு சாந்தமான மனிதர். பதிவிரதைக்கேற்ற பத்தாவாய் பரிணமித்தார். அவருடைய தோற்றம் இன்றும் என் கண்களிலே பளிச்சிடுகிறது. ஒரு மொறிஸ்மைனர் கார் அவரிடம் இருந்தது. தமிழரசுக் கட்சிக் கூட்டங்கள் என்றால் இந்தக் கார் அங்கு பறக்கும். அதற்குள் திருமதி லோறன்ஸ் அமர்ந்திருப்பார். லோறன்ஸ் அவர்கள் மனஞ்சலிக்க மாட்டார். முகம் சுழிக்கமாட்டார். இவ்வாறான மனிதரை திருமதி. லோறன்ஸ் ஏன்விட்டு விட்டுச் சென்றாரோ?

திருமதி.லோறன்ஸ் அவர்கள் ஒரு மேடைப்பேச்சாளர். நிறைந்த தமிழாற்றல் மிக்கவர். பேசத்தொடங்கினால் ஆற்றொழுக்குப் போல், சொற்கள் சரளமாகவே வந்து கொண்டிருக்கும். இவரது பேச்சைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் நிறைந்திருக்கும். இவ்வளவு அபாரத் திறமைகளைக் கொண்ட இந்த ஜீவன் இன்று எம்முன் இல்லை. அவர் எம்மை விட்டுச் சென்றாலும், அவர் காட்டிய நல்வழிப் பாதைகள் என்றும் அழியப் போவதில்லை. திருமதி லோறன்ஸ் அவர்கள் நல்லதொரு ஜீவன். அவரது இழப்பினால் வருந்தும் கணவர்,பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அவர் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றேன்.

www.padippakam.com



# ஆன்மீகம்

கருசுமந்த வாழ்வும் பரந்த பாருலகும்
கணக்கிலா உயிர்ச் சுடரும் காற்றும்
கனல் நெருப்பும் கடல் வானும் தீரா அறிவும்
யாரென்று உணர்ந்து நானற்ற வெளியாகி
இறையில் அனு தினமும் உயிர் உருகி
பேரின்பம் அடைதலே பெரும் பேறு



படிப்பகம்

www.padippakam.com





# கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை

*அதி வணக்கத்துக்குரிய ஆயர், திருகோணமலை - மட்டக்களப்பு*

## திருமதி பிலோமினா லோறன்ஸ் அஞ்சலி

திருமதி லோறன்ஸ் திருமலை புனித மரியாள் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர் அவரும் அவரது கணவர் திரு சவரிமுத்து லோறன்ஸ் அவர்களது நான்கு பிள்ளைகளோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தவர்கள். இறை பக்தியிலும் மனித நேயத்திலும் ஊன்றி வாழ்ந்தவர்கள். இவர்களை 1985ம் ஆண்டிலிருந்து நான் நன்றாக அறியவும் பழகவும் கிடைத்த சந்தர்ப்பத்தை மீட்டுப்பார்க்கின்றேன்.

திருமதி லோறன்ஸ் இறந்த செய்தியையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றேன். அன்னாருடைய இளம் பராய காலத்தில் நாட்டில் அரங்கேறிய அராஜக செயல்கள் பயங்கரவாதம் என்ற போர்வையில் வகை தொகையின்றி தமிழ் இளைஞரும் சரி, முதியவர்களும் சரி கைதுசெய்யப்பட்டு சிறையிலிடப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பல சோகக் கதைகளை மீட்டுப் பார்க்கின்றேன். குறிப்பாக திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் ஒரு வீர வேங்கை போன்று விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்று 1985ம் ஆண்டு வீடு திரும்பிய பின் ஒரு ஆன்மீக வாதியாக தன்னையே மாற்றிக்கொண்ட சம்பவம் எனக்கு நன்கு தெரிந்ததே.



இப்புதிய காலகட்டத்தில் காலம்சென்ற அம்மையார் பல சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி ஆன்மீக செயற்பாட்டில் பங்குத்தந்தையுடனும், பங்கு மேய்ப்புச் சபையினருடனும் இணைந்து ஆர்வமுடன் பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தது பலரும் அறிந்ததே. இவர்களது பிள்ளைகளும் நாட்டின் சூழ்நிலைகளின் நிமித்தம் இடம்பெயர்ந்து தற்போது பிரான்ஸ் நட்டில் குடியேறி வாழ்ந்து வருகின்றர்.

ஒரு சிறப்பு நிகழ்வு 1985ம் ஆண்டில் பலர் வீடுகளில் இருந்து வெளியேறி புகலிடம் தேடித்திரிந்தார்கள். அச்சமயத்தில் தன் தந்தையை இழந்து தாய் வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டு இறந்த நிலையில் ஒன்றரை வயதுக் குழந்தை அநாதையாக்கப்பட்டு பரிதாப நிலையில் இருந்த பொழுது காலஞ் சென்றவரான அருட்தந்தை நோபட் ஒக்கேர்ஸ் அவர்கள் அந்த அழகிய சிறுமியை யாரிடம் ஒப்படைக்கலாம் எனத்தேடிய போது திரு லோறன்ஸ் முன் வந்து ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல அதற்கு சாந்தி என்ற பெயரும் சூட்டி அதனை வளர்த்து திருமணமும் செய்து வைத்து இப்போது பிரான்ஸ் நாட்டில் இரு குழந்தைகளுக்கு தாயாக இருப்பதையறிந்து நான் பெருமையடைகின்றேன். இதற்கு பக்க பலமாக மூத்த மகள்

www.padippakam.com



திருமதி லோறன்ரீனா ஜெயச்சந்திரன் இதற்கு ஊக்கமும் உதவியும் அளித்ததையிட்டு நான் நன்றி கூறுகின்றேன்.

இப்பேற்பட்ட வீரத்தாயை இழந்து கவலையில் ஆழ்ந்துள்ள கணவன், பிள்ளைகள், உறவினர், நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன். மறைந்த திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களது ஆன்மா இறைவனின் இரக்கத்தால் நித்திய சாந்தியடையப் பிராத்திக்கின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com





# ஜோர்ச் திசாநாயக்கா

*வணக்கத்துக்குரிய புனித மரியாள் பேராலயம் அருட்பணி,கலாநிதி*

## பங்கின் பணியின் சில துளிகள்

திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களை 1986ம் ஆண்டு தொடக்கம் எனக்குத் தெரியும் மற்றவர்களுக்கு முன்மாதிரியான ஒரு கிறிஸ்தவப் பெண். சமுதாயத்தில் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டாலும் ஆண்டவனின் பணி செய்வதே முதன்மையாக எடுத்துக்கொண்டார். மற்றவர்களை இன் முகத்துடன் வரவேற்பதும் அவர்களை முழுமையாக உபசரித்து வழி அனுப்புவதும் அவரது மிக உயர்ந்த பண்பு. தனது குடும்ப வாழ்வில் அன்னை மரியாளைப் போன்று அனைத்தையும் தன் உள்ளத்தில் ஏற்று குடும்பப்பொறுப்புகளை நிறைவு செய்தார்.



ஆன்மீகத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் என்று தூய வின்சன் டீ பவுல் அருங்கொடைப் பணிக்குழு, முதியோர் மறைக்கல்வி மறையாசிரியர், திருமுழுக்கு உறுதி பூசுதல் முதலியவற்றுக்கான ஆயத்த வகுப்புக்கள், திருமண ஆயத்த வகுப்புக்கள் போன்றவற்றிற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டார். செப மாலை ஓதுவதும், இறை வார்த்தை வாசிப்பதும் தனது வாழ்நாளில் தவறாது கடைப்பிடித்து வந்தார்.


புனித அந்தோனியார் மீது இறை பற்றுள்ளவர். அவரது இறப்பும் தூய அந்தோனியார் இறந்த செவ்வாய்க்கிழமையே அமைந்திருந்தது. அவர் தன்னுடைய இறப்பு தனது சொந்த மண்ணிலையே நிகழ வேண்டும் என விரும்பி அவ்வாறே ஆசையை நிறைவேற்றினார். அவரது இறுதி வேளையிலும் நோயில் பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்று மரணமடந்தார் இவரது ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய எனது செபங்களில் நினைவுன் கூருவென்.



படிப்பகம்

www.padippakam.com





# வின்சன் டீ பவுல் சபை அங்கத்துவர்கள்

புனித மரியாள் பேராலயம், திருகோணமலை

புனித மரியாள் பேராலய தூய வின்சன் டீ பவுல் சபையில் பணியாற்றி இறந்து போன மூத்த உறுப்பினர் திருமதி பிலோமினா லோறன்ஸ் அவர்களைப் பற்றி சில வரிகள் சகோதரி பிலோமினா லோறன்ஸ் அவர்கள் 1988 தொடக்கம் 2012 வரை பனியாற்ரியுள்ளார்.

எம்பெருமான் யேசு நாதர் இவ்வுலகில் வாழ்ந்த போது நோயாளிகளைக் குணமாக்கினார், ஏழை எளிய மக்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆதரவாக இருந்தார். அவர்களை அரவணைத்து உதவி புரிந்தார். யேசுவின் பாதையைப் பின் பற்றிய தூய வின்சன் டீ பவுல் சபையை தேர்ந்தெடுத்தார். ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் இச் சபை உலகெங்கும் செயற்படுகிறது. இச்சபையின் நோக்கத்தையும் செயல்திட்டங்களையும் செயற்பட பேராலய தூய வின்சன் டீ பவுல் சபையில் சேர்ந்து இப்பணிக்காக தன்னை அர்ப்பணித்து பணி புரிந்தார்.



இச்சபையில் சேர்வதற்கு முன்பதாகவே பேராலயத்தில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது. வறுமையில் வாடும் சிறார்கள் படிப்பதற்காக காந்தீயத்தின் உதவியுடன் பேராலயப் பங்குத்தந்தை அருட்தந்தை டிக்கோணி அவர்களின் அனுமதியுடன் பாலர் பாடசாலையை 1980ம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். அப்போது பாலர் பாடசாலையில் மூன்று ஆசிரியர்களுடன் இவரது மூத்த மகள் றஜனி கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இப்பாலர் பாடசாலை இம்மட்டும் நடைபெற்று வருவதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

மேலும் சபை அங்கத்தவர்களை சோர்வடையா வண்ணம் அறிவுரைகள் கூறி வழி நடத்தி சபையின் தேவைகளுக்கு பணம், பொருள் சரீர உதவி கொடுத்து இன் முகத்துடன் சேவையாற்றினார். இவரது பிரிவு பேராலய தூய வின்சன் டீ பவுல் சபை அங்கத்தவர்களுக்கு மன வேதனையாக இருந்தாலும் அவர் ஆற்றிய பணிகள் எம்மோடு ஒன்றித்து இருப்பது எமக்கு ஆறுதலைத் தருகிறது.

இவருடைய ஆன்மா இறைவனின் சன்னிதானத்தில் ஒன்றித்து இருக்க எமது செபங்களில் செபிப்போம்.

www.padippakam.com



# உறவுப்பாலம்

இற்று விடும் வாழ்வில் தொற்றிவிடும் பந்தங்கள்
சுற்றமிழந்து துயர் வரினும் கலையாது
பற்றுதலும் பாசப் பகிர்வுகளும் பாரில்
அற்றுவிடும் அக்கணமே நில்லாது உலகு





படிப்பகம்

www.padippakam.com





# கேணிப்பித்தன் ச அருளானந்தம்

*முன்னாள் கல்விப் பணிப்பாளர், எழுத்தாளர், கவிஞர், சமூக சேவகர்*

## பசுமை நினைவுகள் ~ திருமதி. பிலோமினா லோறன்ஸ்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்

விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்
திலக வாள்நுதல் நங்கையர் நாட்டிடை
தோன்றி உழைத்திடல் இனிது காண்பராம்



முறுக்கு மீசையன் செந்தமிழ் பாரதி
செப்பிய பாடலின் தலைமகள் நீயேன
மறுத்துச் சொல்லவோர் மாந்தர் இருப்பரோ?
மண்ணிலோர் போற்றிட வாழ்ந்து காட்டினை.

கீழ்திசை வானிலே தோன்றிய சூரியன்
சுடர்விட்டு வீதியில் வந்ததுபோலவே
சூழ்வினை தீர நம் தமிழினம் வாழ்ந்திட
தோன்றிய தாரகை போலொரு பிலோமினா

பங்கம் சூழ்ந்திடும் தமிழின மக்களின்
படுதுயர் களைந்திட பங்காளி ஆகினாய்
காந்தீயம் போற்றியே கல்விப் பணியினில்
ஒப்பற்ற சேவையில் உயர்ந்து நின்றனை

பள்ளிக் கூடங்கள் கட்டித் தந்தனை
பாலர் கல்வியைத் தேடிக் கொடுத்தனை
சொல்லில் சொல்வதைச் செய்து முடித்தனை
தூய கல்வியில் கரிசனை கொண்டனை.

www.padippakam.com



வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின்
வருதுயர் துடைப்பதில் முன்னே நின்றனை
இடரிலும் தளர்விலா உள்ளம் பெற்றனை
இனிய ஜென்னியைப் பெற்றுத் தந்தனை

ஆண்ட தமிழினம் வீழ்ந்து படுவதோ? என
உன்னுரை கேட்டதால் விழித்து பெண்ணினம்
கொண்ட கொள்கையில் கொடிபிடித்தனர்
தந்தை செல்வாவின் தலைமையை ஏற்றனை.

தமிழரசு கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாய்
தமிழர் வாழ்ந்திட மேடை ஏறினை
தேர்தல் களத்திலே பிலோமினா பேச்சினைக்
கேட்டுக் கிராமக் கன்னியர் கூடினர்.

உனது பேச்சினால் தலைவர்கள் வென்றனர்
வெற்றி பெற்றதும் கறிவேப்பிலை ஆகினை
சுயநலமற்ற போக்கைக் கைக் கொண்டனை
சுயமைத் தலைவர்கள் ஓடியொழிந்தனர்

எல்லாத் தலைவரும் நடிப்புச் சுதேசிகள்
தோலிரு க்கச் சுளை கவர்பவர்
தவித்த முயலடிக்கும் சந்தர்ப்ப வாதிகள்
தமது தேவையை முடிக்க நடிப்பவர்

இவர்களை நம்பியே தமிழினம் இருக்கு
என்ற பொய்யினை உடைக்கும் நாள்வரும்
அழகு மாளிகை உயர்ந்து நிற்கையில்
அத்திவாரத்துள் கல்லாய்ச் சமைந்தனை

பேர்கெட்டுப் போய்த் தமிழினம் கிடக்கையில்
புறப்பட்ட இளைஞரின் படைதனைப் பார்த்தனை
புறப்பட்ட காளையர் பிரிந்த போதிலும்
போற்றிக் காத்தனை புகலிடம் தேடினை

மண்ணின் மீட்சியே மூச்சாய் கொண்டனை
மகளை அவ்வாறே வளர்தெடுத்தனை
மண்ணின் பற்றினால் மலைநாடி வந்தனை
மண்ணை வணங்கி மண்ணுள் மறைந்தனை





படிப்பகம்

www.padippakam.com



இறைவன் படைப்பினைப் புரிந்தவர் யாருளர்?
எவரும் யமன்பிடி தப்பிய வரலாறில்லை
ஒருநாள் இவர்கள் பதில் கூறும் நிலைவரும்
அதுவரை படுதுயர் தொடரத்தான் செய்யும்.

சிக்கல் எத்தனை வந்தெதிர் கொள்ளினும்
சிக்கல் அறுத்து வெற்றியை கண்டனை
சீராய் வாழ்ந்தனை ஜென்னியின் (ப)கொடையால்
சிறப்பாய் இறுதிப் பயணம் முடிந்தது.

சட்டை கிழிந்தால் புதுச்சட்டை மாற்றுவர். இம்மனித
கட்டையும் அவ்வாறே. பிலோமினா உயிருக்குப் புதுச்
சட்டை தேடியே இறையடி போனா ரெனநினைந்து
மாற்றம் ஒன்றுதான் மாறாதது. என நிறைவு கொள்வோம்.





படிப்பகம்

www.padippakam.com






## ப சுஜந்தன்

மாவட்ட அலுவலர் (மூதூர்), எழுத்தாளர், கவிஞர்


### லோறன்ஸ் அம்மா என்னில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடம்

நான் காலத்தின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் அதே காலம் தன்னை என்னிடம் அடிக்கடி நிருபித்துப் போயிருக்கிறது. லோறன்ஸ் அம்மாவின் உறவிலும் கூட அது தன்னை நிருபிக்கத் தவறவில்லை என்றே நம்பத் தோன்றுகிறது. யார் யார் எப்போது சந்தித்துக்கொள்ளவேண்டும் யார் யார் எப்போது பிரிந்து செல்ல வேண்டும் என்ற முன்னேற்பாடு காலத்தின் கைகளில் வரிக்கப்பட்டுள்ளது என்பதை நம்பாமல் இருக்கமுடிகிறதில்லை. முன்னய பிறப்புகளின் உறவின் தொடர்ச்சி இப்பிறப்பிலும் இந்த உலகில் நம்மையறியாமல் இழையோடிக்கொண்டேயிருக்கிறது.



எனக்கும் லோறன்ஸ் அம்மாவுக்குமிடையிலான தொடர்பு வெறும் இரண்டே மாதங்கள்தான் இருந்திருக்கும் அது அம்மாவின் இறுதிக்காலமாக இருந்தது. நான் எனது உறவின் தொடக்கம் என நினைத்திருந்தேன். நான் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தில் அம்மாவின் மகளாகிய ஜென்னி அன்ரியுடனான தொடர்பு எனக்கு ஏற்பட்டது அவர் வசதியற்ற பல பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் கல்வியைத் தொடர பண உதவி செய்து கொண்டிருந்தார். அதில் நானும் ஒருவனாக இருந்தேன். நான் பல்கலைக்கழக கல்வியை தொடர்வதில் அவரின் பங்கு நிறையவேயிருந்தது. நான் எந்த சூழ்நிலையிலும் நன்றியுணர்வுடன் அன்ரியின் தொடர்பை பேணி வந்தேன். அது நாளடைவில் இரத்த உறவினைப்போல வளர்ந்து கொண்டது.

ஜென்னி அன்ரியின் உயர்ந்த உள்ளத்தை பார்த்து வியந்த போதெல்லாம் இவரை பெற்ற தாயும் உன்னதமானவளாகத்தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் இருந்தது. அந்த உண்மையை அம்மாவை நான் சந்தித்த போதே உணர்ந்து கொண்டேன். தெளிந்த பேச்சு, சமூக அக்கறை, எதிலும் தூய்மை, உயர்ந்த உபசரிப்பு, அன்பு இவற்றையெல்லாம் நான் அம்மாவைச் சந்தித்த முதல் நாளே கண்டுகொண்டேன். ஆரோக்கியமான சூழலில் மூன்று நான்கு தடவைகள் அம்மாவுடன் பேசும் வாய்ப்புக்கிடைத்தது அம்மாவுடனான அந்த குறுகிய உரையாடல்களில் இருந்து அவரின் முழு வாழ்வையும் என்னால் அனுமானிக்க முடிந்தது. நூறு வார்த்தைகள் பேசினால் அதில் ஐம்பது வார்த்தைகள் தமிழரின் அரசியல் பற்றியும் எதிர்காலம் பற்றியதாகவுமே இருந்தது.

www.padippakam.com



ஒரு தடவை எனது கவிதை நூல் வெளியீட்டுக்கு அம்மாவை அழைத்திருந்தேன் உடல் நலம் குன்றியிருந்த நிலையிலும் அதில் கலந்து கொண்டதோடு மட்டுமன்றி புத்தகத்தை முழுமையாக வாசித்து என்னைப் பாராட்டினார். உண்மையில் நான் வியந்து போனேன். இந்த வயதிலும் அவருக்குள் இருக்கும் இலக்கிய உணர்வு என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது அம்மா அரசியலில் சுழன்ற போது நான் பிறக்காதிருந்தேன். அந்த காலத்தைப் பகிர நான் தகுதியற்றவன் இருப்பினும் அந்தத் தாயுடன் சில காலமே பழகும் வாய்ப்புக்கிட்டியதால் அந்த தகுதி அடைந்துவிட்டதாய் எனக்குள் ஒரு பிரமிப்பு. தள்ளாடும் வயதிலும் அம்மா கனலும் நெருப்பாக இருந்தார். ஒழுக்கம், மதம், பண்பாடு, தூய்மை, இவற்றிலெல்லாம் இறுதிவரை இம்மியும் பிசகிவிடாத வைராக்கியக்காரியாக வாழ்ந்தார். அவரின் இறுதிக்காலம் இறை பணியாகவே இருந்தது.

சுஜி என்று என்னை உரிமையோடு அழைக்கும் போதெல்லாம் அந்தக் குரலில் ஒரு பேரப்பிள்ளையிடம் இருக்கும் அன்பு வழிந்தது என் உள்மனமும் அதையே நினைத்துக்கொண்டது. அம்மாவின் ஆரம்பகாலத்தில் எனக்கு வழுங்காத உறவை காலம் இறுதியில் வழுங்கியிருந்தது. அம்மா உடல் நலம் குன்றிக்கொண்டிருந்த போது அவரை பிரான்ஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளை ஜென்னி அன்ரி மேற்கொண்டிந்தார் தான் வந்து அம்மாவை அழைத்துச் செல்லும் வரை அம்மாவை பார்த்துக்கொள்ளும் பொறுப்பை என்னிடமே ஒப்படைத்தார் அன்ரியின் கையில் அம்மாவை பத்திரமாகச் சேர்க்க வேண்டும் என்ற அக்கறையும் பெரு விருப்பும் என்னை குடிகொண்டிருந்தது. அன்ரி வருகின்ற நாளும் குறித்தாயிற்று அம்மாவின் உடல் நலம் மோசமடைந்து கொண்டிருந்தது வைத்தியசாலையில் அனுமதிப்பதும் வீட்டுக்குக் கொண்டு வருவதுமாக சில நாட்கள் ஓடின. ஜென்னி அன்ரி வருவதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தது.



அன்று மாலை அம்மாவுடன் வைத்தியசாலையில் கூட நின்றவர்களிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது அம்மா தன் உயிரை நீத்துவிட்டார் என்ற அந்தச் செய்தி என்னை உலுக்கிப் போட்டது. நம்பமுடியவில்லை அன்று காலைதான் அங்கிருந்து வேலை காரணமாக அலுவலகத்துக்கு வந்திருந்தேன். அம்மாவின் மரணம் நம்பமுடியாத படி இருந்தது. ஜென்னி அன்ரி வர இன்னும் இரண்டு நாட்கள் உள்ள நிலையில் உயிருடன் அம்மாவை அவரிடம் ஒப்படைக்க முடியவில்லை என்ற குற்ற உணர்வு என்னை வாட்டியது. நமக்கு ஒரு எல்லைக்கு மேல் சக்தியில்லை என்பதை உணர்ந்து கொண்டேன். பின்பு மறுநாள் காலை அம்மாவின் உடலை வீட்டுக்குக் கொண்டுவந்தோம். பிள்ளைகள் இங்கு இல்லாத குறை தெரியாத படி எல்லாக்காரியங்களையும் செய்தோம். அம்மாவும் பிள்ளைகளும் செய்த நற்பயனாய் எல்லோரும் கூடினார்கள். ஜென்னி அன்ரியிடம் அம்மாவை வெற்றுடலாகத்தான் கொடுக்க முடிந்தது.

அம்மா தன் மண்ணை உயிரிலும் மேலாக நேசித்திருந்தார். தன் மரணம் தன் நிலத்தில் நிகழ்வதையே அந்த ஆன்மா விரும்பியது. அந்நிய தேசத்தில் மடிய விரும்ப வில்லை அதனால்தான் பிரான்சில் வசித்த போதும் இறுதிக்காலத்தில் ஒரேபிடியாக இருந்து அம்மா தன் தாய் நாட்டுக்கே வந்து சேந்தார். அந்த உயர்ந்த

www.padippakam.com



ஆன்மாவின் எண்ணம் ஈடேறி விட்டதாய் ஆறுதலடைந்தோம். வயிற்றில் பிறந்த பிள்ளை செய்யும் இறுதிக்கடமைகள் அத்தனையையும் ஜென்னி அன்ரியுடன் சேர்ந்து செய்து முடித்தேன்.அம்மாவின் இறுதி ஊர்வலம் ஒரு அரசியல் தலைவரின் ஊர்வலம் போல் நடந்து முடிந்தது. அதுதான் அம்மா இந்த உலகில் சிறப்பாக வாழ்ந்தமைக்கு அடையாளம்.

ஒரு மகனாய் அந்த அம்மாவுக்கு இறுதிக்காலத்தில் கடமை செய்யும் வாய்ப்பை தந்தமைக்கு இந்த உலகை ஆளும் சக்திக்கு நன்றி சொல்ல வேண்டும். ஈற்றில் வந்து என்னோடு பிணைந்து விட்ட உறவினாலேயோ தெரியவில்லை அம்மாவின் இழப்பு இன்னும் என்னில் நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com







# கனகசிங்கம் சுமன்

மாவட்ட அலுவலர் (திருகோணமலை), இளம் கவிஞர்


## ‘அன்ரியம்மா’ எனும் பந்தபாசம் தந்து விட்டு நீண்ட பயணம் செய்த லோறன்ஸ் அம்மா...

அழகிய அன்புச்செடியின் தாய்வழி காணாதது கண்டு
என் உள்ளம் குமுறுகிறது...
மன்னிப்பற்ற குற்றம் செய்து விட்டது போல
என் உடல் பதறியது...

செய்தி கேட்டதும்...!
தாயை இழந்த இளங்கன்று போல
லோறன்ஸ் அம்மாவின் வீடு தேடி அலைந்தேன்...

சென்றதும்...!
ஓர் அன்புக் கரம் என்னைக் கட்டி அணைத்து வரவேற்றது
அப்போது...!
என் மனம் ஒப்பானது, ஓர் திசை மாறிய முஞ்சூறின் பரிதவிப்பிற்கு...

ஏனெனில்...!
லோறன்ஸ் அம்மாவின் இழப்பு,
அம்மாவை ஒரு தடவையேனும் பார்க்கவில்லையெனும் தவிப்பு,
மகள் ஜென்னியின் அன்புக்கரங்கள்...

இவையெல்லாம் என் நெஞ்சை நெருட வைத்ததினால் என்னமோ..!
அன்ரியம்மா... எனும் பந்தபாசம் ஆணி வேராகியதோ...

வந்தார்கள்...!
தமிழ் உணர்வாளர்கள் கட்சி கட்சியாக வந்தார்கள்..
காந்தீயத்திலிருந்தும் வந்தார்கள்..
திருச்சபையிலிருந்தும் வந்தார்கள்..
அம்மாவைப் பார்த்தார்கள்..





படிப்பகம்

ஆறுதல் கூறினார்கள்..
அம்மாவின் அனுபவம் பேசினார்கள்..

புரிந்தது...!
அப்போது தான் புரிந்தது லோறன்ஸ் அம்மா ஓர்
அரசியல் புலி என்றும்..
காந்தீயத்தின் அஹிம்சைத்தாய் என்றும்..
திருச்சபையின் தொண்டர் என்றும்..
மேடைப் பேச்சாற்றலுள்ள பெண்சிங்கம் என்றும்..

நினைக்கின்றேன்...!
அம்மா! நீ நயமான வரிகளில் வீரச்சொற்களை
மேடைகளில் சிந்தியிருப்பாய்..
உன் தீராத உழைப்பும், திகட்டாத பொது உள்ளமும் கண்டு
எம்மவர் மனம் மாறியிருப்பர்..
பெண்ணியத்திற்கான உன் குரலும்,
சீர்பொலிவான வாழ்வும், உன் வீரச்செயல்களும் கண்டு
பெண் சமுதாயம் இன்று துணிந்தனரன்றோ...!!

பிரார்த்திக்கின்றேன்...!
ஆயனே ஆண்டவனே அன்பர் பெருமானே...
நேயனே நல்லன்பர்க்கு நேத்திரமாய் நின்றோனே...

ஆண்டவரே!
எமக்கும் மதிமயங்கி ஓதினோம் ~ நாம் விருத்தம்
கடைக்கண் இருளாகி காதோசை வேறாகி
உடைக்கலமும் தாமிழந்து உயிர் பிரிந்து வானோக்கி ~ வரும்
இத்தொண்டர்க்கு விண்ணகந்தானளித்து
காத்தருள வேண்டுகின்றோம் தொண்டர்க்கருள்வோனே...

www.padippakam.com





# அருள்சுலக்ஷிகா அருள்பாஸ்கரன்

*தி / ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் ஏழாம் வகுப்பு மாணவி.*
*வரை கலைஞர் எழுத்தாளர்.*

## தேர்தல் திருவிழாவின் கதாநாயகி

தேர்தல் திருவிழா தொடங்கி விட்டது. பட்டி தொட்டிகளின் மூலை முடுக்கெல்லாம் ஒலிபெருக்கிகள் முழுங்கத் தொடங்கிவிட்டன. தாத்தா அவரது இளமைக் காலத்தில் தேர்தல் நினைவுகளை எனக்குப் பலமுறை கூறியிருக்கிறார். அவரது பசுமை நினைவுகளில் மூழ்கி முத்தெடுக்க முயல்கிறேன். ஒருசில மாதங்களுக்கு முன்னர்தான் நான் எனது தாத்தாவோடு 'அம்மம்மா' என்று ஆசையோடு அழைக்கும் திருமதி. பிலோமினாவைப் பார்த்துவிட்டு வந்தேன்.

எப்போது போனாலும் அன்பொழுகப் பேசுவார். அவருக்கு யாரை யாரைப் பிடிக்குமோ அவர்களோடு மிகவும் அன்பாக இருப்பார். அவரோடு பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாமல் இருக்கும். அவரின் இழப்பு என்னை வெகுவாகப் பாதித்துவிட்டது. தாத்தாவோடு அவரது மோட்டார் சைக்கில் பின்னால் இருந்துகொண்டு வந்தேன். சிவன்கோயிலின் முன்றலிலே அந்தப் பாடல் ஒலித்துக்கொண்டு இருந்தது. தேர்தல் வந்தால் மட்டும் தூசிதட்டி சில பாடல்கபைப் போடுவார்கள். தேர்தல் முடிந்ததும் பழையபடி இவை மூலையில் முடங்கி விடும். இப்போது திருகோணமலையில் தேர்தல் திருவிழா தொடங்கிவிட்டது. அதனால் அந்தப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கி விட்டன. எனது காதுகளில் அந்தப் பாடல் வந்து மோதி சிந்தனையைக் கிளறிவிட்டது.



'சத்தியமே நித்தியமாய்க் கொள்ளடா .... நில்லடா' என்ற பாடல் கொள்ளை கொள்ளும். தொடர்ந்துவரும் மற்ற அடி சிந்திக்க வைக்கும்.
'குள்ளநரிக் கூட்டம் வந்து குறுக்கிடும்
நல்லவர்க்குத் தொல்லை தந்து ஏய்த்திடும்'

பாடல் காதுகளில் நுழைந்து உணர்ச்சி மண்டலத்தைத் தடவி உடலெங்கும் பரவி உரோமக் கால்களைக் குத்திட்டு நிற்கச் செய்யும். பாடலில் குதிரையோட்டத்தின் குளம்பொலி உள்ளத்தைத் துள்ளவைக்கும். இப்போது அப்பாடல் அடிமனதில் புகுந்து பதுங்கியிருந்த நினைவலைகள் எரிமலையாகிக் குமுறத்தொடங்கி விடுகிறது. அப்படியே காட்சியாகி எண்ணத்திரையில் ஓடத்தொடங்கியது.

தேர்தல் அது ஒரு தேர்தல் காலம்.

*பிலோமினா லோறன்ஸின் உயிர்த்தெழும் நினைவுகள்*

www.padippakam.com



மாலையானதும் கிராமங்கள் களைகட்டும். எங்கும் ஒலிபெருக்கி முழங்கும்.. அன்றும் மக்கள் கூட்டம் கூடுகிறது. பலர் கூட்டத்தில் கலந்து கொள்ள முண்டியடிக்கின்றனர். பலர் பேசுகிறார்கள்.

பெண்களின் பக்கம் சலசலப்பு.
"இன்னும் அவர் வரல்லையா"? இது கிராமியப் பெண்களின் எதிர்பார்ப்பு.
"இன்னும் சில நொடிகளில் வந்துவிடுவார். கொஞ்சம் பொறுங்க"
ஏற்பாட்டாளர் பதிலிறுக்கிறார். எனினும் அவர்களுக்குத் தடுமாற்றம். நேரம் செல்லச்செல்ல அவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துக் கடுப்பை ஏற்படுத்துகிறது.

"அவர் வரமாட்டார். இவ்வளவு நேரமாகியும் வரல்லையே. நாங்க போவம். எழும்புங்க"

பெண்கள் ஒவ்வொருவராக எழுந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்..

பெரும்பாலான பெண்கள் குழுமியிருந்த இடம் வெறுமையாகக் கிடக்கிறது. இருள் சூழ்ந்து கருக்கட்டுகிறது. மெல்லிருட்டைக் கிழித்துக் கொண்டு அந்த மொறிஸ்மைனர் கார் வருகிறது. கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர் நிலைமை யைக் கண்டுகொள்கிறார். சடுதியாக எழுந்து ஒலிபெருக்கியைக் கையில் எடுக்கிறார். பெண்களில் பலர் வெளியில் போய்விட்டார்கள். மொறிஸ்மைனர் காரைக் கண்டதும் திரும்பிப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கிறது. அது மொறிஸ்மைனர்தான். காதுகொடுத்துக் கேட்கிறார்கள். அறிவிப்பாளரின் குரல் கேட்கிறது.



"இதோ பிலோமினா அவர்கள் வந்துவிட்டார்கள். அவரை மேடைக்கு அழைக்கிறோம்" ஒலிபெருக்கி அலறுகிறது. கலைந்து சென்ற கூட்டம் மீண்டும் அலையலையாக ஒன்று கூடுகிறது. பிலோமினா மேடையை நோக்கி நடக்கிறார். சற்று நேரத்துக்கெல்லாம் ஒலிபெருக்கியின் முன்னால் பிலோமினா. வெளியேறிய கூட்டம் அதிகமாகிறது.

"வீட்டில அடஞ்சி கிடக்கிற எங்களுக்கு அவர் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அவர் எங்களுக்காகக் குரல் கொடுப்பவர். அவருக்காகவே வருகிறோம்." தமக்குள் பெண்கள் பேசிக்கொள்கிறார்கள். முதல் இடம்பிடித்திருந்த பெண்களுக்கு இப்போது அந்த இடங்களில் இடமில்லை. முண்டியடித்துக் கொண்டு முன்னேறுகிறார்கள். பெண்கள் அவரவர் இடங்களில் இருக்கும் வரை ஒலிபெருக்கியைக் கையில் பிடித்தவாறே பிலோமினா சிலைபோல் நிற்கிறார். தனது பார்வையை மக்களிடையே வீசுகிறார்.

"பெண்கள் மேடைக்கு வருவதையே கேவலமாகக் கருதும் நமது சமுதாயத்தில் துணிவோடு வந்து மேடையில் நிற்கிறார்." இளைஞர் மத்தியிலும் ஒரு எழுச்சி.. அவர்களும் திரண்டு நிற்கிறார்கள். எங்கும் ஒரே அமைதி. கணீரென்ற குரல் ஒலிக்கிறது. அவரது குரல் ஒலிக்கும் போது மக்கள் அமைதி காத்தனர்.

www.padippakam.com



மக்களை மயங்கவைத்துப் பேசும் ஆற்றலை எங்கே கற்றார்? தலைவர்களின் போலித்தனங்களை மறைத்து அவர்களை மாசுமறுவற்ற உத்தமர்களாக உயர்த்தி, மக்கள் மனங்களில் குடியமர்த்தி விடுகிறார். அவரை ஏணியாக்கி ஏறிய தலைவர்கள் பின்னர் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள் என்று தெரிந்தும் அவர்களின் வெற்றிக்காகப் பாடுபடும் உத்தமி.

இவரையே தலைவராக்கி உரிமைகளை வென்றெடுத்தால்? இளைஞர்கள் பேசிக்கொள்கிறார்கள். சட்டென்று அவசரது குரல் இளைஞர்களைத் தொடுகிறது.
'அன்ன மூட்டிய தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்'
பாரதியின் தீப்பொறிப் பாடலடியினை ஆவேசமாகப் பேசியபோது இளைஞர் மத்தியிலிருந்து கரகோசம் வானெழுந்து அதிர்ந்தது. தலைவர்கள் வென்றார்கள். சென்றார்கள். அம்மம்மா உடல்நலக் குறைவாக இருந்தபோது தலைவர்களையே காணவில்லை. கோயிலும் கோயில் குடும்பமென்று இருந்தார். இப்போது அவர் இல்லை. கண்கள் பனித்தன.

"சுலக்ஷிகா! என்ன சைக்கிளை விட்டு இறங்காமல் இருக்கிறாய்? வீடு வந்திற்று. இறங்கு." தாத்தாவின் குரல்கேட்டுத் திடுக்கிடுகிறேன். கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.
"ஏன் அழுகிறாய்"?

"தெரியும். தேர்தல் திருவிழாவில் அந்தப் பாடல்கைக் கேட்டிருக்கிறாய். உன்ர அம்மம்மாவை நினைந்தாய்தானே?"



தேர்தல திருவிழாவின் நாயகியை நினைத்தவாறே அவரின் பின்னால் செல்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com





# செ அருட்பிரகாசம்

*ஓய்வுபெற்ற அதிபர்*

## என்றும் அணையாத விளக்கு

அன்பெனும் குடும்பத்தில் அகல் விளக்காய் திகழ்ந்த அறிவொளியாக நிற்கும் என் உடன் பிறப்பே உலகிற்கு பல தொண்டு புரிந்த பிலோமினா அக்காவே உன் துயர் எங்களை உருக்குலைத்துப் போட்டதம்மா கனவிலும் நினைவிலும் பிலோமினா என்ற நினைவொளி பகந்த வண்ணம் நிற்குதம்மா பரந்து பட்ட தமிழ் நெஞ்சங்களில் பார்க்குமிடமெல்லாம் உங்கள் சேவை, கல்விப்பணி, காந்திய சேவை தமிழினத்தின் விடிவுக்காய் சளைக்காது உழைத்தமை அறவழிப்போராட்டத்தில் அல்லும் பகலும் அதற்காக உழைத்த அறவொளியே கள்ளமிலா நெஞ்சம், கபட மிலா கொள்கை, கண்ணியமான இல்வாழ்வு அத்தனையும் விட்டு காலதூதன் கையில் சென்றாய் கதி கலங்கி புலம்பி நித்தம் அழுத வண்ணம் நிற்கின்றோம்.



நோயுற்ற இறுதி நேரத்திலும் வைத்திய சேவையிலும் மனம் தளராது ஓடி ஓடி செயற்பட்ட என் மகள் ஜமுனாவும் உங்களையும் உங்கள் மகள் ஜென்னியையும் கதைத்த வண்ணம் உள்ளார். அறிவுச்சுடரே பிலோமினா அக்காவே எங்கள் இதயங்களில் என்றென்றும் அகலாத அகல் விளக்கு நீயம்மா.



படிப்பகம்

www.padippakam.com





# விஸ்வநாதன் காந்தீபன்

வைத்திய கலாநிதி, இலக்கிய ஆர்வலர்

## என்றும் மறவா லோறன்ஸ் அம்மா

என் மதிப்புக்குரிய தமிழ் தாயே!
மறைந்து விட்டாய்
இல்லை இழந்து விட்டோம்
தமிழினம் கூடவே தமிழ் தாயையும்

தமிழினம் உன்னை மறக்கவில்லை
உன் உயிர்க்காற்றில் இருந்து
வெளியேறிய வார்த்தைகளே இன்று
வெளிநாடு வரையும் பரவியது
நீ விட்டுச் சென்ற உணர்வுகளை
உன்னினமும் சிசுக்களும் என்றும்
உச்சரித்துக்கொண்டே இருக்கும்

நாட்டுக்காக நீ நாடு கடத்தப்பட்டாய்
அந்த நாடு உன்னை அரவணைத்தாலும்
நம் நாடு உன்னைப் புறக்கணித்தது
ஆனாலும் நீ நல்ல தாய் என்றதால்
உடனே உன் வீட்டை நாடியது
எவராலும் மறக்கமுடியாது

நீ இன்று சொர்க்கத்தில்
நீ நினைத்த இனம் இன்று நரகத்தில்
கதறுகின்றோம்
உன்னைப்போன்ற தாயின்
கருவறையில் மீண்டும் பிறக்க
நீ வாழ்க உன் நினைவுகள் என்றும்
எம் மனதில் வாழ்க நன்றி தயே!

www.padippakam.com





# வை வோகநாதன்

*முன்னாள் ஆசிரியர், இலங்கை கொம்யூனிஸட் கட்சி உறுப்பினர்.*
*தற்போது ஜேர்மனியில் வசிக்கின்றார்.*

## ஒரு கோடிக் கருணைப் பூங்கா விழி மலரும் பாவை!

திருக்குறளோடு எனக்கு உடன்பாடு இல்லை என்ற போதும்.... இரண்டு குறட்பாக்கள் சகோதரி பிலோமினாவைச் சுட்டுவதற்காக!

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு (குறள் - 336)

நிலையாமை மட்டும் சொல்வதல்ல! மறைவின் விருப்பமும் ஏக்கமும் தொனிப்பது. நேற்று வரை நல்லதையே நினைத்து நல்லதையே செய்து நல்ல பண்புகளையே வெளிப்படுத்தி வாழ்ந்தவரான பிலோமினா அவர்கள் இன்றில்லை என்ற இழப்பும் வேதனையும் அவரை அறியக் கிடைத்த யாவருக்கும் ஆழ்ந்த வேதனை தான்!

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்! (குறள் - 114)



தகமையுடையவர் என்பது தேடிய புகழின் தொகை மட்டுமல்ல! அவர் வழிநடத்தி விட்டுச் சென்ற பின்னாளர்களும்!

சுமார் ஐந்து ஆண்டுகளிருக்கும் வானொலியிற் தொடங்கிய ஜென்னியின் அறிமுகம்! இலக்கிய, அரசியல் ஒன்றுகூடல்களாக வளர்ந்து குடும்ப உறவாகிவிட்டது. ஒரு நாள் பாரிஸ் நகரிலுள்ள அவரது இல்லத்திற்கு நாம் குடும்பமாகச் சென்ற போது வாசலில் நான் எம்மை வரவேற்றவர் சகோதரி!. அந்த கணப்பொழுதில் சகோதரி பிலோமினாவின் கண்களின் வரவேற்பே இந்தக் கட்டுரையின் தலைப்பானது! அது மட்டுமல்ல பல நூறு கலைக் கூடங்கள், அனுபவத்தின் முதிர்வு என அந்தக் கண்களிடம் பல அடுக்குகள்!

இவரது வாழ்வியலை! உள்ளே இவரது தொடர்களிலிருந்து அறிய முடிந்தது. அமைதியும் விபரமுமான கணவர் லோறன்ஸ் அவரிடமும் அரசியல்! இதயத்தில் கனமோ எதிர்பார்ப்போ இல்லாமல் பரபரப்போடு முகம் மலர யாரையும் வரவேற்கும், உதவும் பண்புகளின் உறைவிடமான ஜென்னி இந்தப் படபடப்பிற்கு வரவேற்புக்கு மைத்துனிக்குத் துணை நிற்கும் சாந்த சொருபியாக மருமகள் ராணி, அமைதியான மகன் பாபு ஏன் பேத்தி திவேனாவையும் கூடக் குறிப்பிட வேண்டும் (நான் பார்த்தபோது வயது 10 இருக்கும்) அந்தப் பாலகி கூடத் தன் கைச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியை நாட்டிலுள்ள வறிய மாணவர்களுக்காகச் செலவிட மாதம் தவறாமல் வழங்கும் பண்பிருந்து! குடும்பத்தின் அத்தனை உறுப்பினர்களும் இத்தகைய உதவிகளில் தம்மை ஈடுபடுத்தியிருந்தது எம்மை வியக்க வைத்தது.

www.padippakam.com



அத்தனையும் சகோதரி பிலோமினா வழி வந்த பண்புகள்தான் என எம்மால் உணரமுடிந்த போது அவரைப்பற்றி எழுதவோ மேற்படி குறள்களுக்கு விளக்கமோ தேவையற்றவை! பண்புகள் மட்டுமல்ல தனது பேச்சாற்றலையும் எதையும் முன்னின்று ஆற்றிமுடிக்கும் திறன்களையும் ஜென்னியிடமும் இவர் வளர்த்திருந்தார்.

பண்புக்குரிய சகோதரி பிலோமினா அவர்களை இலங்கையில் ஏற்கனவே அறிந்திருக்கவில்லை என்பது வருத்தத்துக்குரியது என்ற போதும் சமாதானப் படுத்திக்கொள்ள முடிகிறது. காரணம் நாம் இருவரும் வெவ்வேறு திசைகளில் பயணித்தவர்கள்! சந்தித்திருக்க முடியாது தான்!

இனம், மொழி, மதம், நாடுகள் என்ற எல்லைகளுக்கப்பால் சர்வதேசத்து உழைக்கும் மக்கள் என்ற சூத்திரத்தை ஆராதித்து அதனடியில் பிரச்சனைகளு க்கான தீர்வைத் தேடும் திசையில் என்னுடைய பயணம் தொடர்ந்தது தொடர்கிறது!

பிரச்சனைகள் பற்றாக்குறைகளைப் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற் றுபவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்று சகோதரி நம்பிக்கையோடு அவர் பயணம்.

இந்த நம்பிக்கையை உளமார நேசித்து! உண்மையாகவும் உக்கிரமாகவும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார் என்பதை அறியமுடிந்தது!

உணர்வுகளை முடுக்கிக் குதிரைகளை ஓடவிட்டுப் பதவியிலும் பட்டத்திலும் ஏறிச் சவாரி செய்யும் பாராளுமன்ற அரசியலாளர்களிடமிருந்து தீர்வுகளெதுவுமோ, தொண்டர்களுக்கான உரிய இடமோ, மதிப்போ, அந்தஸ்தோ கிடைப்பது கிடை யாது. இவற்றைவிட எமது உண்மையான உழைப்பு வீணடிக்கப்பட்டதே என்ற ஏக்கமே இறுதியில் தொண்டர்களிடம் எஞ்சும்!



என்னை வரவேற்ற அந்த ஆயிரம் வாட்ஸ் ஒளிக் கண்களின் ஒரு ஓரத்தில் இந்த ஏக்கமும் தெரிந்தது. வெஞ்சிறையையும் தூசாக நினைத்த அரசியல் ஈடுபாட்டைப் பின் பகுதிகளில் குறைத்துக்கொண்டார்.

எது எப்படியோ மானிடம் வாழ்வதற்கு நாம் முன்மாதிரியாகக் கொள்ள எமக்குக் கிடைத்த ஒரு மாதரில் மாவரம் சகோதரி பிலோமினா லோறன்ஸ்!

இவருடைய தன்மைகளிலிருந்து நாம் கற்ற பாடமாக நான் ஜென்னிக்கு சொல்ல நினைப்பது ஒன்றுண்டு யாரென்றில்லாமல் அனைத்து அரசியலாளருக்கும் உதவும் ஆர்வம் இறுதியில் விரக்திக்கும் ஏமாற்றத்துக்கும் இட்டுச் செல்லும்! உங்கள் படபடப்பான உள்நோக்கமற்ற வெள்ளை மன ஆர்வத்தை அரசியளாளர்கள் உறிஞ்ச முடிந்தவர்களே தவிர உதவமுடிந்தவர்களல்ல..... தேர்வுடன் ஆதரியுங்கள்!

தொடர்ந்தும் அன்னையின் நாமம் வாழ நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு செய்யும் தொடர்ந்த உதவிகளோடு வேறு சேவைகளையும் தொடர்வீர்கள் என்ற உறுதியோடு அன்னைக்கு விடைகொடுப்போம்! அவர் நாமம் அழியாது!

www.padippakam.com





# நடராசா அனோஜா

ஆசிரியர், சமூக சேவகி

## அன்புத்தாயே

அன்பையும் பண்பையும்
இரு கண்களெனக் காத்து
சீர் குன்றாது வாழ்ந்து
நேசம் தந்த தாயே !

தரணியில் வாழ்ந்தது போதும் என்றா
வான் சென்றாய்
அனைவரையும் வாடவைத்து
சித்தத்தை கலங்கடித்து
கண்களைக் குளமாக்கிய
கருணையின் வடிவே !

கடவுளிடம் சென்றாயோ
கலங்குகின்றோம் உம்மை
காலன் கவர்ந்த செய்தி கேட்டு
என்னைப் பெற்ற தாய்போல்
என் முகம் குறிப்பறிந்து
என் தேவைகள் பூர்த்தி செய்து
நல்லுரைகள் பல பகின்று
என்னை வாழ வைத்த தாயே !

உன்னை ஏழ் ஏழ் பிறப்பிலும்
மறப்பேனா !
தெய்வத்திருந்தொண்டில் அன்னை மரியாளாய்
திகழ்ந்த தெய்வத்தாயே !
தெய்வத்தின் நிழலில் நித்திய இன்பமுடன்
உங்கள் ஆத்மா சாந்தி பெற அஞ்சலிக்கின்றோம்.





படிப்பகம்

www.padippakam.com





# கு கனகசிங்கம்

தென்னை அபிவிருத்திச் சங்கத் தலைவர், வட்டச் சேவையாளர்,
கவிஞர்

## லோறன்ஸ் அம்மா

அன்போடு பண்பும்
ஆன்மீக உணர்வும்
இன்புறப் பழகும் இனிய நல் நடையும்
ஈகையில் மிக்கோராய்
உண்மை நண்பதாய்
ஊருக்கும் உயிர் தமிழுக்கும் உழைத்தாய்

ஐயன் தேவனை
ஒரு பொழுதும் மறக்காமல்
ஓதரும் தீங்கினை
ஒருவருக்கும் எண்ணாய்
எஃகு எனும் இதயத்தால்
எதிரியை வீழ்த்தினாய் வாழ்ந்தாய்

இறப்பினை தடுத்திடுவார்
எவருமே இல்லையம்மா
இறப்பும் பிறப்புமிங்கு
இறை விதித்த படியே
நிட்சயமாயுள்ள நிதர்சனமிது
தப்பமுடியாதெவரும்

ஊட்டி வைப்பானும்
உறங்க வைப்பானும்
ஒன்றோடு ஒன்றை மூட்டி வைப்பானும்
இரு வினை பாசக்கயிற்றின் வழி
ஆட்டி வைப்பானும் ஒருவன் உண்டே
அவந்தான் இறைவன்
அவரின் கருணையின் படி
ஆத்மா சாந்தியடைய வேண்டுவோம்

www.padippakam.com



# இரத்த பாசம்

உயிர் அகலும் உடல் சிதையும்
உடன் இருந்த பொருள் அழியும்
உற்ற துணை போகும் போகாது
உள்ளிருக்கும் தொப்புள் கொடி உறவு



படிப்பகம்

www.padippakam.com





# கணவர் அன்ரனி சவரிமுத்து லோறன்ஸ்

## கணவன் புலம்பல்

கூடி இருப்பதுவும் துகளாய் சிதறி
நொடியில் பிரிவதுவும்
வாழ்வென்ற பெருங்கடலில்
நாளும் நடப்பதுதான் நானிலத்தில்
நேற்றிருந்தார் இன்றில்லை
இன்றிருந்தார் நாளை இல்லை
என்றிருக்கும் உண்மைகளை நானறிவேன்

பேருலகம் காட்டுகின்ற பெருவிதி
யார் வந்து தடுத்தாலும் நில்லாது
இருந்தாலும் நாள் முழுக்க என்னில்
விருந்தாக வந்துதித்து எந்தன்
வழித்தடங்கள் முழுவதிலும் நிறைந்து
விழி போல் அனுதினமும் உடனிருந்த
துணையாள் நீத்துவிட்டாள் என்றவுடன்
அணையுடைத்து வழிகிறது கண்ணீர்

கரம் பிடித்த நாள் முதலாய்
பரம் பொருள்தான் எனக்களித்த
செல்வம் என்றெண்ணி வாழ்ந்தேன்
இல்வாழ்வை இன்பமுறக் களித்தேன்
சொல்லொன்னா துயர் நெருங்கி வந்த போதும
எல்லாம் சிறுதுரும்பாய் ஆனதப்போ
வள்ளுவர்க்கு வாய்த்த வாசுகி போல்
கள்ளமில்லா உள்ளத்தாளை நானடைந்தேன்

பெற்றெடுத்த பிள்ளைகளை கண்ணியமாய்
அற்புதமாய் வளர்த்தெடுத்த தாயாகி
உத்தமியாள் உயிர் துறந்து போய்விட்டாள்
பத்தினியின் வாழ்வு முற்றிற்று





படிப்பகம்

www.padippakam.com



பாவி நான் துணையிழந்து
ஆவி பதைத்து அழுகின்றேன்
காலனே கல்மனக் காரனே
மூலனே என்னுயிரை ஏன் பறித்தாய்

தூயவளே

தாய் நாட்டுக்கனவு பொய்யாகிப் போக
வெளி நாடு போய்ப் புகுந்தோம்
தாய் மண்ணில் மடிதலே மேல் என்றெண்ணி
வெளி நாட்டை நீ துறந்தாய் நீ
போக விடை பெறும் நேரத்தில் நானோ
கோபத்தில் முகம் சுழித்தேன்
பாகப் பிரிவினையை நான் சுமந்து
தேகம் உருகி தினமும் அழுதேன்
உனக்கு முன் நானிறத்தல்
வேண்டுமென நினைத்திருந்தேன்
எனக்கு முன் ஏன் உயிரை நீ துறந்தாய்
தொட்டு உன் கழுத்தில்
இட்ட தாலி மட்டும் மகள் கொண்டு
கொடுத்தாள் தரும்போது நீயில்லை
வான் வெளிக்குள் சென்று விட்டாய்
நெஞ்சம் நெருப்பாகிக் கொதித்தழுதேன்

போகுமிடமெல்லாம் ஒட்டியிருந்து பின்
சாகும் போது மட்டும் தனியே ஏன் சென்றாய்
பார்க்கும் இடமெல்லாம் உன்முகம்தான்
கேட்கும் ஒலி எல்லாம் உன் குரல்தான்
யாக்கை அழிந்து நான் போகும்வரை
பூக்கும் உன்னினைவு மறையாது



படிப்பகம்

www.padippakam.com





# மகன் லோறன்ஸ் அன்ரன் ஜெராட் [பாபு]

## மகன் புலம்பல்

யான் பெற்ற பெரும் பேற்றால் உன்
பொன்வயிற்றில் ஒரே மகனாய் பிறப்பானேன்
வான் பெற்ற பெரு மழை போல்
தேன் சொட்டாய் நீ உவந்தாய்
தாய் மனமே

வட்ட நிலா காட்டி வெண்சோறூட்டி
சுட்டு விரல் பிடித்து அகரம் பழக்கி
நெட்டென என்னை வளர வைத்து
விட்டுப் பிரிந்து போன மாயமென்ன
யாரறிவார்

கரு சுமந்த நாள் முதலாய்
சிறு துயரில் ஓடி வந்து உன்
திரு மடியில் முகம் புதைப்பேன்
ஒரு நொடியில் மனம் இளகும்
துரும்பாகும்

வாடி விழும் போதெல்லாம்
கூடி வர யாருமில்லை
ஓடி வந்து அணைப்பதற்கும்
தேடி நிதம் அழைப்பதற்கும் நீயின்றி
யார் எனக்கு

சாகும் வரை மண்ணில் ஒருயிராய்
போகும் இடமெல்லாம் நொடியும் பிரியாது
நீ இருப்பாய் என்றிருந்தேன் ஆனால்
தீ நெருப்பாய் மனம் எரிய
ஏன் பிரிந்தாய்

www.padippakam.com



தாய் மடியே தன்னலமற்ற தகவே
தேய்வில்லா வாழ்வளித்த திருவே
சேய் வாழ உரு கொடுத்த உருவே
நோய் கொண்டு போனதோ உன்னை
இடைநடுவில்

ஊன் அழிந்தாலும் உன் முகம் உயிர் மறவாது
வான் இடிந்தாலும் உன் பெயர் அழியாது
வீண் உயிர் நீங்கி போவதன் முன்னே உன்னை
காண்கின்ற ஆவலில் துடிக்குதுன்
மகன் மனம்



படிப்பகம்

www.padippakam.com





# மருமகள் அன்ரன் ஜெராட் மேரி ராணி

## மருமகள் புலம்பல்

தாயிழந்து தனித்திருந்த காலத்தில்
தாயிலும் சிறந்த பேரன்பு காட்டும்
மாறாத பாசத்தை உங்களில் கண்டேன்
மாமி உங்களை கடவுள் எனக்களித்தான்

மருமகள் என்றென்னை ஒதுக்கி விடாமல்
மறு மகள் என்றென்னை பார்த்தீர்கள்
துன்பம் நெருங்கி வந்த போதெல்லாம்
அன்பால் என்னை அரவணைத்தீர்கள்

உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு
கண்கள் ஆறாய் பெருகி ஓட
நெஞ்சம் துண்டாய் உடைந்து போனதே
தஞ்சம் எனக்கு இனி யாருண்டு

இரங்கி நாளும் உருகி அழவும்
கலங்கி நித்தம் உம்மை தொழவும்
எம்மை தனியே தவிக்க விட்டு
வெம்மை வெளிக்குள் போனதென்ன

கருவாய் மீண்டும் எம் குலத்தில்
உருவாய் நீங்கள் வந்துதித்து
காலம் முழுக்க வாழும் வரத்தை
மூலனிடம் தினமும் இறைஞ்சுகின்றேன்

www.padippakam.com





# பேத்தி அன்ரன் ஜெராட் திவேனா

## பேத்தியின் புலம்பல்

எங்கிருக்கிறீர்கள் அப்பம்மா
நீங்கள் வான் நோக்கிச் சென்றதாய்
சொல்லக் கேட்டேன்
மீண்டு வராத பயணமென்று
அறிந்தேன் எனில்
எப்போது உங்களை நான் காண்பது

என் பிஞ்சு விரல் பிடித்து
நடை பழக்கினீர்கள்
நிலா காட்டி சோறூட்டி தூங்கவைத்தீர்கள்
வித விதமாய் உணவுகள்
செய்து கொடுத்தீர்கள் இனி
இதை எனக்கு யார் செய்வார்

என் ஜடை பின்னி அழகு பார்த்ததும்
பல கதைகள் சொல்லித்தந்ததும்
வெளி நாட்டில் பிறந்தாலும்
தமிழ்ப் பாலை ஊட்டியதும்
கலாசாரம் மாறாது
கண்ணியமாய் வளர்த்ததுவும்

மழையில் நான் நனையாது
வீடு வரும் போதெல்லாம்
மழைத்துளிக்குள் நெளிந்து நெளிந்தா
நீ வந்தாய் என்று கிண்டலடிப்பதுவும்
என் கண்முன்னே இன்னும்
மறையாது நிற்கிறது
இத்தனையும் நான் மறக்க
இப்பிறப்புப் போதாது

சீண்டி விளையாட
சிறு குறும்பில் அழவைக்க
முந்தானை பிடித்து
சுற்றி சுற்றி ஓடி வர
முடியைக் கலைத்து கோபத்தில் ஆழ்த்த
எனக்கிங்கு யாருமில்லை
அப்பம்மா சீக்கிரம் நீ வந்துவிடு





படிப்பகம்

www.padippakam.com





# மகள் ஹூமினா சாந்தி விஜயசேகரன்

## அம்மா என்றோர் தெய்வம்

என் பாசமுள்ள தாயாருக்கு
எனது சிறிய அர்ப்பணம்!
அன்பின் மறுசொல் அம்மா!
அன்னையின் அரவணைப்பு
ஆண்டவனை நேரில் காட்டும்
அன்னையில்லாப் பிள்ளை
இவ்வுலகில் யாருமில்லை

ஆற்றுப்படுத்தி போற்றி புனைந்து
பூலோகமதில் வாழப்பழக்கியவள்!
தன்வயிறு பட்டினியாயினும்
என்வயிறு நிரம்பி வாழ்ந்தவள்!
அம்மாதான் எங்களின் ஆணிவேர்!

ஆயிரம் அர்த்தம் அச்சொல்லில்
அளவிலா இன்பம் அம்மாவால்
ஆண்டவனையும் கண்டேன் தாய்வடிவில்
அரவணைத்து அன்பு செலுத்தவென்று
அன்னையாக பிறப்பெடுத்தவள்.

புன்னகை மாறா புண்ணியவதி
புலோகத்தில் எல்லோருக்கும் மேலானவள்!
புலம் பெயர்ந்து வந்தும்
தளராமல் எனைக் காத்தவள்
ஓரமில்லா பாசம் தந்தவள்
பூங்கொடிக்கு கொம்பாக இருந்தவள்

வையகமீதினில் வாழ்வாங்கு வாழ
வழிசமைத்து தந்தவள் என் அம்மா!
விழி நீர் பெருக அம்மா உனை
தேடித்தவிக்கின்றேன்...அம்மா..........அம்மா....





படிப்பகம்

www.padippakam.com





# பெறா மக்கள் சார்பாக பீலிக்ஸ் [அநுரா]

## எங்கள் அன்பு அன்னை பிலோமினா லோறன்ஸிக்கு


பெறா மக்களின் கண்ணீர்க் காணிக்கை. எங்கள் அன்பின் அன்ரி பிலோமினா லோறன்ஸ் அவர்களே! நாங்கள் உங்களைப் பிரியவில்லை நீங்கள் இன்று எங்கள் அருகில் இல்லை என்றாலும் உங்களை நாங்கள் நேசிக்கிறோம். உங்களின் ஆத்மா காற்றோடு கலந்து விட்டாலும் உங்களின் நினைவுகள் எங்கள் மனதில் என்றென்றும் வழ்ந்து கொண்டே இருக்கும். எங்கள் அன்புத்தாயின் இழப்புக்குப் பின்பு அவரின் சகோதரியாகிய நீங்கள் எங்களுக்கு ஒரு தாயாக வாழ்ந்து கொண்டிருந்தது எங்களுக்கு பெரும் மன ஆறுதலாக இருந்தது. அந்த மன ஆறுதல் எங்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு விட்டது. அன்பு அன்னையே உங்களை ஊர் உலகம் பிலோமினா லோறன்ஸாக அறிந்தாலும் உங்கள் உறவினர்கள் மற்றும் உடன் பிறப்புக்களால் ராசாத்தி என்றே அழைக்கப்பட்டீர்கள். அதே போல் இவ்வுலகில் நீங்கள் வாழும் வரை ராசாத்தியாகவே வீற்றிருந்தீர்கள்.

நீங்கள் புகுந்து கொண்ட அரசியல் உலகில் மனத்தளர்ச்சியற்ற ராசாத்தியாக இருந்தீர்கள். எக்காலகட்டத்திலும் உங்கள் கொள்கையில் இருந்து மாறவோ பின்வாங்கவோ இல்லை. ஏழை எளியோர்க்கு தர்ம தானங்கள் செய்யும் உன்னத நோக்கில் உங்களை விட ஒரு ராசாத்தி இருக்க முடியாது.

பாசமாம் பாசத்தை அள்ளிக் கொட்டும் உலகிலும் நீங்களே ராசாத்தி. உங்கள் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் மீது எவ்வாறு தாய்ப்பாசத்தை அள்ளிப் பொழிவீர்களோ அதே அளவு எள்ளளவும் குறையாது எங்கள் மீதும் நீங்கள் செலுத்துவீர்கள். நாங்கள் உங்களை அன்ரி என்று அழைக்கும் போது அது உங்கள் காதில் அம்மா என்று ஒலிப்பதுபோல் எங்கள் மீது தூய்மையான தாய் பாசத்தையே பொழிவீர்கள். பாசம் என்று வரும்போது உங்களுக்கு என் குழந்தை மாற்றார் குழந்தை என்ற வேறு பாடே தோன்றாது. உங்கள் விருந்தோம்பல் பண்பு உங்களோடு பழகும் அனைவரையும் வியக்க வைக்கும். நீங்கள் இந்த உலகை விட்டுச் சென்றாலும் எங்கள் அனைவரினதும் உள்ளங்களில் ராசாத்தியாக வீற்றிருப்பீர்கள்.

www.padippakam.com





# இராஜதுரை குடும்பம், திரு திருமதி கார்த்திகேயன் குடும்பம், திரு திருமதி சுந்தரேசன் குடும்பம். [திருகோணமலை]

## அன்பு நிறைந்த மனித மாணிக்கம்

'உண்மை, தூய்மை, சுயநலமின்மை' என்று இந்த மூன்றும் எவனொருவனிடத்தில் இருக்கின்றதோ அவனை அழிக்கக்கூடிய சக்தி இந்த பிரபஞ்சத்திற்கே கிடையாது என்று சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கு அமைவாக இந்த பூவுலகில் வாழ்ந்தவர் தான் லோறன்ஸ் அன்ரி.

தன்னுடைய இளமைக் கால வாழ்க்கையில் மேடைப் பேச்சுக்களால் எல்லோரின் மனதையும் ஈர்த்தவர். அந்த வகையில் காந்தீய அமைப்பின் மூலம் எமக்கு அறிமுகமானவர். இவரின் மகள் எமக்கு உறவாக வந்தமையால் இவரது நட்பு எமக்கு உறவாக மாறியது.

காலங்கள் உருண்டோடியது. இவரும் இடம்பெயர்வு காரணமாக நாடு விட்டு சென்றார். நாடு விட்டுச்சென்றாலும் இவரது மனதில் தன் நாட்டிற்காக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் தன் குடும்பத்தாரையும் துறந்து தன் நாட்டிற்கே வந்து தன்னால் முடிந்த சேவைகளை செய்தார்.

இச்சேவைகளை செய்தாலும் இவர் எமது குடும்பத்தையும் மறக்கவில்லை. 'பிள்ளை அது கொண்டு வரவா இது செய்து கொண்டு வரவா' என்று கேட்பார். அதே வார்த்தையோடு பல தின்பண்டங்கள் செய்து கொண்டு வந்து எமது குடும்பத்தாரோடு அளவளாவிச் செல்வார்.

இப்படியாக அன்போடு வாழ்ந்தவர் தனக்கு வந்த நோயையும் மீறி தொண்டு செய்வதிலே காலம் கழித்து தான் நினைத்த மாதிரியே தனது மண்ணிலேயே உயிரையும் நீத்தார். இவரது ஆன்மா ஓர் உன்னத நிலையை அடைய வேண்டும் என்று எமது குடும்பத்தாரின் சார்பில் கடவுளை வேண்டுகின்றோம்.

திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லதே எண்ண வேண்டும்
(பாரதியார்)

www.padippakam.com





# ஒன்றுவிட்ட சகோதரன் மா சிவபாலவன்

## அமரர் திருமதி. பிலோமினா லோறன்ஸ் அவர்களின் இரங்கல் செய்தி

மனிதன் பிறந்த கணத்திலிருந்தே மரணத்தை நோக்கி பிரயாணம் செய்ய ஆரம்பித்து விடுகின்றான். அந்த பயணத்தின் போது இலட்சிய நோக்கோடும் கொள்கைப் பற்றுடனும் பயணிப்பவர்கள் தான் எமது மனங்களிலே மரணத்தை வென்று வாழ்கின்றார்கள். அமரர் பிலோமினா லோறன்ஸ் அவர்கள் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் தனது கல்வியை முடித்துக் கொண்டு கிளி நொச்சியில் உள்ள தனது சகோதரன் இராசரத்தினம் அவர்களின் வீட்டில் வந்து இருந்தார். அப்பொழுது நான் சிறுவனாக இருந்தேன். நாங்கள் அவரை 'இராசாத்தி அக்கா' என்று தான் அழைப்போம். பாடசாலை விட்டு வந்தவுடன் இராசாத்தி அக்கா, இராசாத்தி அக்கா என்று அவாரின் பின்னாலேயே சுற்றுவோம். அவவும் எங்களுக்கு பாடம் சொல்லித் தருவார். விதம் விதமான தீன்பண்டங்கள் தயாரித்து தருவார். மிகவும் மகிழ்ச்சிகரமாக எங்களை வைத்திருந்தார்.



அக்காலகட்டத்தில் தான் திரு.லோறன்ஸ் அவர்களை கிளிநொச்சி திரேசம்மாள் ஆலயத்தில் கரம் பிடித்தார். அந்த திருமண வைபவத்தில் சிறுவனாக நான் கலந்து கொண்டது இப்பொழுதும் எனக்கு ஞாபகமிருக்கின்றது. திருமணத்தின் பின்னர் திரு. லோறன்ஸிம் பிலோமினா அவர்களும் கிழக்கிலுள்ள திருமலை நகரிலே குடியேறினார்கள். அன்றிலிருந்து மரணிக்கும் வரையிலும் திருமலை யையும், கிழக்கிலங்கையையும் உயிரினும் மேலாக நேசித்தார். அதன் நிமித்தம் அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சமய, சமூக, அரசியல் பணிகளை ஆற்றியிருக்கின்றார். ஒரு காலகட்டத்தில் குறிப்பாக சிறிலங்காவில் யுத்த சூழல் உச்சம் பெற்றிருந்த வேளையில் தனது பிள்ளைகள், கணவருடன் பிரான்ஸில் சில காலம் வாழ்ந்த அவர் அவர்களை விட்டு விட்டு திருமலைக்குத் தனித்து வந்து தனிமையில் வாழ்ந்து மாவட்டத்திற்குப் பல்வேறு பணிகளை ஆற்றி அங்கேயே மரித்திருக்கின்றார் என்றால் அவருடைய கிழக்கின் பிரதேசப்பற்று எவ்வளவு ஆழமாக அவருடைய உள்ளத்தில் வேரூன்றி இருந்தது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அமரர். பிலோமினா அவர்கள் ஆத்மீகப் பணியில் மிகவும் நாட்டமுள்ளவர். தான் சார்ந்த சமய நெறியில் ஆழ்ந்த பற்றும், சிறந்த புலமையும் உள்ளவர். அத்துடன் தமிழ் பண்பாட்டிலும் பற்றுக்கொண்டவர்.

www.padippakam.com



சமய வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டு இறைபணி செய்யும் பொழுது சமய நெறிகளை மற்றவர்களுக்கு போதிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அப்பொழுது தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் இணைத்துப் போதித்து சமய வாழ்வுடன் தமிழ்ப் பண்பாடும் கலந்த ஆத்மீக வாழ்வு சிறந்தது என்ற உணர்வை மற்றவர்களுக்கு உணர்த்துவதில் வெற்றி கண்டார்.

இவருடைய அரசியல் வாழ்வைப் பொறுத்த வரையில் மிகவும் உணர்வுமயமானது. திருமலையில் இவர் குடியேறிய காலத்தில் 1958 இல் இலங்கையில் நடைபெற்ற இன வன்முறையின் உச்சகட்ட காலப்பகுதியாக இருந்தது. தமிழ் சிங்கள இன முரண்பாடு திருமலையில் கூர்மையடைந்து தமிழர்கள் தமது சொந்த இடங்களிலேயே பாதிப்படைந்திருந்தார்கள். இனவிகிதாசார பரம்பலிலும் பாரிய மாற்றம் மிகவேகமாக நிகழ்ந்து கொண்டிருந்த காலப்பகுதி. இக்கொடுமைகளில் இருந்து தனது இனம் மீட்சி பெறுவதற்கு சிறந்த அரசியல் வழிமுறை எதுவென்று சிந்தித்தார். பெரியார் தந்தை செல்வாவின் தலைமையில் இயங்கும் தமிழரசுக்கட்சி தான் உகந்தது என்ற முடிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து அரசியல் பணி செய்ய ஆரம்பித்தார். தமிழ்த் தேசிய இனம் அரசியல் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக மிகத் தீவிரமாக உழைத்தார். காலத்திற்கு காலம் ஏற்பட்ட அரசியல் போக்கிற்கு ஏற்ப தான் நம்பிக்கை வைத்த அரசியல் தலைமையுடன் இணைந்து தமிழ்த் தேசியத்தின் அரசியல் விடுதலைக்காக இறுதி மூச்சு வரை செயற்பட்டது தமிழ் தேசியத்தின் அரசியல் விடுதலையில் இவர் வைத்திருந்த ஆழமான பற்றுறுதியை எடுத்துக் காட்டுகின்றது.

சமூக வாழ்வைப் பொறுத்தமட்டில் அமரர். பிலோமினா லோறன்ஸ் அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாகத் தனித்துவமான முறையில் சிறந்த சேவையாற்றி உள்ளார். நலிந்தவர்களுக்கும், ஏழைகளிற்கும் வலிந்து சென்று உதவி செய்வார். குறிப்பாக மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆர்வத்துடன் உதவி செய்வது அவருக்கு மிகவும் பிடித்தமான செயற்பாடு.



மாவட்டத்தில் நலிந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய பங்களிப்பும், உதவியும் இன்று திருமலையில் சிறப்பான சேவையாகக் கருதப்படு கின்றது. குறிப்பாக எனது மகன் மருத்துவத்துறையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் பொழுது அவருக்கு ஒரு முறை அவரின் கற்றல் செயற்பாட்டிற்கு பண உதவி செய்தது இந் நேரத்தில் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. பல்வேறு மட்டங்களில் அவர் ஆற்றிய சமூகத்தொண்டு சிறப்பான சமூக சேவகி என்பதற்கான எடுத்துக்காட்டு.

அமரர் பிலோமினா லோறன்ஸ் அவர்கள் ஆத்மீக வாழ்விலும், சமூக வாழ்விலும் பதித்துச் சென்ற தடங்கள் மற்றவர்களிற்குச் சிறப்பான வழிகாட்டியாக அமை-வதுடன் எமது எல்லோருடைய மனங்களிலும் அவரை நிலையாக வாழவைக்கின்றது. இயற்கையின் நியதிப்படி அவர் மரணமடைந்தாலும் அவர் ஆற்றிய தொண்டுகளின் வடுக்கள் எமது உள்ளங்களிலே அவரை நித்தியமாக வாழவைத்துக் கொண்டிருக்கிறது. எனவே துயருறும் எமது உள்ளங்களைத் தேற்றிக்கொள்வோம். பிலோமினா அவர்களின் நிலையான ஆன்ம ஈடேற்றத்திற்கு இறைவனைப் பிரார்த்திப்போம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!



படிப்பகம்

www.padippakam.com





# கி டேவிற் குடும்பம்

தாய் என்னும் இரண்டெழுத்திற்கு
பெருமை சேர்க்க வந்த தாயாக
எம்முடன் வாழ்ந்த அந்த நாட்களை
எங்களால் என்றும் மறக்க முடியாது
எம் பிள்ளைகளை தன்பிள்ளைகளைப்
போல் அன்புடன்
வாரியணைத்த அந்த நாட்களை எண்ணி
எம் பிள்ளைகள் இன்று ஏங்கித்தவிக்கின்றனர்.

டேவிற் - யோகா

அப்பம்மா என்று அன்பாகக் கூவிக்கொண்டு வரும்போது அரவணைத்து அன்பு முத்தங்கள் பொழிந்த என் தெய்வமே! நீங்கள் எங்களுக்கு அருமையாக அழகாக சுட்டுத்தரும் அப்பத்தை நாம் ருசித்து சாப்பிட்டு விட்டு, நீங்கள் எங்கள் அப்பத்தின் அம்மாதான் என இரட்டை விளக்கம் சொல்லும் போது எம்மை விளையாட்டாக கடிந்துகொண்டு சிரித்து மகிழ்ந்த காலங்களை மறக்க முடியுமா!

உங்கள் அன்பு பேத்திகள் அபிநயா - ரம்மியா



உங்களுக்காக என்றும் பிரார்திக்கும் அன்பு உள்ளங்கள்!!!



படிப்பகம்

www.padippakam.com



# இறவாப் பெரு வாழ்வு

ப சுஜன்தன்

(இவரது 'நிலம் பிரிந்தவனின் கவிதை' என்ற கவிதை நூலுக்கு இவ்வருட இலங்கை சாகித்திய மண்டல விருது கிடைத்துள்ளது.)

பன் நெடுங் காலமாய் நல்ல
விண் தொடும் மாந்தர் ~ முன்பு
பிறந்து புகழில் தலை நிமிர்ந்து
சிறந்து உயர்ந்தது யாழ்

பெரிய மாதாங் கோயிலின் அருகே
அரிய தவங்கள் செய்து ~ மரியாள்
மண்ணில் மீண்டும் உதித்தது போல
விண்ணில் இருந்து வந்தார்



நல்ல குலத்தான் செபஸ்தியான் பிள்ளைக்கும்
செல்ல முத்து அருளம்மாவுக்கும் ~ மெல்ல
புன்னகை காட்டி பிறந்த மகவுக்கு
அன்னையிட்ட பெயர் பிலோமினா

வட்ட முகமும் வாடாத சிரிப்புமாய்
இட்ட இடமெல்லாம் நிறைந்து ~ பட்ட
துன்பம் பால் முகத்தில் கரைய
இன்பமாய் வளர்ந்தது குழந்தை

குழந்தை முகத்தை பாத்திருக்கும் காலத்தில்
குணத்தான் தந்தை இறக்க ~ குழைந்த
மனத்தால் சுற்றம் கலங்கித் தவித்தது
மழலையின் வாழ்வு இருண்டது

தந்தையை இழந்த பிலோமினா பின்பு
சொந்தங்கள் வீட்டில் வளர்ந்து ~ பந்தங்கள்
பெருக சிறகு விரித்து மண்ணில்
பெரியவள் ஆனார்

இளவாலை என்னும் இடத்திலே அமைந்த

www.padippakam.com



வளமான வாழ்வை அழிக்கும் ~ பழம்
கன்னியாஸ்திரிகள் விடுதியில் தங்கி
கல்வியை கற்று முடித்தார்

இறைபணி நெஞ்சில் குடி கொண்டதனால்
துறவிலே செல்ல முனைந்தார் ~ உறவினர்
ஆறுதல் கூறி தடுத்து அழைக்க
மீறமுடியாது கலங்கி வந்தாள்

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்பதில்
ஆயிரம் சுற்றம் கூடி ~ ஆராதித்து
இரு மனம் சேர லோறன்ஸ் என்பாரை
திருமணம் முடித்து வைத்தனர்

பாவை பிலோமினா திருமதி ஆனாள்
பார்ப்போர் புகழ மண்ணில் ~ பூவையாள்
இல்லறம் தன்னில் வாழத் தொடங்கினாள்
நல்லறம் எங்கும் நிறைந்தது

இரு மகள் மற்றும் ஒரு மகன் என்று
அருங்குழந்தைகள் பெற்றாள் ~ பெரும்
புகழ் கொண்டு பிள்ளைகள் சிறக்க

பகல் இரவாய் விழித்தாள்

அன்னை ஆகிய பிலோமினா லோறன்ஸ்
தன்னலம் அற்று சிந்தித்தாள் ~ திண்மை
மனத்தாள் தமிழினத்தின் துயரில் துடித்தாள்
மானத்தை தன்னில் வரித்தாள்

சமையல் அறையில் பெண்கள் அடங்கி
சுமையை சுமந்த காலத்தில் ~ இமைகள்
துடிக்க வீறு கொண்டு எழுந்து
படி தாண்டி வந்தாள்

தமிழ் அரசுக் கட்சி என்னும்
புகழ ணியில் சேர்ந்தார் ~ தழல்
நெருப்பாய் அரசியல் மேடை ஏறி
தெரு எல்லாம் முழங்கினார்

அள்ளிச் சொரியும் அனல் பறக்கும் பேச்சில்
அண்ட மெல்லாம் அதிர்ந்தது ~ துள்ளி

www.padippakam.com



குதித்தோடி வந்தனர் மக்கள் கூட்டம்
மதிக்கப் பட்டது ஓரினம்

கட்சியின் வெற்றிக்கு குடும்பமே உழைத்தது
உச்சிலே சூரியன் உதித்தது ~ மாட்சிமை
பெற்று விளங்கிய பெரும் தலைவர்கள்
பேதையை பெரிதும் மதித்தனர்

இளையோர் கூடி இயக்கங்கள் அமைத்தனர்
முளை விட்டது புதிய போர் ~ சளையாது
தானும் இயன்ற உதவிகள் புரிந்து
பூணும் விடுதலை ஊட்டினார்

வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தார்
நாட்டுப் பற்றை ஊட்டினார் ~ பூட்டிய
சிறைகளை உடைத்து தமிழர் விடுதலை
பறையை ஓங்கி அடித்தார்

ஆரசியல் ஆயுதம் இரண்டையும் தாண்டி
அகிம்சை போற்றும் வழியில் ~ அமைந்த
காந்தீயம் என்னும் கதவு திறந்தது
காரணமற்று கால் பதித்தார்



அற்ற சிறார்க்கு அருங் கல்வி
அழியா உடம்புக்கு உணவு ~ அரும்புக்கு
பாலர் பள்ளிகள் பல்கிப் பெருகின
பாலர்கள் கற்று உயர்ந்தனர்

குடும்பம் தாண்டி நாட்டுக் குழைத்து
இடும்பை அடைந்து பின் ~ கொடும்
சிறையில் பன்னிரு மாதங்கள் தனியே
அறைக்குள் வாடி துடித்தார்

தன்னினம் என்று அயராது உழைத்து
எண்ணில் கருமங்கள் செய்து ~ கண்ணீர்
சிந்தி சிறையில் இருந்து வாழ்வு
சலித்து வீடு திரும்பினார்

என்பணி கடன் செய்து கிடப்பதே
என்று உதித்த பயனாய் ~ அன்பே
வடிவான இறைவன் பால் தன்னை



படிப்பகம்

www.padippakam.com



அடியாள் ஆக்கி அர்ப்பணித்தார்

வறுமையில் வாடும் ஏழையர்க் கெல்லாம்
அறம் பல புரிந்தார் ~ பொறுமை
நிறைந்த குணத்தால் மதத்தொண்டு
செய்து முடித்தார்

அருமைக் குழந்தைகள் அழைப்பை ஏற்று
பெருமை நாட்டை விட்டு ~ அரவணைத்த
பிரான்ஸ் நாட்டுக்கு சென்று சுற்றம்
பிரியாது சிலகால் வாழ்ந்தார்

இனத்தில் விடிவை மனதில் கொண்டு
இரவும் பகலும் உழைத்து ~ சனத்தை
விட்டுப் பிரிய துளியும் மனமின்றி
நாட்டுக்கு மீண்டும் வந்தார்

அன்னிய மண்ணிலே தன்னுயிர் போகாது
என்னினிய மண்ணே ~ என்னை
அணைக்கும் என்று சுற்றம் துறந்து
துணை இன்றி வாழ்ந்தார்



உடல் நலம் குன்றி இருந்த போதும்
கடல் என்னும் துணிவால் ~ திடமுடன்
தூய்மையோடு இருந்து தொண்டுகள் செய்து
துரும்பாய் தினம் உழைத்தார்

மண்ணிலே பிறந்து மாதவங்கள் செய்து
மதிப்புடன் பிறருள் வாழ்ந்து ~ விண்ணிலே
உள்ள காலன் விரைது அழைக்க
உள்ளுயிர் துறந்து போனார்

இத்தனை காலம் மண்ணிலே வாழ்ந்தமைக்கு
அத்தனை தலைவரும் ஊரும் கூடி ~ சொத்தினை
பிரிய மனமின்றி அழுது முடித்து
அரிய உடலை புதைத்தனர்

கல்லாய் மனம் உறைய எல்லோரும்
பொல்லா விதியை நொந்து ~ நல்லாய்
உன் ஆத்மா இறை அடிசேர
பொன்னடியை வணங்குகின்றோம்



படிப்பகம்

www.padippakam.com





# நன்றி நவில்கின்றேன்!

நானிலம் போற்றிடும் நாயகியாய் நீ வீற்றிருந்து
நாவின் சக்தியாய் சரித்திரமாயினையோ!
நாளும் உன்முகம் தேடி நானும் துவழ்கின்றேன்
நாட்கள் நகர்ந்திடினும் நகரவில்லை உன்நினைப்பு!

உன்கருவின் கனவாகி உன்நினைவின் வடிவாகி
என் வளர்ப்பில் நீதந்தாய் எதுவரினும் எதிர்கொள்ள
மண்பற்றை மறந்திடாதே மகளெனவே செப்பிட்டாய்
உன் இலக்கியத்தின் கவித்துமாய் ஈன்றனையே பால்தந்து

தனக்கின்றிடினும் தர்மமே முதலென்பாய்
தர்மத்தின் வலிமைதனை தனதாக்கி ஆண்டிடினும்
ஜென்மத்தின் ஆயுளினை ஜெயிக்க வழி மறந்தனையோ
ஜெகத்தின் நினைவழியா நித்தியமாய் அடைந்தனையே!



பண்பென்னும் பார்புகழும் பழம் தமிழும் பயிற்றிட்டே
பரணிவெல்லும் பல கதைகள் காவியமாய் தந்துட்டே
அன்பென்னும் அன்னை நீ அரவணைத்தே வளர்த்திட்டாய்
அறநல்வழி செல்லென வித்திட்ட அன்னையே நன்றி நவில்கின்றேன்!

உன்புகழ்பேச உனை அறிந்தோர் வந்தனரம்மா!
உவகையை உனக்களித்தேன் உன் இறுதிவலமதிலே
வந்தவர்க்காய் நன்றிசொன்னேன் இப்பாவினூடே!
சென்றதற்காய் நாம் துவண்டோம் உன் பிரிவுடனே!

இரங்கல் பாவாய் இனியவர் பலரும் இனிதுனை நினைந்து
நடுகல் பதிவாய்நாற்றிசை அனைத்தும் நகல் பல ஏற்று
உரைகல் நீயென உயிர்பா பாடி உன் புகழினை நினைந்த
உள்ளங்களிற்காய் உன்பால் நினைந்தே நன்றி நவில்கின்றேன்.

www.padippakam.com



நூலின் வடிவமும் நுண்ணறி சிறப்பும்
நூற்றாண்டாய் வாழுமட்டும்
நூலிதன் நெய்தலினால் நூறாயிரம் பிரதியாய்
தட்டெழுத்தினில் கோப்பாக்கி தரமாக்கி தந்தவரே!

என்வரமாய் அமைந்த மூத்தோரே அருளானந்தரே!
கருவினில் சுமக்கா என்னவன் கவிஞன் சுஜந்தனே!
இருதலைமுறை ஈட்டிய இந்நடுகல் பதிவிது ~
பதிவல்ல இது ஓர் உயிர் மீள்பிறப்பு

அன்னை நீ, எனை ஓர் அன்னையாய் காணாப்போயினும்
கன்னிக்கவி ஈன்ற என் காளையரும் கன்னியரும் என் நினைவில் சுமந்தவரே
கௌசியும் சுமனும் கனதியாய் கைகொடுத்து நின்றனரே
காலத்தால் அன்னை நீ பிரிந்திடினும் காலத்தின் வெற்றிடமாய் நிரவி வென்றனரே

நூல் வலிது, எழுத்தழகு, கோப்பின் சிறப்பழகு
சொல் பெரிது, அதை ஈன்ற எண்ணக்கருத்தினால் உயிர்பெற்று
வில் நாணாய் விரைவுடனே வடிவமைத்து அதை ஈன்ற அச்சகத்தினருக்கும்!
கல்வெட்டை காவியமாய் களம் படைத்திட்ட ஜெயம் கொண்ட பாலனுக்கும்.!

சித்திரமாய் பாஸ்கரனால் என் அன்னை சிங்காரச் சிறப்புடனே
சிந்தனையாய் ஒலிபரப்பும் குரலினினால் வித்திட்ட வரைவதனிலே

சிதறாச்சிறப்பினிலே சீர்தூக்கி உனை நிறுத்தி சித்திரத்தின் சுவடுதனை
உனதாக்கிய கலைஞனே! உன்பால் நினைந்தே நன்றி நவில்கின்றேன்!

அரசியல் முரண்பாட்டினிலும், ஆளொரு வழிகொண்டிடினும்
அன்னையின் துயர்பகிர்வில் அரவணைத்து தேற்றி எனை
மனிதத்தின் மகத்துவத்தை மணியழைப்பில் உதிர்த்திட்ட
மங்கையர் இருவருக்காய் மனமுவர்ந்தே நன்றி நவில்கின்றேன்!

இணையங்கள் உன்துயர் பகிர்தனவே உறவுக்காய் ஏங்கிநின்று
இணையமுகங்களிலே உன்துயில்வும் உலவிடக்கண்டே
அணைந்த உன் ஆருயிரும் அணையா விளக்காய் உழன்றதுவே
அணைத்திற்குமாய்! அனைவர்க்குமாய்! அன்பினாய் ~ நன்றி நவில்கின்றேன்!

நன்றி நவில்கின்றேன்! நம் அன்னை வழிநடந்தே
சென்று வாவென வெண்ணிறஅமைதிக்காய் விடைகொடுத்து
வென்று நாம் தமிழர் வேற்றுமையில் ஒற்றுமையுடன்
என்று ஒன்றிணைந்து எம் மக்கள் துயர் தீர்ப்போம்!

அன்பு மகள் றஜனி என்னும் லொறன்ரீனா
(திருமதி. ஜென்னி ஜெயச்சந்திரன்)



படிப்பகம்

www.padippakam.com
















படிப்பகம்

www.padippakam.com












Designed & Printed at JR Print, London - Tel : 0044 208 503 6643

படிப்பகம்